# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 503 | 2000 ஜூலை | ரூபா 10.00


உள்ளே


- ஈ.பி.டீ.பி. குண்டர்கள் கொழும்பு அரசாங்கத்துக்கு சேவகம்: இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களுக்கு உயிராபத்து 2
- இலங்கை தொழிற் சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு பிரச்சாரத்தை கைவிட்டன 3
- இலங்கை உள்நாட்டு யுத்தத்தின் வரலாற்று வேர்கள் 4
- இருபத்தோராம் நூற்றாண்டின் நுழைவாயிலில் 5
- இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் கடும் வரட்சி: கோடிக் கணக்கானோரை தாக்கியுள்ளது 6
- இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் 8 – 9
- மார்க்சிச அனைத்துலகவாதம் எதிர் தீவிரவாத எதிர்ப்பு முன்னோக்கு 14 – 15





இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் மௌனம் காக்கிறது 10 — 11 பக்கம்


சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம்

# சோ.ச.க. அனைத்துக் கட்சி கூட்டத்தில் கலந்துகொள்ள மறுப்பு

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நிலவும் நிலைமை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக, மே 15ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சி கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சோசலிச சமத்துவக் கட்சிக்கும் அழைப்பு கிடைத்தது. அந்த அனைத்துக் கட்சி கலந்துரையாடலுக்கான அழைப்பை நிராகரித்து சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் விஜே டயஸ் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதம் இங்கு வெளியாகிறது.

மே 15, 2000

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு,

ஜனாதிபதி அம்மையார் அவர்களே,

வடக்கு கிழக்கு நிலைமை பற்றி கலந்துரையாட இன்று நடைபெறும் அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு சோசலிச சமத்துவக் கட்சியை அழைத்திருந்தீர்கள். உங்களது அழைப்பிற்கான பதிலாக இக்கூட்டத்தில் சோசலிச சமத்துவக் கட்சி கலந்து கொள்ளாது என்பதை நான் உங்களுக்கு அறியத் தருகின்றேன்.

அரசாங்கம் தனது கொள்கைக்கு எதிராக எந்த ஒரு எதிர்ப்பையும் காட்டமுடியாத பரந்த அவசரகால சட்ட விதிகளை, பிரகடனப்படுத்தியிருக்கையில் இக்கூட்டமானது ஒரு முழு மோசடியாகும். தற்போது நடைமுறையிலுள்ள தணிக்கையின் பரந்த தன்மை என்னவெனில் அரசாங்கத்திற்கெதிரான விமர்சனங்கள் அனைத்தும் ஒடுக்கப்படும் என்பதாகும்.

அது மட்டுமன்றி உங்கள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள பரந்த ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகள் அதன் உண்மையான நோக்கத்தை எடுத்துக்காட்டுகின்றது. அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு ‘சீல்’ குத்துவதும் அதன் கொள்கைகள் பற்றி நம்பிக்கையை உருவாக்குவதும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளபடி

நாடுமுழுவதும் உள்ள சிங்கள,

19ம் பக்கம் பார்க்க

சோசலிச சமத்துவக் கட்சியின் மே தினம்– 2000



சோ.ச.க. மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர் (மேலும் சில படங்கள் 11ம் பக்கத்தில;)

# இலங்கை அரசாங்கமும் எதிர்க் கட்சியும் யுத்தத்துக்கு பேச்சுவார்த்தை மூலம் முடிவுகாணும் ஏமாற்றங்கண்ட திட்டத்துக்கு இணக்கம்

டயன்னே ஸ்ரேகேஸ்
ஜூலை 12, 2000

இலங்கையின் ஆளும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் எதிர்க் கட்சியான யூ.என்.பி.யும் அரசியலமைப்பு சட்ட மாற்றங்கள் தொடர்பான தமது பேச்சுவார்த்தைகளை கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடித்துக் கொண்டன. நாட்டின் 17 வருடகால கசப்பான உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவு கட்டுவதற்கான அடிப்படையை ஸ்தாபிதம் செய்வதை இலக்காகக் கொண்ட ஒரு அதிகாரப் பகிர்வு பொதி சம்பந்தமாக தாம் "பரந்தளவிலான உடன்பாட்டை" எட்டியுள்ளதாக இவை பிரகடனம் செய்துள்ளன. இப்பிரேரணைகள், தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தனித் தமிழ் அரசுக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கென ஒரு இடைக்கால சபையை (Interim council) ஸ்தாபிதம் செய்யவும் பிராந்தியங்களுக்கு வரையறுக்கப்பட்ட சுயாட்சியையும் வழங்குகின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் "வரலாற்றுப் புகழ் மிக்கவை" என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆரவாரம் செய்துள்ளார். ஜனாதிபதி ஐரோப்பிய யூனியன் தூதுவர்களுக்கும் கொழும்பில் உள்ள ஐரோப்பிய கமிஷன் பிரதிநிதிகளுக்கும் செப்டம்பரில் அல்லது அக்டோபரில் இடம்பெற உள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னதாக இந்த அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக திங்கட்கிழமை தெரிவித்தார். குமாரதுங்க இந்த அதிகாரப் பகிர்வு திட்டத்தை தூக்கிப் பிடிக்கும் விதத்தில் அமெரிக்கா, ரூஷ்யா, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை இறுக்கமாக்கும் நடவடிக்கையின் ஒரு பாகமாக சிறப்பு தூதுவர் லக்ஷ்மன் ஜயக்கொடியை இந்திய அரசாங்கத்துக்கு விடயத்தை எடுத்து விளக்க புதுடில்லிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஆனால் இந்த உடன்பாடு- தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தைகளின் சாத்தியம் பற்றி கூற வேண்டியதில்லை- மிகவும் தற்காலிகமானதாக இருந்து கொண்டுள்ளது. குமாரதுங்கவே இதைச் சுட்டிக்காட்டியுள்ளார். "இதைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பயனளிக்க கூடிய விதத்தில் அமுல் செய்வதற்கும் முன்னதாக இன்னும் அதிகம் செய்யவேண்டியுள்ளது" என்றுள்ளார். யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதையிட்டு இன்னும் பெரிதும் அவதானமாக இருந்துகொண்டுள்ளார். கட்சிகள் "ஆரம்ப பேச்சுவார்த்தைகளை" மட்டுமே நிறைவு செய்து கொண்டுள்ளன. இப்பேச்சுவார்த்தைகள் "இப்போக்கின் முடிவு" ஆகிவிடாது எனத் தெரிவித்துள்ளார்.

பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் கடந்த 4 வாரங்களில் 10 நாட்கள் தீவிரமான கலந்துரையாடல்களுக்காக ஒன்று கூடினர். இக்கலந்துரையாடல்கள் கடந்த ஏப்பிரல் கடைப் பகுதியில் முக்கிய இராணுவத் தளமான ஆனையிறவு முகாம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து வடக்கில்- யாழ்ப்பாணக் குடாநாட்டில்- விடுதலைப் புலிகள் ஈட்டிய ஒரு தொகை இராணுவ வெற்றிகள் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ள நிலையில் இடம் பெற்றுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமாக இக்கட்சிகளுக்கு இடையே முன்னர் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் நீண்ட காலதாமதங்களை கொண்டிருந்தது.

அரசாங்கம், எதிர்க் கட்சி இரண்டும் ஒரு பேச்சுவார்த்தையின் மூலம் யுத்தத்துக்கு முடிவு கட்டுவதற்கான அடிப்படையை ஸ்தாபிதம் செய்யுமாறு கோரும் கணிசமான அனைத்துலக நெருக்குவாரங்களுக்கு உள்ளாகி இருந்தன. அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றிகள் பிராந்தியத்தின் வேறு பாகங்களில் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை தூண்டி விடுவதற்கான சாத்தியத்தையிட்டு கவலை கொண்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித் தமிழ் அரசுக்கான கோரிக்கையை நிராகரிக்கும் அதே வேளையில் பெரும் வல்லரசுகள் யுத்தத்துக்கு ஒரு முடிவு காணும் மத்தியஸ்தத்தில் ஈடுபடுவதில் இந்தியாவையும் நோர்வேயையும் கூட்டாக செயற்படுமாறு வேண்டிக் கொண்டுள்ளன.

பொதுஜன முன்னணிக்கும் யூ.என்.பி.க்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் கடந்த மாத இறுதியில் முற்றுப் பெற இருந்தன. இதன் போக்கு

7ம் பக்கம் பார்க்க

சிங்கள – தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க

துணை ஆசிரியர்: எஸ்.இராசேந்திரன்

பதிப்பாளர்: தீபால் ஜயசேகர

சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர்: விஜே டயஸ்

அலுவலகம்:

90. 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை,
கொழும்பு - 10
தொலைபேசி: 682220

### ஈ.பி.டீ.பி. குண்டர்கள் கொழும்பு அரசாங்கத்துக்கு சேவகம்:

# இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களுக்கு உயிராபத்து

நமது நிருபர்
மே 5, 2000

இலங்கையின் வட மாகாணத்தில் இருந்து கொண்டுள்ள சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்களுக்கு எதிரான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) யின் உடல்ரீதியான தாக்குதல்களும் பாரதூரமான அச்சுறுத்தல்களும், ஈ.பி.டீ.பி. தமிழ் மக்களிடையே பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு இருந்துவரும் எதிர்ப்பை நசுக்கும் அதன் ஒரு கைக்கூலிக் குண்டர் குழுவாகத் தொழிற்பட்டுக் கொண்டுள்ளதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

கடந்த மார்ச் 20ம் திகதி உள்ளூர் ஈ.பி.டீ.பி. அதிகாரிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் உள்ள ஊர்காவற்துறையில் உள்ள தமிழ் மீனவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் ஒரு கூட்டத்துக்கு வரும்படி அழைப்புவிடுத்தனர். இந்த ஈ.பி.டீ.பி., பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஒரு கூட்டாக இருந்து வருவதோடு உள்ளூராட்சி சபைகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுள்ளது. கொழும்பு அரசாங்கமும், இராணுவமும் விடுக்கும் கட்டளைகளை மக்கள் மீது திணிக்கும் நடவடிக்கையில் இது ஈடுபட்டுள்ளது. இதில் மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடிப்பதை தடுக்கும் கடும் கட்டளைகளும் அடங்கும். பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக் யுத்தம் நடாத்துவதாகக் கூறும் இராணுவத்துக்கு துணை போகிறது.

ஆனால் இத்தடவை மீனவர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும் இந்த அழைப்பைக் கணக்கெடுக்கவில்லை. அவர்கள் கடலுக்கு செல்வதன் மூலம் வாழ்க்கையை ஓட்டும் வருமானத்தை தடை செய்யும் விதத்தில் இராணுவத்தினர் விதித்துள்ள கட்டுப்பா்டுகளாலும், அடாவடித்தனங்களாலும் இனவாதக் கேலிக்கூத்துக்களாலும் வெறுப்பும் ஆத்திரமும் அடைந்திருந்தனர். அத்தோடு அந்தப் பிரதேசத்தை ஏதோ தமது சொந்த நிலமானித்துவ இராஜதானி போல் ஆட்சி நடாத்தும் ஈ.பி.டீ.பி. அதிகாரிகளின் நடவடிக்கைகளால் மக்கள் வெறுப்படைந்து போயுள்ளனர். இதனால் அவர்கள் இந்தக் கூட்டத்தை ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாகப் பகிஷ்கரித்தனர். அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் இராணுவத்தின் கை மேலோங்கி உள்ளது. கடற்படையின் துப்பாக்கிப் படகுகளால் மீனவர்களின் படகுகள் சேதமாக்கப்படுகின்றது அல்லது நாசமாக்கப்படுகின்றது. பாதுகாப்பு வலயங்களுள் அவர்களின் படகுகள் அத்துமீறி ஊடுருவிக் கொண்டுள்ளதாகக் கூறி பல மீனவர்கள் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளனர். பலாலி இராணுவ முகாமையும் விமானத் தளத்தையும் விஸ்தரிக்கும் பொருட்டு பல்லாயிரக் கணக்கான மீனவர் குடும்பங்கள் அவர்களின் வீடுகளில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

கிராமவாசிகள் ஈ.பி.டீ.பி.காரர் கூட்டிய இந்தக் கூட்டத்தின் தன்மையை நன்கு அறிந்திருந்தனர். இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு எதிர்த் தாக்குதலுக்கு தயார் செய்து வருகையில் ஈ.பி.டீ.பி.காரர்களிடம் புதிய மீன்பிடி எல்லைக் கட்டுப்பாட்டு விதிகளை ஊர்ஜிதம் செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டது. கடற்படையினர் தமது ரோந்துப் படகுகளின் நடமாட்டத்துக்கு கடற்பிராந்தியத்தை தடையற்றதாக கொண்டிருக்க விரும்பினர். இதனால் மீனவர்கள் தமது மீன்பிடியை மேலும் துண்டித்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்தில் கூட்டத்துக்கு எவரும் வருகை தராததால் ஈ.பி.டீ.பி. யின் முக்கிய புள்ளியும் ஊர்காவற்துறை பிரதேச சபைத் தலைவருமான என். மதனராஜா வெறிகொண்டு அலைந்துள்ளார். அவர் தனது ஆயுதம் தாங்கிய குண்டர் கும்பல்களை 'பிக்கப் றக்கு'களில் ஏற்றி, மக்களைப் பலாத்காரமாக கூட்டத்துக்கு இழுத்து வரும்படி அனுப்பி வைத்தார். மக்கள் மறுப்புத் தெரிவித்த இடங்களில் அவர்களை பலாத்காரமாகப் பிடித்து இழுத்து, வாகனங்களில் போட்டனர்.

இராணுவத் திணிப்பையும் அதன் கையாட்களான ஈ.பி.டீ.பி. யையும் எதிர்த்து ஒரு பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்ட சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் ஈ.பி.டீ.பி.யின் பட்டியலில் இருந்து கொண்டுள்ளனர். ஒரு ஆயுதம் தாங்கிய கும்பல் சோ.ச.க. அங்கத்தவரான ஆர்.சுதர்சனின் வீட்டுக்கு வந்தது. கூட்டத்தில் கலந்துகொள்ள அவர் மறுப்புத் தெரிவித்த வேளையில் அவரும் அவரின் ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் பலாத்காரமாக கூட்டத்துக்கு நடந்து செல்லத் தள்ளப்பட்டனர். மற்றொரு சோ.ச.க. ஆதரவாளர் அவர்களின் தாக்குதலில் இருந்து தப்பியோட முயன்றுள்ளார். அச்சமயம் இந்த ஈ.பி.டீ.பி. கும்பல் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளது.

## உறுதியான நிலைப்பாடு

ஈ.பி.டீ.பி. காரர்களின் எதிர்ப்பானது பொதுஜன முன்னணி அரசாங்கத்தினாலும் முன்னைய யூ.என்.பி. அரசாங்கத்தினாலும் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நடாத்தப்பட்டு வந்த இனவாத யுத்தத்துக்கு எதிராக தமிழ் மக்களின் உரிமைகளைக் காக்கும் சோ.ச.க. வின் உறுதியான நிலைப்பாடு காரணமாகவே தலையெடுத்துள்ளது. அதே சமயம் ஒரு சோசலிச முன்னோக்குக்கான சோ.ச.க.வின் போராட்டம் தமிழீழ விடுதலை புலிகளின் ஒரு பிரிவினை முதலாளித்துவக் குட்டியரசு முன் நோக்கை நேரடியாக ஊடறுத்துச் செல்கின்றது. எனவே தான் சோ.ச.க. அங்கத்தவர்கள் அரசாங்கத்தினதும் அரச இயந்திரத்தினதும் விடுதலைப் புலிகளதும் தாக்குதல்களுக்கு உள்ளாகினர். சுதர்சன் தனது சொந்த இடமான ஊர்காவற்துறைக்கு கடந்த ஆண்டு ஜூனிலேயே சென்றார். அதற்கு முன்னர் அவர் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தெற்கேயுள்ள கிளிநொச்சியில் இரண்டு மாதங்கள் விடுதலைப் புலிகளால் சிறை வைக்கப்பட்டு இருந்தார். சுதர்சனும் ஏனைய சோ.ச.க. அங்கத்தவர்களும் உலக சோசலிச வெப் தளத்தை (WSWS) மையமாகக் கொண்டு அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு எதிராக இடம் பெற்ற ஒரு உறுதியான அனைத்துலகப் பிரச்சார இயக்கத்தின் பின்னரே விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் உள்ளூர் ஈ.பி.டீ.பி. தலைவர் ஒரு சின்னத்தனமான முறையில் உடுத்திருந்த சாரத்தை தனது முழங்காலுக்கு மேல் உயர்த்திப் பிடித்த வண்ணம் (சண்டைக்கு தயாராகும் பாணியில்) சுதர்சனை சிறப்பாக கையாளப் பொறுக்கி எடுத்தார். ஊர்காவற்துறை பகுதியில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்தாது போனால் "முதலும் கடைசியுமான எச்சரிக்கை" இதுதான் என அவருக்குக் கூறப்பட்டது. சுதர்சனுக்கு உதவி செய்தால் அவரின் கால் அடித்து முறிக்கப்படும் என ஒரு சோ.ச.க. ஆதரவாளருக்குக் கூறப்பட்டது. மூன்றாவது நபர், கடலில் மீன்பிடித்து வாழ்க்கை நடாத்த அனுமதிக்க முடியாது என எச்சரிக்கப்பட்டார்.

இப்பிராந்தியத்தில் உள்ள உள்ளூர் கிராமவாசிகளுக்கு எதிரான இலங்கை இராணுவத்தின் அட்டூழியங்கள் பற்றி மீனவர்கள் சோ.ச.க.வின் உதவியோடு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிய முறைப்பாடுகளையிட்டு இந்த பிரதேச சபை தலைவர் குறிப்பாக கவலை கொண்டுள்ளார். ஈ.பி.டீ.பி. தலைவரால் சுதர்சனை பயமுறுத்தி பணியவைக்க முடியாது போனதும் அவர் மீனவர்கள் பக்கம் திரும்பினார். அந்தப் பகுதியில் தனது சாதனைகளைப் பற்றி ஜம்பம் அடித்துக் கொண்ட மதனராஜா மீனவர்களைப் பயமுறுத்துவதில் ஈடுபட்டார். சோ.ச.க. வினால் ஸ்தாபிக்கப்பட்ட கடற் தொழிலாளர் சங்கத்துக்கு தொடர்ந்து ஆதரவளிப்பவர்களின் மானியங்களை வெட்டப் போவதாக எச்சரிக்கை விடுத்ததோடு, அச்சங்கத்தின் தலைமை "உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்" எனவும் குறிப்பிட்டார்.

அவரது குற்றச்சாட்டு வீச்சுக்களைத் தொடர்ந்து, காலை 6.30 மணிக்கு (வழமையாக காலை 2 மணிக்கு) முதல் மீன்பிடிக்க எவரும் செல்லக் கூடாது எனவும் கடற்படை பிராந்தியத்தில் மீன்பிடிக்கக் கூடாது எனவும் தெரிவித்தார். "எனவேதான் நாம் உங்கள் அனைவரையும் ஒரு கலந்துரையாடலுக்காக இங்கு கூப்பிட்டோம். நீங்கள் இராணுவத்தின் உத்தரவுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இதில் இருந்து விலகிச் செல்வதை சகிக்க முடியாது" என அவர் கூச்சலிட்டார். பகல் நேர மீன்பிடியை காலை 6.30-11.30 மணிக்கும் இடையில் முடக்குவதானது தமது ஏழைக் குடும்பங்களின் உயிர்களைக் காக்கப் பல மணி நேரம் போராடுபவர்கள் மீது பெருந் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த முழுச் சம்பவங்களும் ஈ.பி.டீ.பி. ஒரு ஆயுதம் தாங்கிய கும்பல் என்ற உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. சோ.ச.க. அங்கத்தவர்களுக்கும் உள்ளூர் மீனவர்களுக்கும் எதிரான அப்பட்டமான பயமுறுத்தல்களும் காடைத்தனங்களும் பலத்தின் அடையாளம் அல்ல; அரசியல் பலவீனத்தின் இலட்சணங்கள். சாதாரண தமிழ் மக்களின் கண்களின் எதிரில் ஆழமாக ஒட்டி உறவாடும் ஈ.பி.டீ.பி. க்கு எதுவிதமான நிஜ அரசியல் அத்திவாரமும் கிடையாது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தினது உத்தியோக பூர்வமான அங்கீகாரத்துடனும் ஈ.பி.டீ.பி. அங்கத்தவர்களை துப்பாக்கியும் கையுமாக பகட்டாக வெளிப்படையாக திரிய அனுமதித்துள்ள இராணுவத்தின் ஆதரவுடனுமே அது உயிர்வாழ்ந்து கொண்டுள்ளது.

ஈ.பி.டீ.பி. அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து அது என்றுமே சாதாரண உழைக்கும் மக்களின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவம் செய்தது கிடையாது. உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொணரவும் இலங்கை அரசாங்கத்துக்கு தோள் கொடுக்கவும் இந்தியத் துருப்புக்களை வட-கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்புவதற்கான இந்திய- இலங்கை உடன்படிக்கை வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து ஈ.பி.டீ.பி. 1989ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இந்தியப் படைகள் அதிகரித்த விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோத நேரிட்டு, அது

19ம் பக்கம் பார்க்க

**அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்**

World Socialist Web Site
http://www.wsws.org
அமெரிக்கா:
http://www.socialequality.com
அவுஸ்திரேலியா:
http://www.workersnews.flex.com.au
பிரித்தானியா:
http://www.socialequality.org.uk
கனடா:
http://www.egalitesociale.com
ஜேர்மன்:
http://gleichheit.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொழிற் சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு பிரச்சாரத்தை கைவிட்டன

டயனே ஸ்ரேகெஸ்
ஜூன் 27, 2000

சம்பள உயர்வு கோரி 450,000 தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் நடாத்தி வந்த இரண்டு மணித்தியால வேலை பகிஷ்கரிப்பையும் மெதுவாக வேலை செய்யும் இயக்கத்தையும் இலங்கை பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் நிறுத்திக் கொண்டுள்ளன. தொழிலாளர்களின் முழு அளவிலான போராட்டம் அபிவிருத்தி காணும் ஒரு நிலைமை ஏற்பட்டு வந்த நிலையில் தொழிற் சங்கங்கள் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் ஜூன் 20ம் திகதி ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்களில் பலர் ஒரு பலமான நடவடிக்கையில் இறங்குவதன் அவசியத்தை வலியுறுத்தி வந்த நிலையில் தொழிற்சங்கத் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் போர் குணத்துக்கு விலங்கு மாட்டும் விதத்தில் ஜன் 11ம் திகதி வரையறுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொண்டனர்.

முதலாளிமார் சம்மேளனம், ஒரு சிறிய அளவிலான அடிப்படைச் சம்பள உயர்வுக்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இது இரண்டு வருட கால சம்பள உறைவையும் ஏற்படுத்தும். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் ரூபா 95/= ல் இருந்து ரூபா 101/= ஆக அதிகரிக்கும். இறப்பர் தோட்ட தொழிலாளர்கள் மூன்று ரூபா சம்பள அதிகரிப்பை மட்டுமே பெறுவர். (ரூபா 95/=ல் இருந்து ரூபா 98/=)

தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், தேயிலை, இறப்பர் விலை உயர்வு தொழிலாளரின் வேலை நாள் எண்ணிக்கையை பொறுத்து ரூபா 121/= ஆகவும் (தேயிலை தொழிலாளி) ரூபா 112/= ஆகவும் (இறப்பர் தொழிலாளி) அதிகரிக்கும். இந்த சம்பள அதிகரிப்புக்கள் தொழிற் சங்கத் தலைவர்கள் கோரியதைக் காட்டிலும் குறைவானது. இவர்கள் ஆரம்பத்தில் முன்வைத்த சம்பள உயர்வு தொகையை பல முறை அடிதலையாக மாற்றினர். ஆரம்பத்தில் தொழிற்சங்கங்கள் நாள் சம்பளமாக ரூபா 150/= கோரின. பின்னர் இது ரூபா 131/= க்கு வீழ்ச்சி கண்டு, இறுதியில் ரூபா 123= க்கு குழிபறிந்து போயிற்று.

மேலும் ஜூன் 2ம் திகதி இலங்கை மத்திய வங்கி இலங்கை ரூபாவை (சராசரியாக) இரண்டு வீதத்தினால் பணமதிப்பிறக்கம் செய்யத் தீர்மானம் செய்தது. இது அமெரிக்க டாலருடன் தொடர்புபட்ட விதத்தில் இடம்பெற்றது. இந்த மதிப்பிறக்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரிக்கும். இதனால் இந்த அற்ப சொற்பமான சம்பள அதிகரிப்பையும் அது வாயில் போட்டு விழுங்கிக் கொள்ளும்.

சில பருவ காலங்களில் தொழிலாளர்களுக்கு தினசரி வேலை கிடைப்பதில்லை. இதனால் அவர்களின் மாதாந்த வருமானம் ரூபா 2500/= க்கும் குறைவாக வீழ்ச்சியடைகிறது. சமீபத்தில் இடம்பெற்ற விலை அதிகரிப்புக்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தச் செலவீனங்களை நிதியீட்டம் செய்யவே இடம் பெற்றுள்ளது. இது இந்தத் தொழிலாளர்களை படு மோசமாகப் பாதித்துள்ளது. சிலர் உணவுச் செலவுகளையும் ஈடு செய்ய முடியாதவர்களாகவும், போஷாக்கின்மைக்கு ஆட்பட்டவர்களாகவும் உள்ளனர்.

தொழிற்சங்கத் தலைவர்கள் முதலாளிகளுடனும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துடனுமான எந்தவொரு மோதுதலையும் தவிர்த்துக் கொள்வதிலேயே பெரும் அக்கறை காட்டுகின்றனர். இவை யாழ்ப்பாணக் குடாநாட்டு நிலைமைகளால் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. பெரிதும் வரையறைக்குட்பட்ட சம்பள அதிகரிப்பு பிரச்சார இயக்கத்தின் போதும் தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைவர்களால் கீறப்பட்ட கோடுகளை தாண்டிச் செல்ல முயன்றுள்ளனர்.

முதலாளிமார் சம்மேளனத்துடன் ஆரம்பத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் மூலம் உடன்பாட்டுக்கு வரமுடியாது போனதால் தொழிற்சங்கங்கள் சம்பள அதிகரிப்பின் பேரிலும் 'நாட்டில் அமைதியும் சாந்தியும்' ஏற்படவும் பிரார்த்தனை இயக்கத்தை ஆரம்பித்தன. அவர்கள் தொழிலாளர்களை இரண்டு மணித்தியாலம் வேலை செய்வதை நிறுத்தும்படியும் கோவில்களில் பிரார்த்தனையில் ஈடுபடும்படியும் கோரினர். அதைத் தொடர்ந்து வேலைக்குத் திரும்பி, மெதுவாக வேலை செய்யும் இயக்கத்தை முன்னெடுக்கும்படி கோரினர். அத்தோடு இத்தொழிற்சங்கத் தலைவர்கள் அவசரகாலச் சட்ட விதிகளை சுட்டிக்காட்டி, நீண்ட தூரம் செல்ல வேண்டாம் எனவும் தொழிலாளர்களை எச்சரித்தனர்.

பொதுஜன முன்னணி அமைச்சரவை அங்கத்தவரான ஆறுமுகம் தொண்டமான் ஜூன் 12ம் திகதி தொழிலாளர்கள் மத்தியில் பேசுகையில்: நாட்டில் உள்ள நிலைமை காரணமாக நாம் வேலை நிறுத்தம் செய்ய முடியாது. அதனால் தான் நாம் இத்தகைய ஒரு இயக்கத்தை ஆரம்பித்தோம்" என்றார். அத்தோடு அவர் "நீங்கள் வேலைநிறுத்தங்களில் ஈடுபடக் கூடாது" எனவும் எச்சரித்தார்.

*தொழிலாளர்களின் முழு அளவிலான போராட்டம் அபிவிருத்தி காணும் ஒரு நிலைமை ஏற்பட்டு வந்த நிலையில் தொழிற் சங்கங்கள் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளன.*

இந்தப் பிரச்சார இயக்கத்தில் தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி (JPTUL), லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் (LJEWU) என்பனவும் கலந்து கொண்டன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் (CWC) ஸ்டாலினிச கம்யூனிஸ்டுக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சியை உள்ளடக்கிய தோட்ட தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பங்காளிகள். லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலானது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் முன்னர் பிரதி அமைச்சராக விளங்கிய பீ.சந்திரசேகரன் தலைமையிலான மலையகத் தொழிலாளர் முன்னணி இந்தப் பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவு வழங்க மறுத்துவிட்டது. இருப்பினும் அதன் பல அங்கத்தவர்கள் பிரச்சாரத்தில் பங்குகொண்டனர்.

தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துக்கு என்னதான் சேவகம் செய்பவையாக இருந்த போதிலும் தோட்ட முதலாளிகள் இந்தப் பிரச்சார இயக்கம் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். தொழிற்சங்கங்களுக்கு முதலாளிமார் சம்மேளனம் அனுப்பி வைத்த கடிதத்தில் பின்வருமாறு பிரகடனம் செய்திருந்தது: "அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் உத்தேச வழிபாட்டு பிரச்சாரம் சட்ட விரோதமானது. தோட்ட நிர்வாகம் சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரம் கொண்டுள்ளதை கவனத்தில் கொள்ளவும்" என்றது. தோட்ட நிர்வாகிகள் தொழிலாளர்களுக்கு எதிரான பயமுறுத்தல்களில் ஈடுபட்டனர். தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் பேசுபவர்கள். சில தோட்டங்களில் தோட்ட அதிகாரிகள் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு கதவடைப்புச் செய்தனர். ஏனைய தொழிலாளர்கள் அரை நாள் சம்பளமே வழங்கப்படும் என மிரட்டப்பட்டனர்.



பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் 19ம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் தென் இந்தியாவில்- தமிழ் நாட்டில்- இருந்து இலங்கைக்கு வலுக் கட்டாயமாக தருவிக்கப்பட்ட தொழிலாளர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பலர் இன்னமும் குட்டி லயன் அறைகளிலேயே- 12' நீளமும் அகலமும்- ஜீவிக்கின்றனர். இவை காலனித்துவ ஆட்சிக் காலத்தில் ஒரே வரிசையில் அமைக்கப்பட்டவை. இலாபம் வீழ்ச்சி காணும் நிலைமைக்கு முகம் கொடுத்துள்ள தோட்டக் கம்பனிகள் பெருமளவிலான வேலைச் சுமையை செய்யும்படி வேண்டுகின்றனர். இதன் மூலம் தமது உற்பத்திச் செலவைக் குறைக்க முயற்சிக்கின்றனர். முதலாளிகள் இங்குள்ள சம்பளம் இத்துறையில் போட்டியிடும், கென்யா, தென்ஆபிரிக்கா, இந்தியாவில் வழங்கப்படும் சம்பளத்தைக் காட்டிலும் அதிகமானது என வாதிடுகின்றனர். அத்தோடு முதலாளிகள் உற்பத்தி திறனை அதிகரிக்கவும் உழைப்புப் படையை குறைக்கவும் திட்டமிட்டு வருவதாகத் தெரிகின்றது. இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்படி 1999ல் தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானம் 15 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. ஏற்றுமதி விலைகள் 12 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 1998ல் ருஷ்யாவில் ஏற்பட்ட நிதி நெருக்கடி ஒரு முக்கிய காரணியாகும். இதனால் இலங்கை விற்பனைகள் பெருமளவு பாதிக்கப்பட்டன. உலகச் சந்தையில் இறப்பர், தெங்கு கைத்தொழில் பொருட்களும் நஷ்டம் அடைந்துள்ளன.

1972ல் தேசியமயமாக்கப்பட்ட பெருந்தோட்டக் கைத்தொழிலை 1996-97ல் பொதுஜன முன்னணி அரசாங்கம் தனியார்மயமாக்கியது. தனியாருடைமையின் கீழ் வேலைப் பளு ஏற்கனவே கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதனால் தொழிலாளர்களை பல எதிர்ப்புக்களிலும் வேலைநிறுத்தங்களிலும் ஈடுபடச் செய்தது.

தொழிற்சங்கத் தலைவர்களின் உதவி, தோட்ட முதலாளிமார் சம்பளத்தையும், சகிக்க முடியாத வாழ்க்கைத் தரத்தையும் கீழ்மட்டத்தில் வைத்திருப்பதைச் சாத்தியமாக்கின. உதாரணமாக 1998ல் தொழிலாளர்கள் ரூபா.150/= நாட் சம்பளம் கோரினர். ஆனால் தொழிற்சங்கங்களோ இந்தக் கோரிக்கையை ரூபா.115/= ஆக குறைத்தன. 600,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து பொதுஜன முன்னணி அரசாங்கம் இதில் தலையிட்டதோடு தொழிற்சங்கங்களை ரூபா.95/= க்கு இணங்கச் செய்தது. இது வெறும் ரூபா.12/= சம்பள அதிகரிப்பாகவே இருந்தது. கோபமடைந்த தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைவர்களை கண்டனம் செய்ததோடு வேலை நிறுத்தத்தை மேலும் நான்கு நாட்களுக்குத் தொடர்ந்தனர்.

உலக சோசலிச வலைத் தளத்துக்கு (WSWS) அளித்த பேட்டியில் தோட்டத் தொழிலாளர்கள் தாம் தொழிற்சங்கங்களின் பிரச்சாரத்தையிட்டு அதிருப்தி கொண்டுள்ளதாகத் தெரிவித்தனர். பென்மூர் தோட்டத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளி தெரிவித்ததாவது: "தொழிற்சங்கத் தலைவர்களின் கொள்கை சந்தர்ப்பவாதமாகும். அவர்கள் தோட்ட நிர்வாகத்துடன் இரண்டறக் கலந்து செயற்படுகின்றார்கள். சம்பள உயர்வு கிட்டுமா என நாம் அவர்களைக் கேட்ட போது அது ஒரு போராட்டம் எனத் தெரிவித்தனர்".

பண்டாரவளைக்கு சமீபமாக உள்ள எஸ்லபி தோட்டத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளி தோட்ட முதலாளிமாருக்கும், அரசாங்கத்துக்கும் எதிரான போராட்டத்தைத் தட்டிக்கழிக்கவே தொழிற்சங்கத் தலைவர்கள் பிரார்த்தனை இயக்கத்தில் ஈடுபட்டனர் என்றார்.

அட்டனுக்குச் சமீபமாகவுள்ள ஒரு தோட்டத் தொழிலாளி இன்றைய விலைவாசி உயர்வினால் ரூபா.200/= நாட்சம்பளம் கூட போதுமானது அல்ல எனக் கூறினார். சில வருடங்களுக்கு முன்னர் வாழ்க்கைச் செலவு சீராக்கல் கூட தொழிற்சங்கத் தலைவர்களின் அங்கீகாரத்துடன் நீக்கப்பட்டதை அவர் நினைவு கூர்ந்தார். "அந்த நாற்றம் கண்ட கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்தாகாது இருந்திருக்குமேயானால் தொழிலாளர்களின் சம்பளம், சுயமாக ரூபா.150/=க்கும் மேலாக அதிகரித்து இருக்கும்" என்றார். தொழிற்சங்கங்களின் ரூபா.22/= சம்பள அதிகரிப்பினால் தமது நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு விடாது என்பதே ஏனைய தொழிலாளர்களது நிலைப்பாடாகும். இந்தக் குறைந்த சம்பளத்தை தீர்மானிக்கும் முன்னர் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுடன் ஆலோசனை நடாத்தவில்லை எனவும் அவர்கள் முறைப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உள்நாட்டு யுத்தத்தின் வரலாற்று வேர்கள்

*இக்கட்டுரை இவ்வார இறுதியில் வெளிவரவுள்ள உலக சோசலிச வலைத் தள (WSWS) சஞ்சிகையின் ஆசிரியத் தலையங்கத்தில் இடம்பெறுகின்றது*

ஜூன் 12, 2000

கடந்து சென்ற வாரங்களில் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகள்(LTTE) தீவின் வட பாகத்தில் இலங்கை அரசாங்க இராணுவத்துக்கு ஒரு தொகை படுமோசமான இராணுவ தோல்விகளை ஏற்படுத்தினர். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான விரகி முக்கியத்துவம் வாய்ந்த இலக்காக உள்ள இலங்கையின் இரண்டாவது பெரும் நகரமான யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள இடங்களில் கடும் சண்டை இடம் பெற்றது. பெரிதும் முக்கியமான பல தளங்களை இழந்ததன் பின்னர் சுமார் 35000-40000க்கும் இடைப்பட்ட அரசாங்கப் படைகள், வெளியேறத் தரைப்பாதை இல்லாமல் சிக்குண்டு போய்க் கிடக்கின்றன.

யுத்தத்தை தமிழ், சிங்களத் தொழிலாளர்கள் ஒரே விதத்தில் எதிர்ப்பது வளர்ச்சி கண்டுவரும் ஒரு நிலைமையில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முழு நாட்டையும் ஒரு யுத்த நிலைமையில் இருத்தியுள்ளார். பரந்த அளவிலான அவசரகாலச் சட்ட விதிகள் அமுல் செய்யப்பட்டுள்ளன. இதில் ஆர்ப்பாட்டங்களையும் வேலைநிறுத்தங்களையும் தடை செய்தல், வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மீதான அரசியல் தணிக்கை, அதிகரித்து வரும் இராணுவ நெருக்கடிகளின் சுமைகளை தொழிலாளர் வர்க்கத்தின் தோளில் சுமத்துவது என்பவை அடங்கும்.

குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கம் அடியோடு செல்வாக்கிழந்து போயுள்ளதோடு அதிகரித்து வரும் சமூக அமைதியின்மைக்கும் முகம் கொடுத்துள்ளது. இது "இடதுசாரி" அரசியல் கட்சிகள் எனப்படுபவையின் தொடர்ச்சியான ஆதரவின் மூலமே உயிர் பிழைத்துள்ளது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பன கூட்டரசாங்கத்தின் ஒரு பாகமாகும். இவை தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து சம்பளம், சேவை நிலைமைகளுக்கான தொழிலாளர்களின் கைத்தொழில் நடவடிக்கையை நசுக்கியுள்ளதோடு குமாரதுங்கவின் ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளை கட்டிக் காக்கவும் வாக்குறுதியளித்துள்ளன.

பொதுவில் இன்றைய அறிவிலித்தனமான அரசியல் சூழ்நிலையில் இலங்கை அரசாங்கத்தின் நாசகரமான தோல்விகள், சிறப்பாக எதுவிதமான அனைத்துலக முக்கியத்துவமும் இல்லாத மற்றொரு வெறும் தலைப்புச் செய்தியாகவே பலருக்குத் தெரிகின்றது. அனைத்துலக வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு இலங்கைச் செய்திகளை வெளியிடுகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு அவற்றின் வரலாற்றுப் பின்னணியை பற்றிக் குறிப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்கின்றன.

மேலும் இன்றைய நிலைமைகள் ஒரு அரை நூற்றாண்டு காலமாக சித்திரவதைக்குள்ளான அரசியல் விளைவுகளின் ஒரு உபவிளைவாகும். யுத்தத்துக்கு (இரண்டாம் உலக யுத்தம்) பிந்திய சுதந்திரத்தில் இருந்து இரத்தம் தோய்ந்த உள்நாட்டு யுத்தத்துக்கு செல்லும் இலங்கையின் துன்பகரமான பயணம் ஒரு மோதுதலாகும். அது பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலி கொண்டுள்ளதோடு அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துக்கு அபூர்வமான அரசியல் முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது.

ஸ்ரீலங்கா (அல்லது அதன் முன்னைய பெயரான இலங்கை(Ceylon) இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றது. எவ்வாறெனினும் இலங்கையின் சிறப்பு முக்கியத்துவம் என்னவெனில் இது உலகில் அரசியல் ரீதியில் பெரிதும் முன்னேற்றமான தொழிலாளர் இயக்கத்தின் இல்லமாக விளங்கியது.

சுதந்திரத்துக்காகத் தள்ளப்பட்ட ஏனைய பின்தங்கிய நாடுகளில் நிலவிய நிலைமைகளில் இருந்து வேறுபட்ட முறையில், ஒரு நிஜமான புரட்சிகர சோசலிசக் கட்சி உருவாகியது. 1935ல் ஒரு தீவிரவாத ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்பாக ஸ்தாபிதம் செய்யப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சி(LSSP) தீவிரமான இடது திசையில் பயணம் செய்ததோடு, இரண்டாம் உலக யுத்தத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் இணைந்து கொண்ட ஸ்டாலினிஸ்டுகளையும் கட்சியில் இருந்து வெளியேற்றியது.

இலங்கை சோசலிச இயக்கத்தை ஒரு அகில இந்தியப் புரட்சிகர இயக்கத்தின் ஒரு இணைந்த பாகமாக மட்டுமே அபிவிருத்தி செய்யமுடியும் என்ற விளக்கத்தின் அடிப்படையில் 1940ல் லங்கா சமசமாஜக் கட்சி இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட்

---

*கூடிய பட்சம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தகவமைவுக்கு ஏற்ப அவர்கள் பீ.எல்.ஓ. தலைவர் யசீர் அரபாத்தின் பாதையில் நடைபயின்று வெள்ளை மாளிகை பசும்புற்தரையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் மன்றாடுவதை விரும்பலாம்.*

---

கட்சி(BLPI) யில் சேர்ந்தது. ட்ரொட்ஸ்கிச நான்காம் அகிலத்துடன் இணைந்து கொண்டதன் மூலம் லங்கா சமசமாஜக் கட்சி ஸ்டாலினிஸ்டுகளிடம் இருந்து பரந்தளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத் தலைமையை தன்பிடிக்குள் கொணர்ந்ததோடு, தொழிலாளர் வர்க்கத்தின் சிறந்த மூலகங்களையும் புத்திஜீவிகளையும் சோசலிச அனைத்துலகவாதத்துக்கு வெற்றி கொண்டது.

ஒரு அபூர்வமானதும் பலம்வாய்ந்ததுமான பாரம்பரியம் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. தொழிலாளர் வர்க்க இயக்கம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்துக்கு அனைத்துலக வர்க்கப் போராட்டத்தை அடிப்படையாகக் கொள்ளும்படி போதிக்கப்பட்டது. அத்தோடு இதன் மூலம் தேசிய முதலாளித்துவத்தின் நடிப்புக்களை நோக்கும்படியும் கல்வியறிவூட்டப்பட்டது. தமிழ்-சிங்கள ஆளும் பிரமுகர்களின் அபிலாசைகளுக்கு எதிராக இது சகல வகையறாவைச் சேர்ந்த இனவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் எதிர்த்து நின்றது.

1948ல் இலங்கை முதலாளி வர்க்கம் தொழிலாளர் வர்க்கத்திடையே -சிங்களப் பெரும்பான்மையினருக்கும் தமிழ் சிறுபான்மையினருக்கும் இடையே- பிளவுகளை ஏற்படுத்துவதில் ஈடுபட்டது. இதன் மூலம் தமது புதிய அரசை இனவாத அடிப்படையில் நிலை நிறுத்தியது. பிரித்தானியரால் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட பெருமளவிலான மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை இரத்துச் செய்யும் ஒரு பிரஜா உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் இருந்த தமிழ்த் தலைவர்கள் இதை பூரணமாக அங்கீகரித்த அதே வேளையில் லங்கா சமசமாஜக் கட்சி(LSSP) தலைவர் கொல்வின் ஆர்.டி.சில்வா "குடியுரிமைக்கான ஆரம்ப அடிப்படைக் கொள்கையாக தலைமுறைக் கொள்கையை" கடைப்பிடிப்பதை வன்மையாகக் கண்டனம் செய்தார். நாட்டை "இனத்துடன் சமவயது கொண்டவனாக" செய்வது பிற்போக்குக்கு மட்டுமே சேவகம் செய்யும் என அவர் எச்சரித்தார்.



*இந்தியாவில் மண்டபம் அகதி முகாமின் நுழைவாயிலில் இலங்கை அகதிகள்*

முக்கிய போராட்டங்களுக்கு தலைமை தாங்கியதன் மூலமும் பாராளுமன்றத்தில் பல ஆசனங்களை வெற்றிகொண்டதன் மூலமும் இலங்கை ட்ரொட்ஸ்கிஸ்டுகள் தீவின் தொழிலாளர் வர்க்கத்திடையேயும் ஒடுக்கப்படும் மக்களிடையேயும் ஒரு பலம் வாய்ந்த அரசியல் சக்தியாகியது. ஆனால் ஒரு சில வருடகாலத்தில் அவர்கள் தமது முன்னோடிகளான ஜேர்மன் சமூக ஜனநாயகம் பயணம் செய்த பாதையில் இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் செல்லும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. பிரித்தானியாவாலும் இலங்கை முதலாளி வர்க்கத்தினாலும் போடப்பட்ட பிற்போக்கு அரச அத்திவாரத்தை ஆரம்பத்தில் எதிர்த்த ல.ச.ச.க. (LSSP) இதற்கு இயைந்து போகத் தொடங்கியது.

ல.ச.ச.க. வின் அரசியல் சீரழிவானது திட்டவட்டமான அனைத்துலக நிலைமைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. அது ஒரு அனைத்துலகப் போக்கின் வளர்ச்சிக்கும் பலத்துக்கும் பெரிதும் அசாத்தியமான ஒன்றாகியது. சோவியத் யூனியனில்(USSR) ஸ்டாலினிசம் மேலாதிக்கம் செலுத்தியமையும் ரூஷ்யப் புரட்சியையும் சோசலிசத்தையும் அது பிரதிநிதித்துவம் செய்வதாக கூறும் பொய்யைப் பரப்புவதற்கு அதிகாரத்துவம் கொண்டிருந்த வல்லமையும் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தை தனிமைப்படுத்துவதற்குத் துணைபோயின. மேலும் உலகளாவிய ரீதியில் ஸ்டாலினிசத்தின் பிரமாண்டமான காட்டிக்கொடுப்புக்களால் யுத்தத்தை தொடர்ந்து முதலாளித்துவ ஸ்திரப்பாடு ஏற்பட்டது. இதனால் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் புரட்சிகர எழுச்சிகள் பின்வாங்க நேரிட்டது.

இத்தகைய ஒரு நிலைமையிலேயே நான்காம் அகிலத்தினுள் (Fourth International) ஒரு ஆழமான அரசியல், கோட்பாட்டு நெருக்கடி தோன்றியது. ஐரோப்பாவில் நான்காம் அகிலத்தின் முன்னணி பேர்வழிகளாக விளங்கிய மைக்கேல் பப்லோ, ஏர்ணஸ்ட் மண்டேலின் தலைமையிலான ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு மார்க்சிச அனைத்துலக வாதத்தின் அடிப்படை அம்சங்களை -தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரம், முதலாளித்துவ, மத்தியதர வர்க்க கட்சிகளில் இருந்து அரசியல் சுயாதீனத்தை ஸ்தாபிதம் செய்வதன் அவசியம், வேலைத்திட்ட அடிப்படைக் கொள்கைகளையும் ஸ்டாலினிசத்துக்கும் சமூக ஜனநாயகத்துக்கும் எதிரான போராட்டத்தின் வரலாற்றுப் படிப்பினைகள்- நிராகரித்துவிட்டு ஸ்டாலினிசத்தினதும் சமூக ஜனநாயகத்தினதும் முதலாளித்துவத் தேசியவாதத்தினதும் வெளிப்படையான வெற்றிகளுக்கு இயைந்து போகத் தொடங்கியது.

லங்கா சமசமாஜக் கட்சியின் தேசியவாத சீரழிவு, அதைத் தொடர்ந்து இடம்பெற இருந்த பயங்கரமான நிகழ்வுகளுக்கு சைகை காட்டியது. 1964ல் அது அதனது மாபெரும் காட்டிக் கொடுப்பை அமுல் செய்தது. திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டதன் மூலம் ட்ரொட்ஸ்கிசத்துடனான அதனது பிளவைப் பூர்த்தி செய்து கொண்டது.

இரண்டாவது கூட்டரசாங்கத்தில் ஒரு அங்கத்தவர் என்ற விதத்தில் அது 1971ல் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஒரு மாஓ வாத ஜே.வி.பி.யின் தலைமையில் இடம்பெற்ற இளைஞர் கிளர்ச்சியை வன்முறை மூலம் ஒடுக்கித் தள்ளுவதில் பங்கு கொண்டது. இந்த ஜே.வி.பி. வேலையற்ற இளைஞர்கள், விவசாய இளைஞர்களின் தீவிரவாத தட்டினரை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. சுமார் 10,000 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஆனால் ல.ச.ச.க.வின் அவமானம் நிறைந்த அத்தியாயம், அது சி.ல.சு.க. வுடன் சேர்ந்து சிங்கள சோவினிசத்தை உள்ளடக்கி திருத்தம் செய்யப்பட்ட ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை 1972ல் வரைந்ததுடன் ஆரம்பமாகியது. இத்துடன் சமசமாஜக் கட்சி நாற்றம் கண்டது. இந்த அரசியலமைப்புச் சட்டம் சிங்களத்தை அரச மொழியாகவும் பௌத்தத்தை அரச மதமாகவும் ஊர்ஜிதம் செய்தது.

கால ஓட்டத்தில் இந்த அனுபவங்களின் படிப்பினைகள் பெரிதும் பிரசித்தமாகாது போனதால் அவை பெரிதும் கூர்மை அடையாது இருந்து கொண்டுள்ளன.

படிக்கட்டுக்களில் ஏறி மேல் நோக்கிச் சென்ற காலப் பகுதியில் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டில் அவர் போராடிய மூலோபாயப் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தில் சிங்கள- தமிழ் வெகுஜனங்களை ஐக்கியப்படுத்தப் போராடினர். ல.ச.ச.க. இந்த முன்நோக்கினை நிராகரித்தமை முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்தில் தேசிய முதலாளி வர்க்கத்துக்கு அடிபணிந்து போவது ஏககாலத்தில் இடம் பெற்றது. இதன் விளைவாக தமிழ் தொழிலாளர்களும் மத்தியதர வர்க்கத்தில் ஒரு பகுதியினரும் தம்மிடையே முதலாளித்துவ தேசியவாதப் போக்குகள் வளர்ச்சி பெற உதவும் விதத்தில் ஆழமான அவநம்பிக்கைக்கு உள்ளாகினர்.

சிங்கள, தமிழ் தொழிலாளர்களதும் கிராமப்புற மக்களதும் ஐக்கியத்தின் அடிப்படையிலான ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் தாக்கிப் பிடிக்கும் தன்மையில் கொண்டிருந்த நம்பிக்கை, ஒரு தமிழர் மட்டும் இயக்கத்தினாலும் தனித் தமிழ் அரசின் சிருஷ்டி முன்நோக்கினாலும் பதிலீடு செய்யப்பட்டது. இது உலகம் பூராவும் அதிகரித்த விதத்தில் புதிய பாணியாகி வந்த ஒரு போக்கின் பாகமாக விளங்கியது. தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான

18ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தோராம் நூற்றாண்டின் நுழைவாயிலில்

*நான்காம் அகிலத்தின் ஜேர்மன் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியின் வெளியீடான கிளைஹைற்றின் (சமத்துவம்) ஜனவரி/பெப்ரவரி இதழில் வெளிவந்த ஆசிரியர்த் தலையங்கம்*

பீட்டர் சுவாட்ஸ்
ஜனவரி 18, 2000

நிறைவு விழாக்களைப் பொறுத்தவரை மறுப்பதற்கு இடமின்றி, ஏதோ ஒரு தற்செயல் பொருத்தம் இருக்கின்றது. வரலாற்றின் போக்கு, கிரிகோரியன் ஆண்டு கணிப்பேட்டுடன் (13-ம் கிரிகரி பாப்பாண்டவர் 1582-ல் திருத்தியமைத்த) ஒரு நிலைப்படுவதில்லை. இருப்பினும் நூற்றாண்டின் முடிவானது, திரும்பிப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தருகின்றது- மற்றும் எதிர்காலத்தைப் பற்றிப் பார்க்கவும் தருணத்தை அளிக்கின்றது. இருபதாம் நூற்றாண்டு எப்படி மதிப்பிடப்பட வேண்டும்? அதன் வரலாற்று முக்கியத்துவம் என்ன? வரும் இருபத்தோராம் நூற்றாண்டிடம் இருந்து எதை எதிர்பார்க்க முடியும்? பத்தொன்பதாம் நூற்றாண்டு, இருபதாம் நூற்றாண்டிற்கு மாறிய பொழுது வாழ்ந்தவர்கள், அது தன்னம்பிக்கையையும் விழிப்புணர்ச்சி மனப்பான்மையையும் கொண்டிருந்ததாக மனதுடன் கூறியுள்ளனர். அறிவியற் துறையில் ஒரு சகாப்தத்தை உருவாக்கும் கண்டுபிடிப்புகள் அதற்கு முன்னையதின் இடத்தைக் கைக்கொண்டு முன்னேறிச் சென்றது. கலாச்சாரத் துறையில் - இசை, ஓவியம், இலக்கியம் மற்றும் அண்மையில் பிறந்த இயங்கும் படக்காட்சிகள் என்பனவற்றில் ஒரு புதிய புனைவு மற்றைய புதிய புனைவை உடனடியாகப் பின் தொடர்ந்தது.

தந்தியும், மேலும் ஆற்றல் மிக்க போக்குவரத்து முறைகளும் தூரங்களை குறைத்தன. மனிதன் புதிதாகப் புனைந்து புதியனவற்றை உருவாக்கும் ஆற்றலுக்கும்,. கண்டுபிடிக்கும் ஆர்வ எழுச்சிக்கும் எல்லைகளே இல்லாதது போல் இருந்தது. இவற்றிற்கு மகுடம் சூட்டியது போல, தொழிலாளர் இயக்கமானது நம்பிக்கையும், தன்னம்பிக்கை கொண்டதாகவும் இருந்தது. இது முன்னணி மார்க்சிச தத்துவ அறிஞரான ஃபிரான்ஸ் மெஹ்ரிங்கை ''பத்தொன்பதாம் நூற்றாண்டு நம்பிக்கையானதாக இருந்தது போல, இருபதாம் நூற்றாண்டு நிறைவுறும் நூற்றாண்டாக இருக்கும்," எனக் கூறச் செய்தது.

இருபதாம் நூற்றாண்டு முடிவுற்றுள்ளது. ஆனால் இந்த விழிப்புணர்வு மனப்பான்மையில் எதுவும் மிச்சமாக இல்லை. பிரமாண்டமான செலவுகளுடனும், பெரும் குவியல் வெடிமருந்துகளுடனும் வேடிக்கைகளுடனுமான நம்பிக்கையின் ஆயிரம் ஆண்டுகளின் நிறைவு விழாக்கள் அறிகுறிகள் அல்ல, ஆனால் உளவியல், உணர்வுகளை அடக்க எடுத்த முயற்சிகளின் வடிவமாகும். ஒழுக்க நெறிக்கு விடுத்த அறை கூவலையும், எல்லோரும் அறிந்தவற்றை எடுத்துக் கூறுவதையும் தவிர, புதுவருடத்தின் வருகைக்காக நடத்திய அரசியல் உரைகள் எதிர்காலத்திற்கான உத்தரவாதங்கள் சிலவற்றைத்தான் கொண்டிருந்தன.

சுதந்திரம், சமாதானம், தனிப்பட்ட பொறுப்பு மற்றும் இறுதியாக ஆனால் எந்த விதத்திலும் குறைவாக அல்லாது தனியுடமை என்பன பற்றி மிக உயர்வாகப் புகழ்பாடும் பேச்சுகளாகத்தான் புத்தாண்டு சொற்பொழிவுகள் இருந்தன. ஆனால் மிகவும் பரவலாக உள்ள சமூக இல்லாமை மற்றும் ஏதும் நிச்சயமற்ற நிலைமைகள் மத்தியில் இவை காலவதியாகி உக்கிப்போனவையாக எல்லோர் காதுகளிலும் ஒலித்தன. "கண்களை மூடிக் கொண்டு எப்படியும் முடித்துவிடு" என்று பின்னணியில் ஒலிப்பதை மிகவும் துல்லியமாகக் கேட்க முடிந்தது. அதாவது எப்படிச் சாதிப்பது என்று திட்டவட்டமாக எதுவும் தெரியாது ஒரு வேளை மீண்டும் எப்படியோ சாதித்துவிடலாம் என்ற நம்பிக்கை வெளிப்பட்டது.

## நம்பிக்கையீனம்

அண்மையில் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றிய கட்டுரை ஒன்றை டைய்ம்லர் பென்ஸ் கார் கம்பெனியின் முன்னாள் தலைவர் எட்ஸாட் ரொயிட்டர் எழுதியுள்ளார். "நிற்கதியாக நிற்கும் மந்திரவாதியின் பயிற்சியாளன்" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை, மேல் தட்டுக்களின் பிரதிநிதிகளுள் கூடிய சிந்தனை ஆற்றல், படைத்தவர்களை வேதனைக்குள்ளாக்கி வரும் அச்சங்களைத் தெளிவுபடுத்தியுள்ளது. 'டிசைற்' பத்திரிகையில் டிசம்பர் 9-ம் தேதி எழுதுகையில் "ஒவ்வொரு நபரும் தான் விரும்புவதை அடைய நிரந்தர வேலை, முதியோர் பாதுகாப்பு, பெற்ற குழந்தைகளுக்கு ஒரு நல்லகல்வி, ஒருவரின் தலைக்கு மேலாக ஒரு தரமான கூரை மற்றும் சுகாதாரமான சுற்றாடல் என்பனவற்றை அடைவதென்பது இன்று ஒருவரின் கைகளுக்குட்படாது அகன்றுவிட்டது. இதோடு சேர்ந்து ஜனநாயக நிறுவனங்கள் பற்றி நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. 150 வருடங்களுக்கு முன்னர் மார்க்சும் ஏங்கெல்சும் அவர்களது *கம்யூனிஸ்ட் அறிக்கையில்* குறி தவறாது சரியாகக் கூறிவிட்டார்கள் என்று எண்ணற்ற எழுத்தாளர்கள் எண்ணிப் பார்க்கின்றார்கள் என்பது அதிசயப்படக் கூடியதொன்றா?

ஆனால் இதிலிருந்து வெளியேற வழி ஏது? சமுதாயத்தைக் கட்டுப்படுத்தி அதை மேன்மைப்படுத்த முடியும் என்று நூறு வருடங்களிற்கு முன்னர் எவ்வளவு நம்பிக்கையுடன் ஃபிரான்ஸ் மெஹ்ரிங் எடுத்துக் கூறிய அந்தப் பரந்து பட்டிருந்த நம்பிக்கையில் மிக அற்ப அளவு நம்பிக்கைதான் இன்று எஞ்சி இருக்கின்றது. சோவியத் ஒன்றியம் ஸ்ராலினிச சீரழிவினால் இறுதியில் பொறிந்ததுடன், ஒவ்வொரு சமூக உயர்கனவும் இகழ்ச்சிக்கு என்றென்றும் உள்ளாக்கப்பட்டுள்ளது என்ற கருத்து குறிப்பாக புத்திஜீவிகள் வட்டாரங்களிலும், "இடதுசாரிகள்" என்று கூறப்படுபவர்களின் அணிகளினுள்ளும் ஆழமாய் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

ஜனநாயக சோசலிசக் கட்சியின் (ஜேர்மனி) முன்னணி தத்துவவாதியான அண்டிரே பிரேயின் பங்களிப்பு ஒன்றில் கடந்த பிப்ரவரி மாதத்தில் ஜெர்மன் பழமை பற்றாளர் பத்திரிகையான *பிராங் போட்டர் அல்கெமைய்னர் சைட்டுங்* பத்திரிகையில் எழுதியிருப்பது இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். பிரே ஸ்ராலினிசத்திற்கான காரணிகள் எவை என்பது பற்றி எழுதினார். அப்பொழுது அவர், "எவ்வளவு தான் முரண்பட்டதாக அது இருந்த பொழுதும் அரச சோசலிச சர்வாதிகாரத்திற்கான ஆரம்பப் புள்ளி மனித நேய தொலை நோக்கு எவ்வகையிலும் குறைவானதாக இருக்கவில்லை. ஏனென்றால் அது ஒரு புறம் தனி நபர்களை, சமூக வர்க்கங்களை, அரசியல் சக்திகளை, பொருளாதாரத்தை மற்றும் கலாச்சாரத்தை ஒரு உன்னத கனவைச் செயற்படுத்துவதற்காக கீழ்படியச் செய்கின்றது. மறுபுறம் ஒத்திசைவான, முரண்பாடுகள் அற்று சுதந்திரமான, வேறுபாடுகள் இல்லாத சமுதாயம் ஒன்றிற்கும் முற்று முழுதாக வேறுபட்ட சமூக மற்றும் தனி நபரின் வளர்ச்சிக்கும் இடையில் உள்ள தீர்க்க முடியாத முரண்பாடு, முழு சமுதாயத்தின் மேல் முழுமையான அதிகாரத்தைச் செலுத்தாது கம்யூனிச ஆட்சியை என்றென்றும் பேணிக்காக்க முடியாமற் போனமைக்கு ஒரு காரணமாகும். எல்லா முறைகளிலும் இந்த வழிகளை திரித்து, திசை திருப்ப முடியும். ஆனால் அவை எந்த ஒரு முற்போக்கான சமூக முன்நோக்கையும் கண்டிப்பதோடு, நிலவும் நிலைமைகளுக்கு ஒரு புனிதத் தன்மையை ஊட்டுவதில் முடிகின்றது. பிரேயின் கருத்தை மனித இனம் ஏற்றிருக்குமாயின், அது இன்றும் மரங்களிற்தான் வாழ்ந்து கொண்டிருக்கும் அல்லது புராதன பழங்குடி சமுதாயங்களில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும்.

தனிநபர்கள், சமூகவர்க்கங்கள் மற்றும் இன்னோரன்னவற்றை" ஓர் ஏற்ற முற்போக்கான முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட ''உன்னத கருத்திற்குக்" கீழ்படியச் செய்யாமல் எந்த ஒரு சமூக முன்னேற்றத்தையும் நினைத்துப் பார்க்க முடியாது. போலீஸ் குண்டாந்தடியின் (''முழுமையான ஆட்சியதிகாரம்") உதவி கொண்டு, "ஒத்திசைவான, முரண்பாடுகள் அற்ற சமுதாயத்தை" உருவாக்க முடியும் என்று மட்டும் பிரேயினால் கற்பனை செய்ய முடியுமாயின், அது அவரின் சொந்த ஸ்டாலினிச கல்வியறிவைப் பற்றி நிறைய எடுத்துக் கூறுகின்றதே ஒழிய சமூக சமத்துவம் இன்மையை முற்போக்கான முறையில் வெல்லுவதன் மூலம், வர்க்கமற்ற சமுதாயம் ஒன்றிற்காகப் போராடும் மார்க்சிசத்தைப் பற்றி எதையும் கூறவில்லை.

## அக்டோபர் புரட்சி

1917-ம் ஆண்டு அக்டோபர் புரட்சி பற்றியும் அதன் தலைவர்கள் லெனினதும், டரொட்ஸ்கியினதும் கொள்கைகள், பின்னர் ஸ்ட ாலினின் கீழ் சோவியத் ஒன்றியம் சீரழிந்ததற்குப் பொறுப்பாய் இருந்தன என்ற பொருளின் கீழ், ஒரே கருத்து ஆயிரம் வேறுபாடுகளுடன் கூறப்படுவதில் பிரேயின் வார்த்தைகள் ஒரு உதாரணம் மட்டுமேயாகும். இருபதாம் நூற்றாண்டின் படிப்பினைகளை அகழ்ந்தெடுத்து மக்களின் பரந்துபட்ட தட்டுக்களின் நனவிற்குக் கொண்டு வருவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை பிரேயின் வார்த்தைகள் வெளிப்படுத்தாவிட்டால் அவற்றை ஓரம்கட்டி ஒதுக்கிவிடலாம். புதிய நூற்றாண்டின் வளர்ச்சி இதில் தங்கியுள்ளது.

அக்டோபர் புரட்சியானது இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான நிகழ்வாக இருந்ததோடு தொடர்ந்தும் அவ்வாறே இருந்து வருகின்றது. அதுவே சர்வதேச பாட்டாளி வர்க்கத்தால் ஒரு நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றி அதன் விருப்பத்திற்கேற்ப சமுதாயத்தை மறுவடிவமைக்க அது எடுத்த முதல் முயற்சியாகும். அன்று ரோஸா லக்சம்பேக்கை விட வேறு யாரும் இதை அதிகமாக பேசவில்லை. லக்சம்பேக் சில விஷயங்களில் லெனினை விமர்சித்தார். இதனால் அவர் அக்டோபர் புரட்சிக்கு எதிரானவர் என்று பொய்யாக அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்டு வந்துள்ளார். ஆனால் லக்சம்பேர்க் 1918-ல் "ரஷ்யப் புரட்சி" என்ற கட்டுரையில் எழுதுகையில் "உலகப் பட்டாளி வர்க்கப் புரட்சியின் மேல் அவர்களது கொள்கையில் முழுமையாக நிறுத்தினார்கள் என்பது அவர்களது அரசியல் தூர திருஷ்டிமிக்க கோட்பாடுகள் பற்றி அவர்களுக்குள்ள இறுக்கமான பற்றினதும், அவர்களது கொள்கைகளின் நெஞ்சுறுதியான குறியிலக்கினதும் மிகவும் துல்லியமான நிரூபணமாகும்".


பிராங்ஸ் மெஹ்ரிங்

*மெஹ்ரிங் கூறியது போல, பத்தொன்பதாம் நூற்றாண்டை நம்பிக்கையின் நூற்றாண்டாகவும்,இருபதாம் நூற்றாண்டை, அனுபவம் தந்த நூற்றாண்டாகவும், இருபத்தொன்றாவது நூற்றாண்டை, நிறைவேற்றும் நூற்றாண்டாகவும், வரலாறு காணும்.*

அக்டோபர் புரட்சி சீரழிந்து பொய்த்துப் போனது அதன் ஆரம்பங்களும், இலக்குகளும் போலியானவை என்றதன் காரணமாக அல்ல; மாறாக எதிர் கொண்ட அது சக்திமிக்க தடைகளை அது முதல் முயற்சியில் வெல்லமுடியாமற் போனதாகும். இளம் சோவியத் ஒன்றியம் 17 ஆக்கிரமிப்புப் படைகளினால் சூழப்பட்டிருந்தது. ஜேர்மன் புரட்சியின் தோல்வியினால் அது சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. இறுதியில் அது வழிவழியாக வந்த ரஷ்யாவின் பொருளாதார மற்றும் கலாச்சார பின்தங்கிய நிலைமையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இருந்த பொழுதும் வெளித் தோன்றிய பிரதான தடை எதுவென்றால் சமூகப் பிற்போக்காகும். இது உள்ளேயிருந்து ஸ்டாலினிசம் என்ற வடிவத்தில் தோன்றியது.

வரலாற்று ஆசிரியர் 'வடிம் றொகோவின்' பின்வருமாறு இதை எடுத்துக் கூறுகின்றார்: உலகப் புரட்சியின் ஒருமித்த பகுதியாக இருந்த அக்டோபர் புரட்சி எவ்வளவோ சக்திமிக்க வரலாற்று சம்பவமாக இருந்ததினால் அதற்கு எதிரான பிற்போக்கும் (ஸ்டாலினிசமும்) பகட்டான அளவுகளைப் பெற்றது. அது வரலாற்றில் என்றும் காணாத அளவிற்கு பொய்களையும் ஒடுக்குமுறைகளையும் திரட்டிக் கொள்ள வேண்டியதாக இருந்தது". *(1937: ஸ்டாலினின் பயங்கரவாத ஆண்டு, மெஹ்ரிங் புத்தகங்கள், 1988, பக்கம் 209)*

பாசிசத்திலிருந்து மிகவும் வேறுபட்ட ஒரு சமூக அடித்தளத்தில் ஸ்டாலினிசம் தோன்றினாலும் கூட, அது ஒன்றை பாசிசத்துடன் பொதுவாக பங்கிட்டுக் கொள்ளுகின்றது: இறுதி ஆய்வில் அக்டோபர் புரட்சியும், சர்வதேச கம்யூனிச இயக்கமும் உலக முதலாளிகளின் ஆட்சிக்கு விடுத்த அபாயத்திலிருந்து அவர்களை இரண்டும் காப்பாற்றின. நீண்டகாலப் பார்வையில் ஸ்டாலினிசம் பாசிசத்திலும் பார்க்க, கூடிய அளவு இதில் வெற்றிகரமாக இருந்தது. அது ஒரு தடவை ஸ்டாலினே வீம்புடன் கூறியது போல அனைத்து பாசிச ஆட்சிகளும் ஒட்டு மொத்தமாகக் கொன்ற

*19ம் பக்கம் பார்க்க*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட நெருக்கடி

# இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் கடும் வரட்சி: கோடிக் கணக்கானோரை தாக்கியுள்ளது

தீபால் ஜயசேகர

இந்தியாவின் பெரும் பகுதிகளிலும் அவ்வாறே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் குறிப்பிடத்தக்க பிரதேசங்களிலும் வாழுகின்ற கோடிக்கணக்கான மக்களை, கடும் வரட்சி தாக்கி வருகிறது. அது கால்நடை வளங்களை அழித்துள்ளதோடு லட்சக்கணக்கான மக்களை உயிர் தப்புவதற்காக நகரங்களுக்கு அல்லது நீர்வளம் நிறைந்த பகுதிகளுக்கு இடம் பெயர வைத்துள்ளது. இதனால் பெரும்பாலானோர் போதுமான அளவு உணவு, சுத்தமான குடிநீர் இல்லாமல் பட்டினி மற்றும் நோய்களின் ஆபத்துக்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நூற்றாண்டில் மிக மோசமான இந்திய வரட்சி என்று விவரிக்கப்படும் இதனால், மேற்கில் குஜராத், இராஜஸ்தான், மகாராஷ்டிரா, தெற்கில் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் 5 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 60 நகரங்களும் 60,000 கிராமங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையான மக்கள் குடிநீர் இல்லாமல் தவிக்கிறார்கள். அவர்களுடைய பயிர்கள் கருகி உதிர்ந்து விட்டன.

லட்சக்கணக்கான கால்நடைகள் இறந்துவிட்டன. ஒரு விதத்தில் 11 மாநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அறிக்கை கூறுகிறது.

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வரட்சியால் இராஜஸ்தான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 26,000 கிராமங்கள் மற்றும் 35 லட்சம் மக்கள் -அதாவது மாநிலத்தின் மக்கட் தொகையில் முக்கால் பங்கினர்- பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சில கிராமங்களில் தண்ணீர் பெறும் ஒரே வழியாக 15 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் தாங்கி வாகனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமவாசிக்கும் 10-15 லிட்டர்களுக்கு இடைப்பட்ட அளவில் தண்ணீர் வழங்கப்படுகிறது.

குஜராத்தில் (25 மாவட்டங்களுள்)17 மாவட்டங்களில் 9421 கிராமங்கள் - 25 லட்சம் மக்கள்- வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அறிக்கை கூறுகிறது. தானிய உற்பத்தி 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 50 சதவீதமாக உள்ளதாகவும் அறிக்கைபடம் பிடித்துக் காட்டுகிறது. 70 லட்சத்திற்கும் மேலான கால்நடைகள் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு புயலாலும் வெள்ளத்தாலும் ஒரிசா மாநிலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட பொலாங்கீர் மாவட்டத்தில் 8000 கிணறுகள் அடியோடு வரண்டுவிட்டன. உள்ளூர் ஆட்சித்துறைதுனர் பள்ளிகளையும் கல்லூரிகளையும் மூடத் தொடங்கியுள்ளதுடன், அரசாங்க அலுவலக நேரங்களையும் குறைத்துள்ளன. ஏப்ரல் 29ல் கல்கத்தாவிலிருந்து குடிநீர் கொண்டுவந்த ரயில் வண்டி, நீருக்காக அலையும் ஆற்றொணா நிலை கொண்ட மக்களால் சூறையாடப்பட்டது. டிட்லகார் மாவட்ட சிறையில் உள்ளவர்களுக்கு இரண்டு நாட்களாக குடிநீர் வழங்கப்படாததால் கலகம் செய்தனர். "குடிநீர் கொடுங்கள் அல்லது எங்களைக் கொன்று விடுங்கள்" என்று அவர்கள் கூச்சலிட்டனர்.

பாகிஸ்தானின் தென்பகுதி மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள நிலைமை பயங்கரமாக இருக்கிறது. பாகிஸ்தான் மாகாணமான பலூச்சிஸ்தானில் 26 மாவட்டங்களில் பெரும்பான்மையானவை வரட்சியாலும் பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். மாகாண ஆளுனர் அமிருல்முல்க் மெங்கல், தொலைவில் உள்ள பகுதிகளில் 20,000 குடும்பங்களும் 10 இலட்சத்துக்கும் அதிகமான கால்நடைகளும் சிக்கிக் கொண்டுள்ளதையிட்டு கவலை அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த திங்கள் அன்று, (மே 8) பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வெஸ் முஷாராப் வரட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும்படி தொலைக்காட்சியில் வேண்டுகோள் விடுத்தார். கடும் தண்ணீர்த் தட்டுப்பாட்டால், இந்திய எல்லை அருகே உள்ள தர்பார்க்கர் பிராந்தியத்தில் பெரும்பாலும், கடந்த மூன்று மாதங்களில் 127 பேர் இறந்துள்ளதாக சிந்து மாகாண ஆளுநர் அறிவித்தார். சிந்து மற்றும் பலூச்சிஸ்தான் பகுதிகளில் இருந்து மக்கள் பத்தாயிரக் கணக்கில் இடம் பெயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானத்தில் உலக உணவுத் திட்டத்தின் (WFP) இயக்குனர் மைக்சாக்கெட் கடந்தவாரம் எச்சரித்ததாவது: "இன்னும் நடக்கும் எலும்புக்கூடுகள் இல்லை. ஆனால் போதுமான மழைவீழ்ச்சி இல்லாததால் ஏறத்தாழ மழையை நம்பி கோதுமைப் பயிர்கள் அனைத்தையும், 80 சதவீத கால்நடைகளையும் இழந்த பின்னர் ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தானியர்கள் கொடும் கோடையை எதிர் கொண்டுள்ளனர்." உலக உணவுத் திட்டம் எதிர்வரும் 12 மாதங்களில் மிகவும் ஏழையான மிகவும் அவசியப்படும் நான்கு லட்சம் பேருக்கு உணவு வழங்கும் திட்டங்களை கொண்டிருப்பதாக அவர் அறிவித்தார். மிகவும் பாதிக்கப்பட்ட ஜாபுல், காந்தஹார், நிம்ரோஸ் மற்றும் ஹெல்மாண்ட் ஆகிய பகுதிகளில் நாற்பது லட்சத்திற்கும் அதிகமானோர் வாழ்கின்றனர்.

வரட்சியின் உடனடிக் காரணம், 1999 அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான பருவ மழைக்குப் பிந்திய காலகட்டத்திலும் இந்த ஆண்டில் ஜனவரி மற்றும் பெப்பிரவரியில் குளிர்கால மழை உட்பட, பருவமழை திரும்பத் திரும்ப பொய்த்ததே ஆகும். ஆனால் பேரழிவுக்கான காரணங்கள் மனிதனால் உண்டுபண்ணப்பட்டவை. இம்மூன்று நாடுகளில் உள்ள அரசாங்கங்களும் வரட்சி பீடித்துள்ள பகுதிகளில் பாதுகாப்பான குடிநீர் வழங்கலுக்கான நீண்டகால நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டன. மேலும் வளர்ந்துவரும் வரட்சி சூழ்நிலைகள், மேலோட்டமாகத் தெரியத் தொடங்கியபோது கடந்த ஆறு மாதங்களாக சிறிய அளவிலான நடவடிக்கையே எடுக்கப்பட்டது.

இந்தியாவில் பி.ஜே.பி.யால் தலைமை தாங்கப்படும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் ஏப்ரல் இறுதியில், பாதிக்கப்பட்ட மாநிலங்களில் நிவாரணத்திற்காக உணவு, நீர், கால்நடை உணவின் பேரில் சிறு நிதியை மட்டுமே ஒதுக்கத் தொடங்கியது. ஏப்ரல் 26ல் அரசாங்கம் குஜராத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீரை எடுத்துச் செல்லும்படி கடற்படைக் கப்பல்களைக் கேட்டுக் கொண்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் செய்தி நிறுவனங்களில் இருந்து மட்டுமல்லாமல் எதிர்க் கட்சிகளிடம் இருந்தும் அதனுடைய சொந்த அரசியல் கூட்டணிகளிடம் இருந்தும் கடும் விமர்சனத்துக்குள்ளானது. ஏப்ரல் 25 அன்று வரட்சி பற்றி விவாதிக்க கூட்டப்பட்ட அனைத்துக்கட்சி கூட்டத்தில், தெலுங்கு தேசக்கட்சியின் தலைவர் எர்ரா நாயுடு, வரட்சியைத் தடுக்க வேண்டப்பட்டதில் பத்தில் ஒரு பகுதியே கிடைத்தது என குற்றம் சாட்டினார். வரட்சியால் பாதிக்கப்பட்ட ஆந்திரப் பிரதேசத்தில் ஆளும் கட்சியான தெலுங்கு தேசம் கட்சி (என்.டி.ஏ.) தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முக்கிய கூட்டாளி என்பது குறிப்பிடத்தக்கது.

வரட்சி பாதித்துள்ள மாநிலங்களான இராஜஸ்தான் மற்றும் குஜராத்திலிருந்து வரும் எதிர்க்கட்சி காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதிக்கப்பட்டோருக்கு "பற்றாக்குறை நிவாரணம்" அளிப்பதாக, அரசாங்கத்தைக் குற்றம்சாட்டி பாராளுமன்றக் கட்டிடத்துக்கு வெளியில் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆனால் காங்கிரஸ் கட்சி தற்போதைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் போலவே அதனுடைய ஆட்சிக் காலத்தில் வரட்சியின் ஆபத்துக்களைத் தணிப்பதற்கு சிறிதளவான நடவடிக்கயே எடுத்திருந்தது. குஜராத்தில் இரு அரசாங்கங்களும் எதிர்க் கட்சிகளும் வழக்கமாக மாநிலத்தின் குடிநீர் பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதாக தேர்தல் பிரச்சாரங்களில் உறுதிமொழிகளை வழங்கின. தேர்தல் முடிவுற்ற உடனேயே வழக்கம் போல் தங்களது உறுதிமொழிகளைத் தள்ளி வைத்தன.

மாநில, மற்றும் தேசிய அரசாங்கங்கள் இரண்டுமே வரட்சியானது திடீரென வந்தது என்றும் அது கவனிக்கப்பட வேண்டியது என்றும் வரட்சியின் அரசியல் விளைவைக் குறைத்துள்ளன. ஆனால் சிறப்பாக இராஜஸ்தான் குஜராத் மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் தண்ணீர் பற்றாக்குறை என்பது நன்கு தெரிந்த நீண்டகாலப் பிரசிச்னை ஆகும்.

ஒரு அதிகாரி குறிப்பிட்டதாவது: "பற்றாக்குறை மழை வரட்சியாக முதிர்ச்சி அடைய சில மாதங்கள் எடுக்கின்றன. அது தொடர்ந்து இரண்டாவது ஆண்டு நிகழ்ந்தால், அது பஞ்சமாக உருவெடுக்கிறது...... ஆகையால் மத்தியிலும் சரி மாநிலத்திலும் சரி எல்லா அரசாங்கமும் இந்த ஆண்டு வரட்சி நழுவிக் கொண்டு வந்தது போலவும் ஒவ்வொருவரையும் வியப்பில் ஆழ்த்தியது போலவும் நடிக்கின்றன."

நுகர்வோர்' விவகார, பொது விநியோக அமைச்சர் சாந்தகுமார், எதிர்வரும் ஜூன் - செப்டம்பர் பருவமழை வழக்கமான நிலையை விட குறைவானதாக இருக்கும் என அச்சமூட்டுகிறார். "எல்லாம் கட்டுப்பாட்டில் உள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் அனுப்பிவருகிறோம்..... என்னதான் ஆயினும் அங்கு உணவுப் பற்றாக்குறை இருக்காது" என்று அவர் கூறினார்.


ஆனால் 'டைம்ஸ் ஆப் இந்தியா' தலையங்கம் குறிப்பிட்டபடி: "முன்னெச்சரிக்கை சாதாரணமாக பலப்படுத்தப்பட்டது. ஆனால் இந்திய அதிகாரிகள் அத்தகைய தர்க்கத்தை தலையில் கொண்டிருக்கின்றனர். கடந்த நான்கு ஆண்டுகளாக கோடை பருவமழை தொடர்பாக துல்லியமாய்க் கணிப்பிட்டு வரும் 'கணக்கியல் மாதிரி மற்றும் கணனி உருமாற்றல் மைய'த்தின்படி - இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை இந்தியாவை வஞ்சிக்கும். இது காலத்தோடு கவனிக்கப்படாவிடில், ஏற்கனவே, 5 கோடி இந்தியர்களைப் பஞ்சத்தில் தள்ளியுள்ள மோசமான நிலையை மேலும் உக்கிரமாக்கும்"

பெங்களூரை அடிப்படையாகக் கொண்ட வானிலை ஆய்வு மையத்திலிருந்து பிரசாந்த் கோஸ்வாமி என்பவரின்படி, கடந்த ஆண்டு பெய்த பருவமழை அளவான 840 மில்லிமீட்டருடன் ஒப்பிடுகையில், எதிர்வரும் மொத்த பருவமழை அளவு 789 மில்லி மீட்டராக இருக்கும். அந்த குறைந்த அளவானது பிராந்திய வேறுபாடுகள் எதனையும் கணக்கிலெடுக்காத நாடு முழுவதுக்குமான அளவாகும்.

அறிவியல் சுற்றுச் சூழல் மையத்தின் இயக்குனரும் உலக நீர் கமிஷனின் முன்னாள் உறுப்பினருமான அனில் அகர்வால் 'அவுட்லுக்' என்ற இந்திய இதழிடம் கூறியதாவது: "அது (வரட்சி) சுத்தமாக மனிதனால் உருவாக்கப்பட்டது. அரசாங்கம் சரியாக இருக்கவேண்டும். இந்தியாவில் ஒவ்வொரு கிராமமும் தண்ணீர் கிடைக்காமல் இருப்பதில் ஒரு அர்த்தமும் இல்லை..." என்றார்.

தற்போதைய வரட்சி ஏன் ஏற்பட்டது

19ம் பக்கம் பார்க்க



கடும் வரட்சிக்கும் பஞ்சத்துக்கும் பலியாகி வரும் ஒடுக்கப்பட்ட மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசாங்கமும் எதிர்க் கட்சியும்...

1ம் பக்கத் தொடர்ச்சி

இழுபட்டுச் சென்றதைத் தொடர்ந்து கொழும்பு மீண்டும் நெருக்குவாரங்களுக்கு உள்ளாகியது. நோர்வேயின் விசேட தூதுவர் எறிக் சொல்ஹெயிம் இலங்கைக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டார். ஜுன் 19ம் திகதி தொடக்கம் இடம்பெற்ற இவ்விஜயத்தில் கட்சிகள் "பேச்சுவார்த்தைகளை விரைவுபடுத்த வேண்டும்" எனவும் அரசியலமைப்பு பிரேரணைகளை நிறைவு செய்ய வேண்டும் எனவும் அப்போது தான் அவற்றை தாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்க முடியும் எனவும் அவர் கோரினார். கடந்த வாரம் இந்திய பிரதி வெளிநாட்டு அமைச்சர் அஜித் பஞ்சா ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையில் தமது அரசாங்கம் இலங்கைக்கென தமது சொந்த பிரேரணைகளை விருத்தி செய்து கொண்டுள்ளதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைக்க அது தயாராகி உள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு மத்தியிலும் அரசியல் தீர்வு பொதியை அமுல் செய்வது சம்பந்தமாக இந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையே கணிசமான அளவு வேறுபாடுகள் இருந்து கொண்டுள்ளன. குமாரதுங்க இன்றைய பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் ஆகஸ்ட் 24ம் திகதி முடிவடைவதற்கு முன்னதாக அரசியலமைப்பு திருத்தங்களை ஊர்ஜிதம் செய்ய முயன்று கொண்டுள்ளார். இதன் மூலம் அவசியமான பொதுஜன கருத்துக் கணிப்பை மேற்பார்வை செய்யும் பொறுப்பை அடுத்த பாராளுமன்றத்திடம் ஒப்படைக்க அவர் முயற்சிக்கின்றார். யூ.என்.பி.யோ அடுத்த பாராளுமன்றம் முன்னையதன் தீர்மானத்துக்கு கட்டுப்பட்டது அல்ல என வலியுறுத்திக் கொண்டுள்ளது.

இரண்டு கட்சிகளும் இன்றைய நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் காலகட்டம் தொடர்பாக முரண்பட்டுக் கொண்டுள்ளன. கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற குமாரதுங்க தனது ஐந்தாண்டு ஆட்சிக்காலத்தில் கண்ணும் கருத்துமாக உள்ளார். அவரது அரசியலமைப்பு விவகார அமைச்சரான ஜீ.எல். பீரிஸ், யுத்தம் முற்றுப் பெறும்வரை ஒரு உறுதியான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அவசியம் என உடன்பாடு தெரிவித்துள்ளார். ஆனால் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டுவதை இலக்காகக் கொண்டுள்ள யூ.என்.பி. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முன்கூட்டியே ஒழித்துவிட வேண்டும் என வலியுறுத்துகின்றது. அப்போது ஜனாதிபதி அல்லாது பாரளுமன்றமே அரசாங்கத்தை கட்டுப்படுத்தும்.

எளிதில் உடைந்து சிதறிப் போகக் கூடிய கடந்த வெள்ளிக்கிழமைய உடன்பாடு வெறுமனே பொதுஜன முன்னணியினதும் யூ.என்.பி.யினதும் அரசியல் சூழ்ச்சிகள் காரணமாக ஏற்பட்டது அல்ல. இரண்டு கட்சிகளும் பல்வேறு சிங்கள சோவினிச அமைப்புக்களின் நெருக்குவாரங்களுக்கு உள்ளாகியுள்ளன. அவை எந்தவிதமான அதிகாரப் பகிர்வையோ அல்லது விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளையோ ஒரு "காட்டிக்கொடுப்புக்கு" நிகரானதாகக் கொள்கின்றன. ஆனையிறவில் இராணுவம் தோல்வி கண்டதன் பின்னர் குமாரதுங்க நாடு ஒரு "யுத்த நிலைமையில்" இருத்தப்படும் எனப் பிரகடனம் செய்தார். ஒரு தொகை படுபயங்கரமான அவசரகால விதிகளை திணித்தார். அத்தோடு அதிகரித்த அளவில் சிங்கள தீவிரவாதிகளின் ஆதரவில் சாய்ந்து கொண்டிருந்தார். தேர்தல் எதிர்வந்து கொண்டுள்ள ஒரு நிலைமையில் பொதுஜன முன்னணி, யூ.என்.பி. இரண்டும் இந்த அமைப்புக்கள் அதிகாரப் பகிர்வு தீர்வுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதன் மூலம் இலாபமீட்டலாம் என்பதையிட்டு கவலை கொண்டுள்ளன.

சிங்கள உறுமய கட்சி (Sinhala Heritage Party) எந்த ஒரு அதிகாரப் பகிர்வு தீர்வையும் தாம் அடியோடு எதிர்ப்போம் எனப் பிரகடனம் செய்துள்ளது. பௌத்த மத அமைப்புக்கள் (சங்க சபா) பொதுஜன முன்னணி அரசாங்கம் உத்தேச மசோதாவை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமானால் தாம் பொதுஜன முன்னணிக்கு எதிராக வாக்களிக்கும்படி கோரி வீட்டுக்கு வீடு பிரச்சாரத்தில் ஈடுபடுவோம் என இரண்டு வாரங்களுக்கு முன்னர் எச்சரித்தது. மற்றொரு சிங்கள சோவினிச அமைப்பான தேசிய கூட்டுக் கமிட்டி (National Joint committee) அரசியலமைப்புச் சட்ட மாற்றங்கள் "ஆயிரக்கணக்கான பிணங்களின் மீதாகவே" அமுல் செய்யப்படும் என அறிவித்தது.

## தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் தீர்வு பொதியை நிராகரிக்கிறது

யூ.என்.பி.யுடனான பேச்சுவார்த்தைகள் பூராவும் குமாரதுங்க சிங்கள தீவிரவாதிகளின் விமர்சனங்களுக்கு அடிபணிந்து போனார். ஆரம்பத்தில் குமாரதுங்க, தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு- கிழக்கு இடைக்கால நிர்வாக சபையில் பங்கு கொள்வதை எதிர்க்கப் போவதில்லை எனத் தெரிவித்தார். சிங்கள உறுமய கட்சியின் தாக்குதலுக்கு உள்ளானதைத் தொடர்ந்து அவர் தனது நிலைப்பாட்டை "தெளிவுபடுத்தினார்". அவர் "கொலைகார பயங்கரவாதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இடைக்கால நிர்வாக சபையில் பங்கு கொள்வதை தீவிரமாக நிராகரித்தார்". அது "அனைத்து கொலைகார பயங்கரவாத நடவடிக்கைகளையும் கைவிட்டு ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் நுழைவதன் மூலம் மட்டுமே கலந்துகொள்ள 'முடியும்" என்றார்.

இந்தத் தீர்வுப் பொதியானது 1995ல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட பிராந்திய சுயாட்சிக்கான அசல் திட்டத்தை அடித்துச் செல்வதைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. கலைச்சொல் மட்டத்திலும் கூட சிங்கள தீவிரவாதிகள் தமது முத்திரையைப் பதித்துள்ளனர். 1995ம் ஆண்டின் திட்டமும் 1996ம், 1997ம் ஆண்டின் சட்ட வரைவுகளும் இலங்கையை "ஒரு ஐக்கிய, இறைமை கொண்ட குடியரசாக" வருணிக்கின்றன. அது "கலைத்துவிட முடியாத பிராந்தியங்களின் ஒன்றியம்" ஆகும். அத்தகைய வார்த்தைகள் நாட்டின் ஒருமைப்பாட்டு அந்தஸ்துக்கு குழிபறிப்பதாக கூறும் விமர்சனங்களுக்கு முகம் கொடுத்த நிலையில், பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் நாட்டை "இலங்கை குடியரசு" என வருணிக்க இணங்கியதோடு "அங்கு மத்தியும் பிராந்தியங்களும் அதிகாரத்தை அரசியலமைப்பு சட்டத்துக்கிணங்க பகிர்ந்து கொள்ளும்" என்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே இந்த அதிகாரப் பகிர்வு திட்டத்தின் அடிப்படையில் எந்தவிதமான கலந்துரையாடலையும் நிராகரித்து விட்டது. சமீபத்தில் வழங்கிய ஒரு பேட்டியில் விடுதலைப் புலிகளின் கோட்பாட்டாளரான அன்டன் பாலசிங்கம் பிரேரணைகளை சாடினார். அவர் கூறியதாவது: "மூல தீர்வு பொதியில் இருந்து இரத்தத்தையும் சதையையும் உறிஞ்சி இழுத்ததன் பின்னர் இறுதி வரைவாக ஒரு எலும்புக் கூடு தான் எஞ்சியுள்ளது" என்றார்.

குறிப்பாக ஒரு பிராந்திய சபையைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருக்கும் பிரேரணை மனதைப் புண்படுத்துவதாக பாலசிங்கம் குறிப்பிட்டார். "கடந்த 50 ஆண்டுகளாக போராடியதன் பின்னர்- 25 வருட காலம் சாத்வீக முறையிலும் 25 வருடங்கள் ஆயுதம் தாங்கிய இயக்கமாகவும்- நாம் ஒரு நிலையற்ற தீர்வை ஏற்றுக் கொள்ள முடியாது". அத்தோடு அவர் ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு- கிழக்கு பிராந்தியங்களின் எதிர்காலம் தொடர்பாக ஐந்து ஆண்டுகளின் பின்னர் நடாத்தவுள்ள கருத்துக் கணிப்பையும் எதிர்த்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த இரண்டு மாகாணங்களும் ஒரு ஐக்கிய தமிழர் தாயகத்தின் பகுதியாக விளங்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளது.

எவ்வாறெனினும் அவர் ஏதோ ஒரு வடிவிலான சுயாட்சித் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் சாத்தியத்தை நிராகரிக்கவில்லை என்பதை முக்கியம் வாய்ந்த ஒன்றாக குறிப்பிட்டாக வேண்டும். "சுயநிர்ணய உரிமை என்பதன் அர்த்தம் நாம் சிங்கள அரசாங்கத்துடன் தொடர்புபடுவது அல்லது சமஷ்டி சுயாட்சியை தெரிவு செய்வதாகும். இலங்கை, சுயநிர்ணயம் என்பதை பிரிந்து செல்வதற்கான ஒரு உரிமையாக நோக்கக் கூடாது" என அவர் கூறியுள்ளார். பாலசிங்கம் அமெரிக்கா, இந்தியா பற்றிக் குறிப்பிடுகையில் மிகவும் இணக்கப்பாடு கொண்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் "அவற்றின் புவிசார் அரசியல் நலன்களையும்" "மோதிக் கொண்டுள்ள தரப்பினரை ஒரு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுக்கு ஊக்குவிப்பதன் மூலமும்" அவற்றின் முயற்சிகளையும் புரிந்து கொண்டுள்ளது. "நாம் ஏற்கனவே இந்தியாவின் நலன்களுக்கு பாதகமிழைக்கக் கூடிய அல்லது அதன் உள்நாட்டு அரசியலில் தலையிடும் எதையும் ஒரு போதும் செய்யமாட்டோம் என வழக்காறான விதத்தில் கூறியுள்ளோம்" எனப் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடிப் பேச்சுவார்த்தைகளை நிராகரித்தும் முழு யாழ்ப்பாணக் குடாநாட்டினையும் கட்டுப்பாட்டுக்குள் கொணர்வதை வலியுறுத்திக் கொண்டுள்ள போதிலும், பாலசிங்கத்தின் கருத்துக்கள் பேச்சுவார்த்தை மேசைக்கு வரும்படி பெரும் வல்லரசுகளின் நெருக்குவாரத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளாகியுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது.

குமாரதுங்க அரசாங்கத்தின் கணிப்புக்களில் ஒரு பகுதி அதுவேயாகும்: தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்த இணங்கினாலும் சரி இணங்காவிட்டாலும் சரி அதிகாரப் பகிர்வு அரசியல் பொதி தமிழர்களிடையே அதற்கிருந்து வரும் ஆதரவை குழிபறியச் செய்வதோடு ஏனைய தமிழ் கட்சிகளின் கரங்களைப் பலப்படுத்தும். அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பாக குமாரதுங்க தமிழ் கட்சிகளுடனும் அத்தோடு சிங்கள உறுமய கட்சி போன்ற சிங்கள சோவினிச குழுக்களுடனும் ஒரு தொகை கலந்துரையாடல்களை நடாத்த திட்டமிட்டுள்ளார். ஆனால் பல தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்கனவே இன்றைய தீர்வு யோசனைகளை நிராகரித்துள்ளன. அத்தோடு எந்த ஒரு இடைக்காலச் சபையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பிரதிநிதித்துவம் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் போலவே இந்த தமிழ் கட்சிகளும் வடக்கு- கிழக்கு மாகாண இணைப்பு மீதான ஒரு கருத்துக் கணிப்பு நடாத்தும் திட்டத்தை எதிர்த்துள்ளன. ஏழைச் சிங்கள கிராமவாசிகளை கிழக்கில் திட்டமிட்டுக் குடியேற்றும் அரசின் கொள்கையானது பிராந்தியத்தின் சனத்தொகை சேர்க்கையையும் அதன் மூலம் எந்த ஒரு கருத்துக் கணிப்பினதும் முடிபை மாற்றுவதுமேயாகும் என தமிழ்க் கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

இன்றைய திட்டங்கள் நிலம் தொடர்பான பிராந்தியங்களின் உரிமைகளை பலவீனப்படுத்தியுள்ளதாக அவை மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. 1995ம் ஆண்டின் அரசியல் தீர்வு பொதியின்படி மத்திய அரசாங்கம் அரச காணிகளைப் பயன்படுத்த வேண்டுமானால் அது ஒரு பிராந்திய சபையுடன் ஆலோசிக்க வேண்டும் என்றிருந்தது. யூ.என்.பி.க்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவுகளின்படி மத்திய அரசாங்கம் பெருந்தோட்டங்கள், காடுகள், கரையோரப் பகுதி நிலங்கள், பிராந்தியக் கடல்கள் என்பவற்றுக்கு பொறுப்பாக இருக்கும். இவை தகராறுகளின் இணக்கப்பாட்டுக்கான ஒரு காணி சபையின் தீர்ப்புக்கு மட்டும் உட்பட்டதாக விளங்கும்.

"நாம் வேண்டுவது சமஷ்டி முறையே அல்லது பெரிதும் கழுவித் துடைக்கப்பட்ட 1995ம் 1997ம் ஆண்டுகளின் யோசனைகள் அல்ல" என தமிழ் முதலாளித்துவக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் (TULF) சிரேஷ்ட உப-தலைவரான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். இடைக்கால சபையில் பங்கு கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அழைக்கப்படாது போனால் தமது கட்சி இடைக்காலச் சபையில் பங்கு கொள்ளாது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் ஆர்.சம்பந்தன். முன்னர் குறிப்பிட்டு இருந்தார். இதே கருத்துக்களை முன்வைக்கும் பொருட்டு ஒரு தமிழர் விடுதலைக் கூட்டணி தூதுக் குழு அமெரிக்கத் தூதுவரையும் ஜுன் 26ல் சந்தித்தது.

இதற்குச் சமமான நிலைப்பாட்டையே ஈழும் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் (EPRLF) தமிழீழ விடுதலை அமைப்பும் (TELO) வெளியிட்டுள்ளன. ஆனால் தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (PLOTE) யோசனைகளை ஆய்வு செய்வதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை என கூறி கருத்து வெளியிட மறுத்துள்ளது. ஆளும் பொதுஜன முன்னணியின் ஒரு பங்காளியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (EPDP) தலைவரான டக்ளஸ் தேவானந்தா "ஒன்றும் இல்லாது இருப்பதை விட அற்ப சொற்பமாகத் தன்னும் கொண்டிருப்பது நல்லது" (Some thing is better than nothing) எனக் கூறி தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளார். எவ்வாறெனினும் ஈ.பி.டீ.பி. ஒரு கூலிப்படைக்கு நிகரானதாகவே நின்று கொண்டுள்ளது. அது வடக்கில் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளதும் அரச அதிகாரத்துவத்தினதும் கையாளாகவே செயற்படுகின்றது.

இனவாதப் பிளவுகளை மேலும் உக்கிரமாக்கவும் பகைமையைக் கொழுந்து விட்டு எரியச் செய்யவும் கூடிய சாத்தியத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) பிரதிபலிப்புக்கள் மூலம் அதிகாரப் பகிர்வு பொதி கோடிட்டுக் காட்டியுள்ளது. இக்கட்சி பொத்துவில், சம்மாந்துறை, கல்முனையை உள்ளடக்கிய ஒரு தனியான தென்கிழக்கு நிர்வாக மாவட்ட கோரிக்கையை மீண்டும் வலியுறுத்திக் கொண்டுள்ளது. ஸ்ரீ.ல.மு.கா. இந்தக் கோரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லீம்களை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றியும் கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்களை தாக்குவதில் ஈடுபட்டதைத் தொடர்ந்தும் முன்வைத்தது. நாட்டினை மேலும் உப-பிரிவுகளாக பிரிக்கும்படி கோரும் ஸ்ரீ.ல.மு.கா.வின் கோரிக்கை, எந்த ஒரு அதிகாரப் பகிர்வுத் திட்டமும் தொழிலாளர் வர்க்கத்தின் மீதான தமது பரஸ்பரம் சுரண்டல்களை உக்கிரமாக்கும் பொருட்டு சிறிய தீவினை இனவாத ரீதியில் முதலாளி வர்க்கத்தின் பல்வேறுபட்ட பகுதியினரிடையே கூறுபோடும் ஒரு ஆட்சி பங்கீட்டு ஏற்பாடாகும் என்ற உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

## முதலாளித்துவத்தின் எடுபிடிகளான தீவிரவாதிகளின் போலிக் கோலம் அம்பலம்

*இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் என்ற தலைப்பில் விஜே டயசினால் எழுதப்பட்டு 'தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளின் ஒரு நூலாக வெளிவர உள்ளது. அந்நூலின் முன்னுரை இங்கே பிரசுரமாகின்றது.*

கடந்த இதழின் தொடர்ச்சி

இலங்கையின் இனவாத யுத்தம் முதலாளித்துவ வர்த்தகர்களின் இலாபம் சுரண்டும் வழிகளுக்கு குறுக்கே நின்று கொண்டுள்ளது. இது முதலாளித்துவ அமைப்பு நீண்டு வரும் ஒரு வீழ்ச்சிக் காலப் பகுதியினுள் நுழைந்து கொண்டுள்ள ஒரு நிலையில் இடம் பெற்று வருகின்றது. இதன் பெறுபேறுகளினால் ஆத்திரம் அடையச் செய்யப்பட்டு தமது போட்டியாளர்களை படுகுழிக்குத் தள்ளிய வண்ணம் உலகம் பூராவும் அலையும் நிதி மூலதனம், யுத்தத்துக்கு பின்னைய உலக அமைப்பை உடைத்து எறிந்தும், புதிய அணிதிரள்வு கூச்சல் போட்டும், கட்டியெழுப்பியும் உலகின் அனைத்து இடங்களிலும் அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் தலையிட்டு வருகின்றது. ஒரு இடத்தில் அது பிரிவினைவாத முதலாளித்துவ அரசியல் போக்குகளுக்கு (சேர்பியாவில் கொசோவா பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாகத் தலையிட்டது போல்) ஊக்கம் அளிக்கிறது; வளர்த்து எடுத்து போஷிக்கின்றது. மற்றொரு இடத்தில் ஆத்திரம் கொண்ட முதலாளித்துவ அரசியல் போக்குகளை சமரசம் அடையச் செய்து, (அயர்லாந்திலும் பாலஸ்தீனத்திலும் போல்) காலனித்துவத்துக்கு வழி வகுக்கின்றது. இது பயன்பாட்டுவாதியை (Pragmatist) குழப்பமடையச் செய்யும் உலக நிலைமையாகும். வரலாற்றுச் சடமுதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்ட மார்க்சிஸ்டுகளால் மட்டுமே ஒரே வழியான உலக சோசலிச முன்நோக்கின் கீழ் இந்த நச்சு வட்டத்தில் இருந்து வெளியேறுவதற்கான பாதையைத் தேடிக் கண்டுபிடிக்க முடியும். முழு உலக முதலாளித்துவ அமைப்பின் நீண்டுவந்த வீழ்ச்சி நிலைமையினுள் புதிய பிற்போக்கு உலக அமைப்பை நோக்கிய பல்வேறு ஏகாதிபத்திய முகாம்களின் செயற்பாட்டுடன் தொடர்புபடாது, சிக்கலடைந்து போயுள்ள உலக அரசியல் நூல் பந்தை சீராக்கிக் கொள்ள முடியாது.

'தியச' குழுவினரும் அஹிங்சக பெரேராவும் இன்றைய உலக நிலைமையை எங்ஙனம் விளக்குகின்றார்கள்? அவர்கள் சொல்வது என்ன? "உலகப் பொருளாதாரம் நெருக்கடிக்கு முகம் கொடுத்தாலும் அது வீழ்ச்சி கண்டு போய்விடவில்லை; அது அழுகி நாற்றம் கண்டு போய்விடவும் இல்லை. அது நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தவாறே அபிவிருத்திகளையும் உரித்தாக்கிக் கொண்டுள்ளது" என்கின்றனர். நீண்ட தூரம் செல்லாமல் ஆசியாக் கண்டத்திலேயே கிழக்கு, வடகிழக்கு திசைகளில் உள்ள ஒரு தொகை நாடுகளைப் பீடித்துக் கொண்டு 1997ன் அரை இறுதிக் காலப்பகுதியில் பரவி வந்த பொருளாதார வீழ்ச்சிகளை இத்தகைய மடைத்தனமான விபரங்களைக் கொண்டு விவரங்களுக்குள் இருத்துவது எப்படி? இது உலக முதலாளித்துவ நெருக்கடியினதும் வீழ்ச்சியினதும் வெளிப்பாடு இல்லையா? அங்ஙனம் இல்லையெனில் இப்பிராந்தியம் உலகப் பொருளாதாரத்தில் இருந்து பிரிக்கக் கூடிய விதத்தில் சீனப் பெருஞ்சுவர் நீண்டு செல்ல வேண்டும் அல்லது பரந்து இருக்க வேண்டும். "நெருக்கடிக்கு முகம் கொடுத்தாலும் வீழ்ச்சி கண்டு போய்விடவில்லை", அவ்வாறே "நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தவாறே அபிவிருத்திகளையும் உரித்தாக்கிக் கொண்டுள்ளது". முதலாளித்துவத்தின் ஸ்திரப்பாடு, சதாகாலமும் செல்லுபடியான தன்மை தொடர்பான குருட்டுத்தனமான பயபக்தியைத் தவிர வேறு எதுவும் தீவிரவாதிகள் யதார்த்த உலகை இருகண்களையும் இறுக்கி மூடிக் கொண்டு செய்யும் இத்தகைய நப்பாசைகளைக் கொண்ட கட்டுக் கதைகளுக்குள் அடங்கியுள்ளதா?

முதலாளி வர்க்கத்தின் காதில் தொங்கிக் கொண்டு கால்களை அளக்கும் தீவிரவாதக் குருடன் நிஜ உலகில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள ஆதாள பாதாளங்களைத் தவிர்த்துக் கொள்வதில் தோல்வி கண்டுவிடுகின்றான். அதில் இருந்து மீட்சி பெற அவன் மீண்டும் தான் சதாகாலமும் இருந்து வருவதாக எண்ணும் முதலாளித்துவ காது மடலின் உதவியையே நாடுகின்றான். இதன்படி அஹிங்சக பெரேரா மார்க்சிச ஆய்வுகளையிட்டு பல்லிழித்துக் கொண்டு பின்வருமாறும் கூறுகின்றார்: "புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் (புக.க) அரசியல் ஆய்வுகளைப் பார்க்குமிடத்து உலகப் பொருளாதாரம் இன்றோ நாளையோ வீழ்ச்சி காணும் போல் தோன்றுகின்றது". இதை நினைத்த மாத்திரத்தில் வட-கிழக்கு ஆசியாவில் தாய்லாந்து, மலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் மட்டுமன்றி சிங்கப்பூரும் 1998ல் முகம் கொடுத்த பொருளாதார வீழ்ச்சியின் எதிரில், பொதுஜன முன்னணி தலைவியும், பிரதி நிதி அமைச்சரும் கட்டவிழ்த்துவிட்ட வாயடிப்புக்களே நினைவுக்கு வருகின்றது: "ஆசியன் நெருக்கடியில் இருந்து நாம் தப்பி விட்டோம்" என அவர்கள் அறிவித்தார்கள். அது எத்தனை மாதத்துக்குச் செல்லுபடியானது? 1999ம் ஆண்டு ஆரம்பமாவதற்கு முன்னரே இலங்கைப் பொருளாதாரத்தினுள் அந்த வீழ்ச்சிகளின் தாக்கங்கள் ஊடுருவிக் கொள்ள ஆரம்பித்தன. பொருளாதார வளர்ச்சி வேகம், அவர்களின் புள்ளி விபரங்களின்படி அவர்கள் 1999ல் எதிர்பார்த்த நூற்றுக்கு 6 சதவீதத்தில் இருந்து அதன் சரி அரைவாசியாக வீழ்ச்சி கண்டது.

தீவிரவாதிகள் முதலாளி வர்க்கத்தின் பாதார விந்தங்களை நக்கிக் கொண்டு, உபதேசம் செய்து வரும் பொருளாதார அபிவிருத்தி பற்றியும் ஒரு சில வார்த்தைகள் கூறியாக வேண்டும். பொருளாதார அபிவிருத்தி எனக் கொள்வது வெறுமனே நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, உழைப்பின் விளைதிறனை அதிகரிக்கச் செய்வதானால் முதலாளித்துவப் பொருளாதாரம் அதை அடைந்து கொண்டிருக்கும். ஆனால் தீர்க்கமான முறையில் சிந்திக்கும் ஆற்றல் படைத்த முதலாளித்துவப் பொருளியலாளர்கள் கூட தீவிரவாதிகளின் இந்த அனுபவவாத அர்த்தப்படுத்தலை நிராகரித்துள்ளார்கள். அவர்கள் சமூக- கலாச்சார அபிவிருத்தி தொடர்பான நோக்கில் இருந்து பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய பேச்சை வேறுபடுத்திவிட முடியாது எனக் கூறுகின்றனர். அதன்படி ஒரு புறத்தில் சமுதாயத்தில் உள்ள பிரமாண்டமான பெரும்பான்மையினரின் வறுமை அதிகரித்துச் செல்கின்றது. மறுபறத்தில் கடைகெட்ட சுகபோகங்களில் ஜீவியம் நடாத்தும் விரல்விட்டு எண்ணக்கூடிய கோடீஸ்வரர்களின் கரங்களில் செல்வம் இமயமாகக் குவிகின்றது. இதை பொருளாதார அபிவிருத்தி எனப்படுவதாக ஒப்புக் கொள்ள இவர்கள் மறுக்கிறார்கள். சமூக நலன்புரி பற்றிய மனித நேயத்துக்கு அர்ப்பணம் செய்யாது போயினும் அத்தகைய சமூகத் துருவப்படுத்தலானது முதலாளித்துவ அமைப்பு தனக்கு ஏற்படுத்தும் மரண ஆபத்துக்களையிட்டு நனவு பூர்வமாக அவர்கள் அந்த விதத்தில் அதைத் தெளிவுபடுத்துகின்றனர். தமது சுயநலன்களை பூர்த்தி செய்து கொள்ளும் விதத்தில் முதலாளிகளுக்கு இன்று ஆற்ற வேண்டிய சுயநலம் கொண்ட சேவைகள் என்ன என்பதையிட்டு மட்டும் அக்கறை காட்டும் வயிற்றுமாரி தீவிரவாதிகள் இதைக் காண்பதில்லை. 'தியச' சஞ்சிகை அத்தகையவர்களைக் கொண்ட ஒரு பதுங்கு குழியாகும்.

### சோசலிச சமூக மாற்றம்

சமூகத் துருவப்படுத்தல் காரணமாகத் தோன்றும் வர்க்கப் போராட்டம், முதலாளித்துவ அமைப்பைத் துடைத்துக் கட்டும் சோசலிசத் திசையில் வளர்ச்சி காண்பதைத் தடுக்கும் பொருட்டு முதலாளித்துவ அரசியல்வாதிகளும் அவர்களின் திட்டமிடலாளர்களும் இராப் பகலாகச் செயற்படுகின்றார்கள். சோசலிச சமூக மாற்றத்தின் முன் நிபந்தனையான தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலகவாத ஐக்கியத்தைச் சிதறடிக்கும் பொருட்டு நானாவிதமான பொறிக் கிடங்குகளைத் தோண்டுவதில் இந்த விதத்திலேயே இவர்கள் ஈடுபடுகின்றார்கள். தீவிரவாதிகள் இந்தத் திட்டத்தின் கையாட்களாவர்.
தேசிய அல்லது இனக்குழு பிரிவினைக் கூப்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் அரசியல் ரீதியில் பின்தங்கிய மக்கட் குழுக்களை தூண்டிவிடுவது அந்தந்த தேசிய- இனக்குழு முதலாளித்துவக் கையாட்களை பயன்படுத்தி, நடைமுறைப்படுத்தக் கூடிய இலகுவான பிற்போக்கு விதிமுறையாகும். இதை முதலாளித்துவ ஆளும் வர்க்கங்கள் புரிந்து கொண்டது இன்று, நேற்றல்ல. அன்றைய உணவு வேளையை பூர்த்தி செய்வதோடு அல்லாது மனித இனத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் மாபெரும் மார்க்சிசப் புரட்சியாளன் கடந்த கால வர்க்கப் போராட்டங்களின் படிப்பினைகளை மகத்தான வழிகாட்டியாகக் கொள்கிறான். உலக முதலாளித்துவ அமைப்பின் முதலாவது வீழ்ச்சி நிலைமையின் கீழ்- காலனித்துவத்தின் மூலம் தேசிய அடக்குமுறையை மேலும் விஸ்தரித்து, இறுக்கமாக்குகின்ற முதலாவது உலக யுத்தத்தைக் கடைப்பிடித்த ஏகாதிபத்தியவாதிகளே அந்த உலக யுத்தத்தின் மத்தியில் அணிதிரட்டப்பட்ட ரூஷ்யத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் அவ்வாறே ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கும் தலைமை வழங்கியதன் மூலம் போல்ஷிவிக் கட்சி சோசலிசப் புரட்சியை வெற்றிகொண்டதைத் தொடர்ந்து, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையின் பிரபலமானதும், பரந்ததுமான பிரச்சாரகனாக மாறியது. இந்த உலகளாவிய மாற்றங்கள் தொடர்பாக ட்ரொட்ஸ்கி வழங்கிய விளக்கங்களைத் தாண்டிச் செல்லும் விளக்கங்களை வேறு எவரும் வழங்க முடியுமா என்பது சந்தேகத்துக்கு இடமானது.
ட்ரொட்ஸ்கி பின்வருமாறு குறிப்பிட்டார்: "பிரமாண்டமான ஏகாதிபத்திய மக்கட் படுகொலைகள் இப்பிரச்சினை தொடர்பாக உக்கிரமான மாற்றங்களை உண்டுபண்ணியது. சகல முதலாளித்துவ, சமூக- தேசாபிமானக் கட்சிகள் தேசிய சுயநிர்ணயத்தைக் கட்டி அணைத்துக் கொண்டன. ஆனால் அது தவறான முடிவாகும். போட்டியிட்டுக் கொண்ட அரசாங்கங்கள் முதலாவதாகப் பரஸ்பரம் யுத்தத்திலும் அதைத் தொடர்ந்து சோவியத் ரூஷ்யாவுக்கு எதிராகவும் இந்த மாதிரியை பயன்படுத்தும் பொருட்டு சகல விதத்திலும் துடித்தன. போலந்து, உக்ரேயின் லிதுவேனியா, எஸ்டோனியா, பின்லாந்து, காக்கேசியன் மக்களின் தேசிய உரிமைகள் தொடர்பான ஈடாட்டம் நிறைந்த விளையாட்டுக்களில் ஈடுபட்ட ஜேர்மன் ஏகாதிபத்தியம் முதலில் ஸாரிசத்துக்கு எதிராகவும் பின்னர் பெரிதும் பரந்த அளவில் எமக்கு எதிராகவும் இந்த மாதிரியை பயன்படுத்தினர். முதலில் நேச கட்சிக்காரர்கள் ஸாரிசத்தின் அனுசரணையோடு ஆஸ்திரிய-ஹங்கேரியிலும் ஜேர்மனியிலும் துருக்கியிலும் மக்களின் "விடுதலை" யைப் பிரகடனம் செய்தனர். இதன் பின்னர் ஸாரிசத்தின் ஆதரவு அவர்களுக்கு இல்லாமல் போனதைத் தொடர்ந்து ரூஷ்யாவின் எல்லைப்புற அரசுகளின் "சுயவிடுதலை"க்காக நின்று வந்தனர்.

"வன்முறை, அடக்குமுறை மூலம் சிருஷ்டிக்கப்பட்ட ஸார் மன்னனின் மரபுரிமையில் இருந்து கிடைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் குடியரசு, தேசிய சுயநிர்ணய உரிமையையும் தேசிய சுதந்திரத்தையும் பிரகடனம் செய்தது. சோசலிசத்தை நோக்கிய இடைமருவு காலகட்டத்தில் இந்த மாதிரியின் சிறப்பு முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டென்றாலும் எமது கட்சி ஒரு நிமிடம் தன்னும் சுயநிர்ணயத்தின் ஜனநாயக அடிப்படைக் கொள்கைகளை ஏனைய சகல வரலாற்று அவசியங்களுக்கும் பணிகளுக்கும் மேலான ஆளுமை படைத்த காரணியாக்கிக் கொண்டது இல்லை". முதலாவதாக உலகளாவிய முதலாளித்துவப் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு போன நிலைமையினுள் ஏகாதிபத்தியவாதிகள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான சுலோகத்தைத் தமது பிற்போக்குத் தேவைகளுக்காக கோலங்காட்டிய விதமும் மார்க்சிஸ்டுகள் அந்த மோசடி சம்பந்தமாக வகித்த புரட்சிகர நிலைப்பாட்டையும் இது தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. இது லெனின் உயிர் வாழ்ந்த காலத்தில்- 1918-21 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ட்ரொட்ஸ்கி எழுதி, வெளியிட்ட ஒரு தொகை கட்டுரைகளில் அடங்கியுள்ள கருத்தாகும். அவர் அதில் "எமது கட்சி" என அழைப்பது லெனினுடன் இணைந்து தாம் இணைத் தலைவர் பதவி வகித்த முன்னர் போல்ஷிவிக் கட்சி எனப் பிரபல்யம் பெற்ற சோவியத் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியாகும்.

உலக முதலாளித்துவ அமைப்பின் முதலாவது பொருளாதார வீழ்ச்சியின் பேரழிவை முதலாவது ஏகாதிபத்திய யுத்தத்தினால் தணித்து விட முடியவில்லை. அதன் பின்னர் இத்தாலியில் பாசிசமும் ஜேர்மனியில் நாசிசமும் அவ்வாறே சீனா, இந்தியா போன்ற காலனித்துவ நாடுகளில் பிரமாண்டமான அளவிலான மக்கட் படுகொலைகள் ஊடாக அள்ளுபட்டுச் சென்ற அந்தப் புயல் 1939ல் ஆரம்பமான இரண்டாம் உலக முதலாளித்துவ அமைப்பினது ஸ்திரப்பாட்டை, ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் குண்டுகளை வீசியதன் மூலம் பல தலைமுறைகளுக்கு மக்களை ஸ்தம்பிக்கச் செய்ததோடு யுத்தத்தினால் நூறு கோடி மக்களை கொன்று தள்ளியதன் பின்னரே மீண்டும் ஸ்தாபிதம் செய்ய முடிந்தது. இத்தகைய மிகவும் பிரமாண்டமான மனித இனத்தின் பேரழிவு பற்றி ஒரு அணுவளவு தன்னும் அறிவு இல்லாமல் யுத்தத்துக்குப் பின்னைய உலகப் பொருளாதாரச் செழிப்பின் மகிமை மூலமும் அதன் மூலம் கண்ணை மூடச் செய்ய கட்டவிழ்த்த தேசியவாத பொருளாதார, அரசியல் பாடைக்கு தோள் கொடுப்பதன் மூலமும் வயிற்றை நிரப்பிக் கொண்ட குட்டி முதலாளித்துவ தீவிரவாத கைக்கூலிகள் "முதலாளித்துவ அமைப்பு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டாலும் வளர்ச்சி கண்டுள்ளதாக" உறுதியாக உளறுகின்றார்கள்.

ஆனால் இப்போது இரண்டாவது, உலகளாவிய ரீதியிலான முதலாளித்துவ பொருளாதார வீழ்ச்சிக்கு நாம் முகம் கொடுக்கின்றோம். அது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் போலல்லாது பூகோளமயமான உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் மூலம் இவ்வுலகின் சகல மூலை முடுக்குகளையும் ஈர்த்துக் கொண்டதும் தழுவிக் கொண்டதுமான நிலைமையின் கீழ் இடம்பெற்றுக் கொண்டுள்ள ஒன்றாகும். ஆதலால் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய உலக அமைப்பு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. அதை புனரமைப்புச் செய்யும் பணியில் ஏகாதிபத்தியவாதிகள் ஈடுபட்டனர். இது இடம் பெறுவது மனித இனத்தின் மனங்களை திருப்தி செய்யும் இலக்கில் அல்ல; முதலாளித்துவ, ஏகாதிபத்தியவாத அமைப்பு எப்போதும் செய்ததைப் போல் தமது இலாப மூட்டையை நிரப்பிக் கொள்ளும் இலக்கிலாகும்.

தேசிய, இனக்குழுக்களை மட்டுமல்லாது மத, ஜாதிகளது சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை பற்றியும் கூச்சலிட்டுக் கொண்டு தத்தமது அதிகார குட்டி அரசுகளை கட்டியெழுப்ப ஏகாதிபத்தியவாதிகள் அந்தந்த மக்கட் குழுக்களின் முதலாளித்துவ கும்பல்களையும் கோஷ்டிகளையும் பயன்படுத்திய வண்ணம் தொழிற்பட்டு வருவதை இன்று நாலா புறத்திலும் கண்டு கொள்ள முடியும். இந்தப் பிற்போக்கு சக்திகளே லெனினது சுலோகங்களை அதற்குரிய இசைவான நிலையில் இருந்து பிடுங்கி எடுத்து, விறகுகாலையாக்கி, (விறகு) கட்டுகளாக்கிய தீவிரவாத கையாள் வேலைக்கு அழைத்துள்ளது.

இந்தப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட விதத்தில் லெனின் தனது முன்நோக்கினை வரலாற்று சடவாதத்தின் அடிப்படையில் அனைத்துலக சக சிந்தனையாளர்களின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்த விதத்தை விளக்கும் பெறுமதி வாய்ந்த சந்தர்ப்பமாக மூன்றாம் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மகாநாட்டில் "தேசிய, காலனித்துவ பிரச்சினை" தொடர்பான பாரம்பரியங்களை நிறைவேற்றியமை விளங்குகின்றது. உத்தேச விடயம் பற்றி தாமே வரைந்த மூலப் பாரம்பரியங்களை ஆணைக்குழுவின் கலந்துரையாடல்கள் ஊடாக திருத்திக் கொண்ட லெனின், அதன் அறிக்கையை மகாநாட்டில் சமர்ப்பிக்கையில் பின்வருமாறு கூறினார்:

## லெனின்

"பிரச்சினை பின்வரும் விதத்தில் எழுப்பப்பட்டது: விடுதலைக்கான பாதையில் காலடி வைத்துள்ளதும் யுத்தத்தின் பின்னர் முன்னேற்றத்தை நோக்கி ஏதேனும் அபிவிருத்தி கண்டுள்ள பின்தங்கிய தேசங்களை பொறுத்த மட்டில் பொருளாதார அபிவிருத்தியில் முதலாளித்துவக் கட்டத்தை தவிர்க்க முடியாது என அங்கீகரிப்பதை நாம் சரியெனக் கொள்வோமா? அப்படி அல்ல என நாம் பதில் அளித்தோம். காலனித்துவ, பின் தங்கிய நாடுகளில் நாம் சுயாதீனமான போராட்ட படையணிகளையும் கட்சி அமைப்புக்களையும் நிர்மாணிப்பதோடு மட்டுமன்றி விவசாயிகளின் சோவியத் சபைகளை அமைக்கும் பொருட்டு உடனடியாக பிரச்சாரத்தை ஆரம்பிக்க வேண்டும். அவை முன்னோடி முதலாளித்துவ நிலைமைகளுடன் ஒத்துப் போக ஆர்வம் காட்டுவதோடு மட்டுமன்றி கம்யூனிஸ்ட் அகிலம் சரியான கோட்பாட்டு அடிப்படையில் காலூன்றி நின்று கொண்டு, முன்னேறிய நாடுகளின் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவோடு பின்தங்கிய நாடுகளில் முதலாளித்துவ கட்டத்தை நோக்கிச் செல்லாமல் சோவியத் அமைப்பை நோக்கி செல்லக் கூடியதும் அபிவிருத்தியின் சில கட்டங்களுக்கு ஊடாக கம்யூனிசத்தை அண்மிக்கும் வல்லமையையும் எடுத்துக் காட்ட வேண்டும்."

இது பின்தங்கிய நாடுகளைப் பொறுத்தமட்டில் ட்ரொட்ஸ்கி 1905ம் ஆண்டளவு நீண்டகாலத்துக்கு முன்னரே முன்வைத்த நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் • சாராம்சம் அன்றி வேறென்ன? முதலாவது உலக யுத்தத்துக்கு முந்திய காலத்தில் லெனின் கொண்டிருந்த கருத்தை, யுத்த நிலைமையின் மத்தியில் உருவான பிரமாண்டமான பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில் லெனினால் மிஞ்சிச் செல்லப்பட்டது என்பதற்கு மேலும் சாட்சியம் அவசியமா? லெனினே தள்ளிவைத்த கருத்துக்களையும் சுலோகங்களையும் ட்ரொட்ஸ்கிசத்துக்கு எதிராகப் போட்டடித்துக் கொண்டும் இரண்டு கட்டப் புரட்சிக் கோட்பாட்டுக்கு உயிரூட்டிக் கொண்டும் ஸ்டாலினிச அதிகாரத்துவம் முன்னெடுத்த பிற்போக்கு நடவடிக்கைகள் சோவியத் யூனியனில் மட்டுமன்றி உலகம் பூராவும் உள்ள தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களுக்குக் கொணர்ந்த பேரழிவுகளைக் கண்டும் கண்டும் தீவிரவாதிகள் அந்த விதிமுறையிலேயே ஈடுபட்டுக் கொண்டுள்ளனர். ஒரே கல்லில் இரண்டு குருவிகளை வீழ்த்தும் வேட்டைக்காரனைப்



போல் அஹிங்சக பெரேரா, சுயநிர்ணய உரிமையை முன்வைத்து தமிழ் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களை தமிழ் முதலாளித்துவ ஆட்சியின் கீழ்க் கொணர முயற்சிக்கும் அதே வேளையில், அரசியல் தீர்வு பொதியை தூக்கிப்பிடித்து கொழும்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களின் ஜனநாயக நன்நெஞ்சத்தை பூதாகாரப்படுத்திக் காட்டி, அதனது இராணுவத் திட்டங்களுக்கும் செங்கம்பளம் விரிக்கிறார்.

பூகோளமயமான உலக முதலாளித்துவ அமைப்பின் கீழ் முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் சமூகப் பெறுமானம் உலகம் பூராவும் முன்னேற்றம் கண்டுள்ளது. அத்தோடு அந்த வர்க்கத்தின் உலக புரட்சிகரப் பணியும் முன்னணிக்கு வந்துள்ளது. ஒடுக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை இன்னமும் பெரும்பான்மையாக உள்ள பின்தங்கிய நாடுகளில் கூட தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் தலைமைப் பாத்திரம் இதன் மூலம் புதிய மட்டத்துக்கு உயர்ந்துள்ளது. இந்த உலக வரலாற்று நிலைமையானது நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் சோசலிச முன்நோக்கினாலும் தலைமையினாலும் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் ஆயுதபாணிகளாக்கும் பணியை வேண்டி நிற்கிறது. அது ஒவ்வொரு இனக் குழுக்களுக்கும் தனித்தனி குட்டி அரசுகளை திணிப்பது அன்றி, உலக சோசலிசத்தை ஈட்டிக் கொள்ளும் முன்நோக்காக விளங்க வேண்டும். தீர்வு காணப்படாத அனைத்து ஜனநாயகப் பணிகளையும் அதற்காக நடாத்தும் போராட்டத்தின் மூலமே வெற்றி கொள்ள முடியும். அந்தப் போராட்டத்தினை ஒவ்வொரு இனக் குழுக்களினுள்ளும் அடைபட்டுப் போய்க் கிடக்கின்றதும் அதன் வளர்ச்சியின் பேரில் தேசியவாத மோசடிகளில் ஈடுபட்டுள்ள மோசடியாளர்களின் அமைப்புக்களினால் அல்லாது அரசியல் ரீதியில் சுயாதீனம் கண்ட உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கட்சியினாலேயே அணிதிரட்ட முடியும். அது அனைத்துலக குழுவினால் தலைமை தாங்கப்படும் நான்காம் அகிலமேயாகும்.

இந்த உலக அமைப்பின் மூலம் 1998ல் ஆரம்பிக்கப்பட்ட உலக சோசலிச வலைத் தளம் (World Socialist Web Site) தனது புரட்சிகரப் பொறுப்புக்களுக்கு தோள் கொடுக்கும் திடசங்கற்பத்தை மட்டுமன்றி யதார்த்தத்தையும் வெளிக் காட்டிக் கொண்டுள்ளது. ஏற்கனவே தமிழ், சிங்கள மொழிகள் உட்பட 9 மொழிகளில் உலகத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையே அனைத்துலக சோசலிசத்தின் முன்நோக்கினை தெளிவுபடுத்தும்- ஸ்தாபிதம் செய்யும் பணியில் அது ஈடுபட்டுள்ளது. முதலாளித்துவ அமைப்பின் கீழ் வர்க்க சமுதாயத்தை ஒழித்துக் கட்டக் கூடிய சமூக சக்தியான தொழிலாளர் வர்க்கம் தோன்றியது போல், அந்த அமைப்பின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய விஞ்ஞான, தொழில் நுட்பங்களை தொழிலாளர் வர்க்கத்தை அதனது வரலாற்றுப் பணிக்கு அணிதிரட்டப் பயன்படுத்த வேண்டும். நான்காம் அகிலத்தின் இலங்கை பகுதியென்ற விதத்தில் சோசலிச சமத்துவக் கட்சி அந்தப் புரிந்துணர்வுடன் உலக சோசலிசத்துக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அதற்கு இணங்க தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் முதலாளித்துவ விதிமுறைகளை இனவாத யுத்தத்தின் மட்டத்துக்கு உக்கிரமாக்கியுள்ள ஒரு நிலைமையில் சோசலிச சமத்துவக் கட்சி, சிங்கள- தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அனைத்துலக சோசலிசத்தின் விதிமுறையில் நிறுத்தி, இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசின் ஒரு பாகமாக சிறீலங்கா- ஈழம் சோசலிச குடியரசை ஸ்தாபிதம் செய்யப் போராடுகின்றது.

இந்தப் பத்திரம் மேற்சொன்ன பணியை இட்டு நிரப்புவதற்கு இலாயக்கான வெகுஜன இயக்கத்துக்கு அத்தியாவசியமான சோசலிச அரசியல் நனவைக் கட்டியெழுப்புவதற்காகவே வரையப்பட்டது. ஆதலால் மரபுவழியான வரலாற்று நூல்களின் அடிப்படையில் நாளும், காலமும் கழிந்து சென்ற விதத்தில் ஒழுங்குமுறையாக சம்பவங்களையும் விடயங்களையும் குவிப்பதற்குப் பதிலாக வரலாற்று நிகழ்வுகளில் இருந்து தற்காலத்தின் பேரில் புரிந்து கொள்ளக் கூடிய படிப்பினைகளை சுருக்கமாகத் தன்னும் அந்தந்த இடங்களில் கவனத்துக்குக் கொணர முயற்சி செய்யப்பட்டது. நிகழ் காலம் வரலாற்றை உள்ளடக்கிக் கொண்டிருப்பதானது வரலாற்று நிகழ்வுகளின் வெளிப்பாடுகளதும் அத்துமீறல்களதும் பெறுபேறாக நிகழ்காலம் சிருஷ்டிக்கப்பட்டு உள்ளதேயாகும். நிகழ்காலத்தில் அவசியமான முற்போக்கு சமூக மாற்றங்களையும் பெரிதும் சிறந்த எதிர்காலத்தை ஊர்ஜிதம் செய்து கொள்வது தொடர்பாகவும் மார்க்சிஸ்டுகள் வரலாற்றைத் திரும்பிப் பார்ப்பது அவசியமான அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகவே ஆகும். இந்நூலின் அணுகுமுறை அதுவே.

பாரம்பரிய வரலாற்று பேச்சாளர்களதும் அவர்களது கையாட்களாக இருந்து கொண்டுள்ள முதலாளித்துவ பல்கலைக் கழகங்களின் ஆசிரியர்களதும் அவர்களின் சீடர்களதும் எதிர்ப்பு இந்நூலுக்கு எதிராகத் தொடுக்கப்படும் என்பதையிட்டு நான் கிடுநடுக்கம் கொள்ளவில்லை. ஆனால் வரலாற்று ஏடுகளைத் தட்டிப் பார்க்கும் போது தன்னும் புதிய அணுகுமுறை அவசியம் என்ற அறிவோடு அந்தச் சவால்களுக்கு முகம் கொடுக்க நான் தயாராகியது, அதை அறிந்து, தெரிந்து கொண்டதேயாகும். இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை சிங்களத்திலும், தமிழிலும் 'கம்கறு மாவத்த', 'தொழிலாளர் பாதை' பத்திரிகைகள் மூலம் இந்நாட்டு தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களுக்கு கொண்டு செல்ல செயற்பட்ட சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

-விஜே டயஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் மௌனம் காக்கிறது: திரைப்பட நெறியாளர் தீபா மேத்தாவை காக்கும் உலக சோசலிச வ பிரச்சாரத்துக்கு எதிரான ஹிந்துஸ்தான் டைம்ஸின் தாக்குதலுக்கு

லின்டா டனன்போம்
மே 19, 2000

இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயோ அல்லது உத்தர பிரதேச முதலமைச்சர் பிரதேஷ் ஸ்ரீ ராம் பிரகாஷ் குப்தாவோ இந்தியாவில் பிறந்த திரைப்பட நெறியாளர் தீபா மேத்தாவின் ஆதரவாளர்களால் கடந்த மூன்று மாதங்களாக அனுப்பி வைக்கப்பட்ட ஆட்சேபனைக் கடிதங்களுக்கு எந்த ஒரு பதிலும் அளிக்கவில்லை.

பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்களான கென் லோசசும், மோஷன் மக்மல்பாவும் உலகம் பூராவுமுள்ள ஒரு தொகை கலைஞர்கள், திரைப்பட நெறியாளர்கள், புத்திஜீவிகளுடன் சேர்ந்து கலைப் படைப்பு சுதந்திரத்துக்கான மேத்தாவின் உரிமை நசுக்கப்படுவதை எதிர்த்து குரல் கொடுத்துள்ளார்கள்.

பாரதீய ஜனதா கட்சி (BJP) தலைமையிலான உத்தரப் பிரதேச மாநில அரசாங்கத்தின் அங்கத்தவர்களுடன் சேர்ந்து கடந்த ஜனவரியில் இந்து சோவினிஸ்டுகள் தீப்பா மேத்தாவின் புதிய படமான 'வோட்டர்' (Water- தண்ணீர்) படப்பிடிப்புக்கு போடப்பட்ட செட்டுக்களை நாசமாக்கியதைத் தொடர்ந்து அவர் தயாரிப்பை இடைநிறுத்தத் தள்ளப்பட்டார். வறிய இந்திய விதவைகளின் வாழ்க்கை நிலைமைகளை சித்தரிக்கும் இத்திரைப்படம் இந்து எதிர்ப்பானது எனக் கூறி, குண்டர்கள் 650,000 டாலர்களுக்கும் அதிகமான சேதத்தை ஏற்படுத்தினர்.

பெப்பிரவரி 06ம் திகதி தீபா மேத்தா சிவில் அமைதியீனத்தை ஏற்படுத்துவதாக உத்தரப் பிரதேச அரசாங்கத்தினால் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து, அங்கிருந்து வெளியேறினார். மேற்கு வங்காள, மத்திய பிரதேச மாநில அரசாங்கங்கள் இத்திரைப்படம் தமது மாநிலங்களில் படமாக்கப்படுவதற்கு ஆதரவு வழங்க முன்வந்ததைத் தொடர்ந்து இந்து அடிப்படைவாதிகள் (Hidu Fundamentalist) தமது போக்கை மாற்றிக் கொண்டனர். முதலில் இவர்கள் மேத்தாவுக்கு கரிபூசவும் அவரின் திறமைகளை நாசமாக்கவும் அவரை பிறரின் கருத்துக்களை திருடும் பேர்வழியாக குற்றம் சாட்டினர். இதைத் தொடர்ந்து அவரின் திரைப்படம் இந்து எதிர்ப்பானது அல்ல எனவும் ஆனால் "காந்தி எதிர்ப்பானது" எனத் தாக்குதல் நடாத்தினர். இதன் நோக்கம், காங்கிரஸ் கட்சியின் செல்வாக்குக்கு உட்பட்ட மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளில் இத்திரைப்படத்துக்கு எதிராக குரோதத்தை தூண்டிவிடுவதாக விளங்கியது.

மேத்தா இத்தாக்குதல்களுக்கு எதிராக ஒரு பகிரங்கமான நிலைப்பாட்டை வகித்தார். அவர் இந்தப் பயமுறுத்தல்களுக்கு அடிபணிந்து போக மறுத்ததோடு பிறரின் கருத்தைத் திருடும் பேர்வழியாக காட்டும் குற்றச்சாட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஆயத்தமானார்.

படப்பிடிப்பைத் தொடர்வதில் அவர் காட்டிய கண்டிப்பான போக்கும், அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் பொது மக்களின் அறிக்கைகளும் மதத் தீவிரவாதிகளை மேலும் ஆத்திரமடையச் செய்தது. பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய அரசாங்கம் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வந்த அதே வேளையில் பிறிதொரு வட்டாரத்தில் இருந்து பிரதிபலிப்புக்கள் கிளம்பின. இந்தியத் தலைநகரான புது டில்லியில் இருந்து வெளிவரும் ஒரு பிரபல தினசரியான 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' (Hidustan Times) தீபா மேத்தாவையும் அவரின் சார்பில் ஒரு அனைத்துலக பிரச்சார இயக்கத்தை ஏற்பாடு செய்த உலக சோசலிச வலைத் தளத்தையும் (WSWS) தாக்கும் ஒரு கீழ்த்தரமான கட்டுரையை மே 3ம் திகதி வெளியிட்டது.

"தண்ணீரால்- பீதி கண்ட தீபா மேத்தா நெருப்பை கக்குகின்றார்" என்ற தலைப்பிலான முன்பக்கத் தலைப்புச் செய்தியில் மேத்தாவை "பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு தலையடி" போடும் ஒருவருக்கு ஒப்பிடுகின்றது. "வெறுப்பு தெரிவிக்கும் இந்திய கடிதங்களை" பிரதமருக்கும் உத்தரப் பிரதேச முதல் அமைச்சருக்கும் அனுப்பிவைக்குமாறு "பார்வையாளர்களை ஊக்குவிப்பதாக" உ.சோ.வ.த. (WSWS) த்தை குற்றம் சாட்டுகின்றது.

இந்தக் கட்டுரையாளரான ஆர்கிஸ் மோகன் தற்சமயம் கனடாவில் வாழும் மேத்தாவை ஒரு "கனடியன்" என வருணிக்கின்றார். அவர் மேத்தாவின் திரைப்பட 'செட்' டுகளுக்கு எதிராக உத்தரப் பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைகளைப் பற்றியோ அல்லது அவர் அப்படத்தை வேறொரு இடத்தில் படமெடுப்பதை தடை செய்யும் வெறிபிடித்த பிரச்சாரம் பற்றியோ மூச்சும் காட்டவில்லை. அதற்குப் பதிலாக மோகன் இந்த அடிப்படைவாதிகளுக்கு சார்பாக அப்பட்டமாக வக்காலத்து வாங்கிக் கொண்டு "பொதுமக்கள் தண்ணீர் திரைப்படமெடுப்பதை எதிர்க்கிறார்கள்" எனக் குறிப்பிடுகின்றார். அத்தோடு மேத்தா ஒழுங்கை குலைக்கும் ஒரு பிரமாண்டமான சதியில் ஈடுபட்டுள்ளதாக காட்டவும் முயற்சிக்கின்றார்.

அந்த 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' கட்டுரை உலக சோசலிச வலைத் தளத்தின் (WSWS) முழு விலாசத்தையும் கொண்டிருப்பதோடு "நெருப்பும் கந்தகமும்" எனப் பொறிக்கப்பட்டுள்ள ஒரு "பிரீவ் கேஸ்" சுமந்து கொண்டுள்ள மூர்க்கமான கண்களைக் கொண்ட மேத்தாவின் கேலிச் சித்திரத்தையும் கொண்டுள்ளது.

மேத்தாவின் பேரில் தீவிரவாத மத வெறியை மேலும் கக்குவதற்கு என்றே எழுதப்பட்ட இக்கட்டுரை வெற்றியீட்டிக் கொண்டுள்ளது போல் தோன்றுகின்றது. இக்கட்டுரை பிரசுரமான தினத்திலும் அடுத்து வந்த மே 3ம் மே 4ம் திகதிகளிலும் மேத்தாவை இனவாத, தேசியவாத அடிப்படையில் கண்டனம் செய்யும் ஒரு தொகை மின் அஞ்சல்கள் (E-Mails) பிரசுரிக்கப்பட்டன.

"தீபா பொலிசாரால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு சிறைக்குள் தள்ளப்பட்டிருக்க வேண்டும். அவளது திரைப்படங்களும் அவளது பயணங்களும் இந்தியாவில் தடை செய்யப்படவேண்டும். அவள் தனது படங்களின் மூலம் இந்தியாவையும் இந்தியர்களையும் பிச்சைக்காரர்களாகவும் ஏழைகளாகவும் சமூக ரீதியில் பின்தங்கியவர்களாகவும் சித்தரிப்பதன் மூலம் அவள் இந்தியர்களுக்கு அவமானத்தை மட்டுமே கொணர்ந்துள்ளாள். அந்தவிதத்தில் கலை என்ற பேரில் சில பணத்தை சம்பாதித்துக் கொள்ளலாம்." அவள் ஒரு இந்து "ஆனால் நாற்றம் கண்டவள்" என ஒருவர் சீறி விழுந்துள்ளார்.



தீப்பா மேத்தா

இன்னொருவர், தனது தாக்குதலில் மேத்தா "பொது மக்களின் உரிமைகளுள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதாக" கண்டனம் செய்தார். ஏனெனில் அவர் இந்தியாவின் சமூகப் பிரச்சினைகளை கையாண்டுள்ளார். இந்த அநாமதேய எழுத்தாளர் தீபா மேத்தா இந்தியாவில் வசிக்காததால் இங்கு படமெடுப்பதை அடியோடு நிறுத்த வேண்டும் என • கோருகின்றார்.

"கிறிஸ்" மேத்தாவின் "பொறி" யினுள் அகப்பட்டுப் போனதாகவும் "உதவாக்கரையான விளம்பரத்திற்காகவும் உ.சோ.வ.த. வை கண்டனம் செய்வதோடு மேத்தா இந்தியாவில் தங்கி இராதவர் என்பதை மீளவும் குறிப்பிடுகின்றார். ... அவர் இந்திய கலாச்சாரம் பெறுமானங்களுக்கு அப்பாற்பட்டவர். ...ஆதலால் அவர் கனடாவிலேயே படம் எடுக்க வேண்டும்" என்கிறார்.

## தீபா மேத்தாவுக்கு ஆதரவாக அனைத்துலக ரீதியில் இந்திய ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்பட்ட கண்டனக் கடிதங்க

இந்தியாவின் சினிமாக கலைஞரான தீபா மேத்தாவின் திரைப்படமான "தண்ணீர்" (Water) படப்பிடிப்புக்கு எதிராக இந்து அடிப்படைவாதிகளின் தலைமையில் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. அவருடைய திரைப்படத்தை பாதுகாக்கும் முகமாக உலக சோசலிச வலைத் தளம் (WSWS) உலக ரீதியாக நடாத்தும் பிரச்சார இயக்கத்திற்கு உலகம் பூராவும் உள்ள கலைஞர்கள், புத்திஜீவிகள், சிந்தனையாளர்களிடம் இருந்து ஆதரவு கிடைத்து வருகின்றது.

'தண்ணீர்' திரைப்படம் இந்து கலாச்சாரத்திற்கு அவமானத்தை ஏற்படுத்துகின்றது என்ற பொய் கதையளப்புக்களின் மத்தியிலேயே இந்து இனவாதக் குழுக்கள், படப்பிடிப்புக்கு எதிரான காடைத்தனமான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளதுடன் ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் தலைமையிலான அரசாங்கம் படப்பிடிப்பை தடை செய்வதற்கு ஆதரவு வழங்கியுள்ளது. இதுவே இந்தியாவுக்குள் கலை கலாச்சாரத்துக்கும், அறிவுத்துறைக்கும் இருக்கின்ற ஜனநாயக உரிமை, சுதந்திரம் ஆகும். இது மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக தொடுத்து வரும் தாக்குதலின் மேலும் ஒரு படியாகும்.

இத்தாக்குதலுக்கு எதிராக உலக ரீதியாக உள்ள கலை கலாச்சார அமைப்புக்கள், புத்திஜீவிகளிடம் இருந்து எழுந்த எதிர்ப்புக்களும், உலக சோசலிச வலைத் தளத்தின் போராட்டத்திற்கு ஆதரவு காட்டும் அறிக்கைகளும் உலக சோசலிச வலைத் தளத்துக்கு கிடைத்துள்ளன. அவற்றில் ஒரு பகுதியை இங்கு பிரசுரிக்கின்றோம்.

### இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி. குமாரி ஜயவர்தன

(இலங்கையின் முன்னணி வரலாற்று ஆசிரியர். இலங்கை தொழிலாளர் இயக்க வரலாறு உட்பட பல நூல்களின் ஆசிரியர்)

"2000 ஆண்டு ஜனவரி 1ம் திகதி காசிரக்ஷா சங்கார்ஷ் சமித் (கே.ஆர்.எஸ்.எஸ்.) அமைப்பினுடைய அங்கத்தவர்கள் தீபா மேத்தாவின் புதிய திரைப்படமான "தண்ணீர்" (Water) திரைப்பட படப்படிப்பை தடுத்தும் படப்பிடிப்பு உபகரணங்களுக்கு தீ மூட்டியும், சுதந்திர நாட்டில் சுதந்திரமாக கருத்து தெரிவிக்கும் ஜனநாயக உரிமையை பறித்துள்ளனர். படப்பிடிப்பு இடம்பெற, உரிய அதிகாரி அனுமதித்ததன் பிற்பாடு இச்சம்பவம் நடந்துள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய அழிவுகரமான நடவடிக்கையும், வன்முறையும் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பின்மை, பீதி, பயங்கரத்தையும் ஏற்படுத்துவதோடு சுதந்திர ஆக்க நடவடிக்கைகளையும் பாதிக்கின்றது.

இளம் பருவ விதவைகளை பாலியல் விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் காசி நகரத்தை சித்தரிக்கும் இத்திரைப்படம் இந்து கலாச்சாரத்தை அவமானப்படுத்துகின்றது என்பதே மேத்தாவுக்கு எதிரான குற்றச்சாட்டாகும். இளம்பருவ விதவைகள் தொடர்பான பிரச்சினை, 19ம் நூற்றாண்டின் கடைப்பகுதி தொடக்கம் இந்தியாவுக்குள் சீர்திருத்த இயக்கத்தின் மையமாக உள்ளது.

இத்தாக்குதல் இந்து சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் ஒடுக்குமுறை சம்பந்தமான கலந்துரையாடல்களைத் தடுக்கும் முகமாக இந்து அடிப்படைவாதிகள் சமயம், கலாச்சாரம் என்ற பெயரில் விதவைகளை ஒடுக்கும் உரிமையை பாதுகாக்கும் நடவடிக்கை. திரைப்பட படப்பிடிப்புக்கு இடம் கொடுத்தால் இந்தியாவில் பால்ய விவாகம் என்ற சமூக அழிவு அம்பலமாகும் என அஞ்சுகின்றனர். மாநில அரசாங்கத்துக்கும், வன்முறை தாக்குதல்களுக்கும் எதிராக, குற்றஞ் சுமத்தப்படவேண்டும் என இந்திய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

வி.கே. ஜயவர்தன.

### அமெரிக்க நேஷன் பத்திரிகையின் சினிமா விமர்சகர் ஸ்டுவாட் கிளவுள்ஸ்.

தீபா மேத்தாவுக்கும், அவரின் புதிய படத் தயாரிப்புக்கும் எதிராக கோழைத்தனமான தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. நிராயுத பாணியான பெண்ணுக்கு எதிராக அரசாங்கம், அரசியல் கட்சி, சமய அமைப்புகள், தொடுக்கும் தாக்குதலை "கோழைத்தனம்" என்றே கூற முடியும். இதன் மூலம் அவரை திரைப்படத் துறையிலிருந்து வெளியேற்ற முடியுமா.

### ஜேர்மன் ருட்கர்ஸ் பல்கலைக்கழகத்தில் கைச்சாத்திடப்பட்ட அறிக்கை:

இந்தியப் பிரதமருக்கு,

ருட்கார்ஸ் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், அலுவலக ஊழியர்களான கீழே கையொப்பமிடும் நாம் இந்திய நெறியாளர் தீபா மேத்தாவின் சமீபத்திய திரைப்படமான 'வோட்டர்' தயாரிப்பை நிறுத்திவிட இந்து தீவிரவாதிகள் மேற்கொண்டு வரும் பிரச்சாரத்தை கண்டிக்கின்றோம். மேத்தாவின் திரைப்படத் தயாரிப்புக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் நாம் உங்களின் அரசாங்கத்தை வேண்டுகின்றோம்.

பாரதீய ஜனதா கட்சியுடன் சேர்ந்த இந்து அடிப்படைவாதிகள் நடிகர், நடிகைகளுக்கும், ஊழியர்களுக்கும் எதிராக இடம்பெற்ற வன்முறை தாக்குதல்களின் பின்னர் 'வோட்டர்' திரைப்படத் தயாரிப்பை இடைநிறுத்த கடந்த மாதம் மேத்தா நெருக்கப்பட்ட விடயம் எமது கவனத்துக்கு கொணரப்பட்டுள்ளது. ஜனவரி 30ம் திகதி மாவட்ட பா.ஜ.க. அரசியல்வாதிகள் தலைமையில் இந்து தீவிரவாதிகள் படத்தின் செட்டுகளை நாசமாக்கினர். அதைத் தொடர்ந்து உத்தர பிரதேச மாநில பா.ஜ.க. அரசாங்கம் பெப்பிரவரி 6ம் திகதி மேத்தாவை மாநிலத்தை விட்டு வெளியேறும்படி நெருக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

கலைச் சுதந்திரத்துக்கு எதிராக வளர்ச்சி காணும் தாக்குதல் ஒரு அனைத்துலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சிச வலைத் தளத்தின் ...ங்கு பதில்

ஒருவர் இந்தத் தர்க்கத்தை அதன் முடிவுக்கு இட்டுச் செல்லின் கடந்த பல நூற்றாண்டுகளாக சிருஷ்டிக்கப்பட்ட பெரிதும் அழகானதும் சக்திவாய்ந்ததுமான கலைப் படைப்புக்கள்- ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் புகினியின் இசை நாடகங்கள் உட்பட (Opera) - இன்றைய உலகின் வெளிச்சத்தை தரிசித்திருக்க மாட்டா.

எந்த ஒரு கடிதங்களும் ஹிந்துஸ்தான் டைம்சின் கட்டுரையைப் பற்றிக் குறிப்பிடுவதாய் இல்லை. அல்லது அவை எந்த ஒரு அமைப்புடனும் தம்மை இணைத்துக் கொள்வதாய் இல்லை. ஆனால் அவை மேத்தாவை பயமுறுத்தும் இந்து அடிப்படைவாதிகளின் பிரச்சாரத்துடன் நேரடியாக இணைந்து கொண்டிருந்தன. அவை தீபா மேத்தா தனது படத்தை தயாரிக்கவுள்ள அடிப்படை ஜனநாயக உரிமையை வழங்க மறுத்துள்ளன.

'ஹிந்துஸ்தான் டைம்சுக்கு' அனுப்பி வைத்த ஒரு கடிதத்தில் மேத்தா பின்வருமாறு பிரகடனம் செய்தார்: "நான் என்னை ஒரு சர்ச்சைக்குரிய திரைப்பட நெறியாளராக ஒரு போதும் நினைத்தது கிடையாது. எனது படங்கள் சர்ச்சைக்கான நோக்கினைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையும் அல்ல. நான் "சர்ச்சைக்குரிய திரைப்பட நெறியாளர்" என்ற முத்திரை குத்திக் கொள்ள ஒரு போதும் ஆசைப்பட்டது கிடையாது.... மனவருத்தத்துக்கு உரிய விதத்தில் "ஹிந்துத்துவ பிரிகேட்" (Hindutva Brigade) எனது படங்களை இந்த அடிப்படையில் பார்க்கவே விரும்புகிறது. இந்தப் பொறுப்பற்ற கட்டுரை "சர்ச்சைக்குரிய" முத்திரையை பிரச்சாரம் செய்ததோடு உலகம் பூராவும் உள்ள சினமடைந்த இந்தியர்களிடமிருந்து வெறுப்பு அஞ்சல்களையும் உற்பத்தி செய்தது. ஒரு போலியான எடுகோளில் இருந்து திரு. மோகன் தேசியவாதக் கொதிப்புடன் கூடிய தீச்சுவாலைகளைத் தூண்டிவிட்டுள்ளார். அவர் தனது உணர்ச்சி ததும்பும் கட்டுரையை எழுதிய வேளையில் அவரின் உள் நோக்கமாக இருந்தது இதுவல்லவா"?

மோகனின் கட்டுரை தொடர்பாக எழுதுகையில் தீபா மேத்தாவின் பூமி (Earth) :1947 என்ற திரைப்படத்தின் திரைக்கதையின் அடிப்படையாக விளங்கிய 'த ஐஸ்- கன்டி மேன்' (The Ice- Candy Man) என்ற நூலின் ஆசிரியரான பப்சி சித்வா சுட்டிக் காட்டியதாவது: "இது தணிக்கைக்கு முன்னோடியானது. இன்றைய பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான அரசாங்கத்தின் கலாச்சாரப் பொலிசார் இப்பாத்திரத்தை வகிப்பவராகத் தெரிகிறது. இந்தத் திரைப்படத்துக்கான திரைக் கதையை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்த தகவல், ஒலிபரப்பு அமைச்சர் அருண் ஜெயிற்லி இப்போது 'வோட்டர்' படப்பிடிப்பில் ஈடுபடுவதற்கான அனுமதியை இரத்துச் செய்யும் சாத்தியம் இருந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் இது ஒரு திருட்டு வேலை. இது உண்மையானால் நான் இந்தக் குற்றச் சாட்டை ஆர்.எஸ்.எஸ். நெருக்குவாரங்களுக்கு இடமளிக்கும் விதத்தில் "இந்து எதிர்ப்பு" திரைக் கதையை ஒழித்துக் கட்டுவதற்கு சாதகமாகப் பயன்படுத்த முடியும்." (ஹிந்துஸ்தான் டைம்ஸ்- மே 7)

(இந்த ஆர்.எஸ்.எஸ். இயக்கம் 1948ல் மகாத்மா காந்தியைப் படுகொலை செய்வதில் சம்பந்தப்பட்டது)

சித்வா தொடர்ந்து கூறுகையில் குறிப்பிடுவதாவது: "இந்தச் சகல கொடூரங்களும் படம் இன்னமும் தயராக முன்னரே இடம்பெற்றுள்ளது. இந்தக் குழப்பத்தில் கைபோட்டுக் கொண்டுள்ளது. பாசிசத்தின் கரங்களாக இல்லாது இருக்குமானால் இந்தப் புகைச்சலில் ஒருவர் நகைச்சுவையைக் காணலாம். தமது தேர்தல் தொகுதியில் இருந்து பெரும் ஆதரவைத் திரட்ட இவர்கள் தீபாவை பாவிக்கிறார்கள். நாட்டைப் பீடித்துள்ள வறுமையையும் நோய்களையும், அறியாமையையும் ஒழித்துக் கட்ட எவரும் ஒரு சிறிய அளவில் தன்னும் உதவாமல் இருக்க முடியாது".

தீபா மேத்தாவை காக்கும் பிரச்சார இயக்கத்தை தொடுத்த வேளையில் உலக சோசலிச வலைத் தளம், இந்து தீவிரவாதிகளின் பிரச்சாரம் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட நிகழ்வு அல்ல என எச்சரித்தது. இந்து சமயத்தின் அடிப்படையிலான ஒரு வலதுசாரி தேசியவாத அரச சித்தாந்தத்தை இந்தியாவில் திணிப்பது அதன் ஒரு பாகமாகும். பெரும்பான்மையினரின் வாழ்க்கை நிலைமைகள் சீரழிந்து போய்க் கொண்டுள்ள ஒரு நிலைமையில் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையேயான சமூக ஆதாளபாதாளம் ஆழித்து வருகின்றது. பாரதீய ஜனதா கட்சி இந்திய மக்களை சாதி, மத அடிப்படையில் பிளவுப்படுத்தும் பொருட்டு இனவாத உணர்வுகளைத் தூண்டி விடுவதில் முன்னணியில் நின்று கொண்டுள்ளது.



சபானா அஸ்மிட்டும் நந்திதாதாசும்

நாம் மீண்டும் திரைப்படக் கைத்தொழிலில் உள்ளவர்களையும் சகல கலைஞர்களையும் தொழிலாளர்களையும் எழுத்தாளர்களையும் தீபா மேத்தாவை காப்பது தொடர்பாக ஒரு நிலைப்பாட்டை வகிக்குமாறும் ஜனநாயக, கலை உரிமைகள் மீதான நச்சுத்தனமான தாக்குதல்களை எதிர்க்குமாறும் வேண்டுகின்றோம்.

ஆட்சேபனை கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Atal Bihari Vajpayee
Prime Minister of India
South Block, Raisina Hill,
New Delhi, India- 110011
Fax-91-11-301 9545/91- 113016857

Shri Ram Prakash Guptha, Chief Minister,
Uttar Pradesh S,
Kalidas Morg, Lucknow, India.
Fax-91-522-239234/91-522-230002
Email- cmup@upindia.org& cmup@up.nic.in

தயவு செய்து அனைத்து ஆட்சேபனை கடிதங்களின் பிரதிகளையும் editor@wsws.org மூலம் உ.சோ.வ.த. வுக்கு அனுப்பி வையுங்கள்.

## ...டிதங்கள்

தோற்றப்பாடாகும். நியுயோர்க் நகரின் புரூக்ளின் கலை தொல்பொருட் காட்சிசாலைக்கான நிதியை வெட்டிக் குறைக்க நகர மேயர் கியூலியானி முயன்றார். அங்கு இடம்பெற்ற கண்காட்சி- Sensation- "கத்தோலிக்க மதத்தை அவமானம் செய்வதாக" அவர் கருதினார்.

நாம் இந்தத் தாக்குதல்களை பெரிதும் பாரதூரமான விடயமாகக் கொள்வதோடு தீபா மேத்தாவுக்கு எதிரான தங்களின் ஆத்திரமூட்டும் பிரச்சார இயக்கத்தை உடனடியாக நிறுத்தும்படி உங்கள் அரசாங்கத்தையும், உங்கள் கட்சி அங்கத்தவர்களையும் வேண்டுகின்றோம் கலைத்துறை வெளிப்பாட்டு சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த முயலும் அரசாங்கங்கள் அங்ஙனம் செய்வது அவற்றினால் தமது விதிமுறைகள் சம்பந்தமாக எதுவிதமான ஜனநாயக கலந்துரையாடலையும் சகித்துக் கொள்ள முடியாது போகும் நிலையிலாகும். வரலாறு இதனை மீண்டும் மீண்டும் ஊர்ஜிதம் செய்துள்ளது. மேத்தாவுக்கு எதிரான பா.ஜ.க. வின் காடைத்தனங்கள் இந்திய பொதுமக்களை சாதி, மத அடிப்படையில் கூறுபோடும் இன்றைய முயற்சிகளை எதிர்க்கும் சகல கலைஞர்களையும் புத்திஜீவிகளையும் வாய்மூடச் செய்வதை இலக்காகக் கொண்டவை.

கலை, புத்திஜீவி சுதந்திரத்தின் மீது பா.ஜ.க.வும் மத தீவிரவாதிகளும் நடாத்தும் தாக்குதல்களுக்கு எதிராக ஊர்வலம் சென்ற இந்திய மாணவர்களுடனும் ஏனைய சகலருடனும் நாம் தோழமையுடன் கிளர்ந்து எழுகின்றோம்.

## சோ.ச.க. மே தினம்- 2000 கூட்டமும் ஊர்வலமும்



சோ.ச.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ் உரையாற்றுகிறார்



ஊர்வலத்தில் ஒரு கட்டம்



ஊர்வலத்தில் ஒரு கட்டம்



ஊர்வலத்தில் ஒரு கட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

## மார்க்சிசத்தின் குட்டி முதலாளித்துவ எதிரிகளுக்கு ஒரு பதில்

### நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

அமெரிக்க ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் ஒரு தொடர் கட்டுரைகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தயார் செய்யப்பட்ட பதில் 1998 மே இதழில் இருந்து தொழிலாளர் பாதையில் பிரசுரமாகின்றது

"இங்கிலாந்து 1845லும் 1885லும்" என்ற தலைப்பிலான ஒரு புகழ் பெற்ற கட்டுரையில் எங்கேல்ஸ் தானியச் சட்டங்கள் (Corn Laws) 1846ல் இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வந்த தசாப்தங்களில் பிரித்தானிய கைத்தொழில்கள் துரித வளர்ச்சி கண்டதைத் தொடர்ந்து தொழிற்சங்கத்தின் பேரிலான உற்பத்தி முதலாளி வர்க்கத்தின் மனப்பான்மையில் ஏற்பட்ட மாற்றத்தை வருணித்துள்ளார்:

"இதனால் இரண்டு வர்க்கங்களுக்கும் இடையேயான உறவுகளில் ஒரு படிப்படியான மாற்றம் ஏற்பட்டது.

ஒரு காலத்தில் சகல உற்பத்தியாளர்களதும் வீணான அச்சத்துக்குக் காரணமாக இருந்த பக்டரிச் சட்டங்கள் மனமுவந்து சமர்ப்பிக்கப்பட்டதோடு மட்டுமன்றி சகல தொழில்களையும் ஒழுங்குபடுத்தும் சட்டங்களாக அவை விஸ்தரிக்கப்பட்டமையும் சகித்துக் கொள்ளப்பட்டது. தொழிற்சங்கங்கள் பின்னர் பிசாசைத் தாங்கள் கண்டுபிடித்துவிட்டதாகக் கருதியதோடு தற்சமயம் தொழிலாளர்களிடையே உறுதியான பொருளாதாரத் தத்துவங்களைப் பரப்புவதற்கான பயனுள்ள சாதனங்களாகவும் பெரிதும் சட்டரீதியான நிறுவனங்களாகவும் செல்லம் கொண்டாடப்பட்டு ஆதரவளிக்கப்பட்டன.

1848 வரை சிறப்பாக, எஜமானர்களால் அவர்களது சொந்தக் கால நேரத்தில் தூண்டிவிடப்பட்ட வேலைநிறுத்தங்களைக் காட்டிலும் பெரிதும் கடைகெட்டது வேறொன்றும் கிடையாது எனக் கொள்ளப்பட்டது கூட இப்போது படிப்படியாக சந்தர்ப்பத்துக்கேற்ற பெரிதும் பயனுள்ளதாகக் கொள்ளப்பட்டது". ('தொழிற்சங்கங்கள் தொடர்பாக மார்க்சும் எங்கேல்சும் கூறியவை' -பக்கம்-130)


"பெரும் தொழிற்சங்கங்கள்" பற்றி அவர் கூறியதாவது: "தொழிலாளர் வர்க்கத்திடையே அவர்கள் உயர் குலத்தவர்கள். அவர்கள் தமக்கென ஒரு சாதகமான வசதி வாய்ப்பான அந்தஸ்த்தைப் புகுத்துவதில் வெற்றி கண்டுள்ளனர். அத்தோடு அவர்கள் இதை இறுதியாகவும் கொள்கின்றனர். இவர்கள் திருவாளர்கள் லியோன் லெவியினதும் கிபனினதும் மாதிரி உழைக்கும் மக்கள். சிறப்பாக எந்தவொரு உணர்ச்சிமிக்க முதலாளிக்கும் பொதுவில் முழு முதலாளி வர்க்கத்துக்கும் அவர்கள் தொடர்பு வைத்துக்கொள்ள உண்மையில் இவர்கள் இன்று பெரிதும் நல்ல ஆட்கள்.

"ஆனால் உழைக்கும் மக்களின் பிரமாண்டமான எண்ணிக்கையினரோ அவர்கள் முன்னொரு போதும் இல்லாத விதத்திலான அவலங்களும் பாதுகாப்பு இன்மையும் குறைந்த வாழ்க்கையை நடாத்துகின்றார்கள்". ('தொழிற்சங்கங்கள் தொடர்பாக மார்க்சும் எங்கேல்சும் கூறியவை'- பக்கம்-131)


முதலாம் அகிலத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையேயான உறவுகள் ஸ்பார்ட்டசிஸ்டுகள் சித்தரிப்பதற்கு முரணாக முக்கியமாக குரோதம் மிக்கவை. நேபிள்சில் ஒரு அனைத்துலக பகுதியை (Section of the International) அமைக்க உதவிய ஒரு இத்தாலிய சோசலிஸ்டான கார்ளோ கபியேராவுக்கு 1871ல் எழுதிய கடிதத்தில் எங்கேல்ஸ் குறிப்பிட்டதாவது: "தொழிற்சங்க இயக்கம்- சகல பெரியதும் பலம் வாய்ந்ததும் வளம் கொண்டதுமானவற்றுள்- அதன் முன்னேற்றத்துக்கான ஒரு கருவியாக அல்லாது பொது இயக்கத்துக்கு ஒரு பெரிதும் தடையாகி உள்ளது." ('தொழிற்சங்கங்கள் தொடர்பாக மார்க்சும் எங்கேல்சும் கூறியவை- பக்கம்-81)

1887ல் ஒரு ஸ்கொட்லாந்து சோசலிஸ்ட்டான ஜோன் மகோனுக்கு எழுதிய கடிதத்தில் அவர் கூறியதாவது: "தொழிற்சங்கங்களின் தலைவர்களை பற்றி நீங்கள் கூறுவது பெரிதும் உண்மை. அனைத்துலகத்தின் ஆரம்பத்தில் இருந்தே நாம் அவற்றை எதிர்த்துப் போராடி இருக்க வேண்டும். அவற்றில் இருந்து மக்டொனால்டுகளும், பேர்டுகளும் கிறீமர்ஸ்களும் கொவல்சுகளும் தலையெடுத்துள்ளதோடு பராளுமன்றவாதப் போக்கிலான அவர்களின் வெற்றிகள் சிறிய தலைவர்களை அவர்களது நடவடிக்கை மாதிரிகளைக் கடைப்பிடிக்க ஊக்குவிக்கிறது". ('தொழிற்சங்கங்கள் தொடர்பாக மார்க்சும் எங்கேல்சும் கூறியவை- பக்கம்-133)

முதலாம் அகிலத்தின் வாழ்க்கைக் காலத்தில் மார்க்ஸ் தொழிற்சங்கங்களதும் வேலைநிறுத்தப் போராட்டங்களதும் அபிவிருத்தியையிட்டுக் கணிசமான அளவு கவனம் செலுத்தினார். அத்தோடு அவர் தொழிற்சங்கங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர விடுதலைக்குப் பங்களிப்புச் செய்யமுடியும் என்பதற்கான சாத்தியத்தையும் ஏற்படுத்தினார். எவ்வாறெனினும் மார்க்ஸ் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு சுயாதீனமான அரசியல் அமைப்புக்கான ஒரு பதிலீடாகத் தொழிற்சங்கங்கள் விளங்க முடியும் என்ற நப்பாசையைக் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் அனைத்துலகத்தின் (International) பஸில் (Basle) மகாநாட்டில் ஒரு அனைத்துலகத் தொழிற்சங்க சம்மேளனத்தை ஸ்தாபிதம் செய்யவேண்டும் எனக் கோரி ஒரு பிரான்சியப் பேராளர் சமர்ப்பித்த ஒரு பிரேரணையை மார்க்ஸ் எதிர்த்துப் பேசினார் அத்தகைய ஒரு சங்கம் "எதிர்காலத்தில் நிஜ கம்யூன்" ஆக விளங்கும் எனவும் அந்தப் பேராளர் பிரகடனம் செய்தார்".



கார்ல் மார்க்ஸ்



ஏங்கேல்ஸ்

மார்க்சின் உரையின் ஒரு அறிக்கையின்படி: "அவர் (மார்க்ஸ்) இதுதான் எதிர்காலத்தின் கம்யூன் என்பதை மறுக்கின்றார். ஏனெனில் (இந்த) திட்டம், தொழிலாளர்களின் அடிமைத்தனத்துக்கு முக்கிய காரணியாக விளங்கும் உழைப்புப் பகுப்பில் சாய்ந்து கொண்டுள்ளது. இது பல தொழிலாளர்களைச் சிறிது முன்னேற வைத்தாலும் இதை ஒரு உயர்ந்த இலட்சியமாக முன்வைக்க முடியாது". ('தொழிற்சங்கங்கள் தொடர்பாக மார்க்சும் எங்கேல்சும் கூறியவை- பக்கம்-196)

மற்றொரு அறிக்கை மார்க்ஸ் பின்வருமாறு தெரிவித்ததாகக் குறிப்பிடுகின்றது: "தொழிற்சங்கங்கள் தனித்து நிற்பது பலமற்றது- அவை ஒரு சிறுபான்மையினராகவே இருப்பர். இம்மக்கள் அனைத்துலக செல்வாக்குகளை நேரடியாகக் கொண்டுள்ள போதிலும் இவர்கள் தம்பின்னால் பிரமாண்டமான பாட்டாளிகளைக் கொண்டில்லை. தொழிலாளர்களை வெற்றிகொள்வதற்கு அனைத்துலகத்துக்கு (International) தொழிற்சங்க அமைப்புக்கள் அவசியப்படவில்லை. அனைத்துலகத்தின் கருத்துக்கள் அவர்களை உடனடியாக ஈர்த்துக்கொள்ளும். தொழிலாளர்களிடையே ஒரு நம்பிக்கையை ஊக்குவிக்கும் தொழிற்சங்கம் அது மட்டுமே". (தொழிற்சங்கங்கள் தொடர்பாக மார்க்சும் எங்கேல்சும் கூறியவை- பக்கம்-82)

எங்கேல்ஸ் தமது வாழ்நாட்களின் இறுதி வருடங்களில் பெரிதும் ஒடுக்கப்பட்ட தொழிலாளர் பகுதியினரிடையே- குறிப்பாக லண்டன் கிழக்கு முனை (London's East End) வறிய தொழிலாளர்களிடையே- தொழிற்சங்கங்களின் தோற்றமும் 1889ம் ஆண்டின் துறைமுகத் தொழிலாளர்களின் மாபெரும் வேலைநிறுத்தம் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களும் பிரித்தானியத் தொழிலாளர்களின் ஒரு பிரமாண்டமான சோசலிச இயக்கத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய ஒரு புதியதும் போர்க்குணம் மிக்கதுமான தொழிற்சங்க வாதத்துக்கு சமிக்கை செய்தது. மார்க்ஸின் மகளான எலீனர் (Eleanor) இந்தத் தொழிற்சங்கங்களில் ஒன்றான எரிவாயு தொழிலாளர்களின் ஆரம்ப காலப் போராட்டங்களிலும் அத்தோடு தொழிற் கட்சியின் ஸ்தாபிதத்துக்கு இட்டுச் சென்ற அரசியல் பிரச்சார இயக்கங்களிலும் ஒரு முன்னணிப் பாத்திரம் வகித்தார். ஆனால் 1895ம் ஆண்டில் அவர் காலமான சமயத்தில் எங்கேல்ஸ் "புதிய தொழிற்சங்கவாதத்தின்" தலைவர்கள் தமது முன்னோடிகளைப் போல அதே பழமைவாதத்தினை பின்பற்றுவதில் ஆர்வம் காட்டியதை தமது ஆக்கங்களில் வன்மையாகச் சாடினார்.

## ஜேர்மன் சமூக ஜனநாயகத்தின் படிப்பினைகள்

ஜேர்மன் சமூக ஜனநாயகத்தினுள், பிரித்தானிய தொழிற்சங்கங்கள் பொதுவில் முதலாளித்துவ தொழிற்சங்கங்கள் என்றே அழைக்கப்பட்டன. சோசலிச இயக்கத்தினால் ஸ்தாபிதம் செய்யப்பட்டதும் புரட்சிகர முகாமின் உத்தியோகபூர்வமான பாகமானதுமான ஜேர்மன் தொழிற்சங்கங்கள் ஒரு வித்தியாசமான பாத்திரத்தை வகிக்கும் என உணரப்பட்டது. ஆனால் ஜேர்மன் கைத்தொழில் துரிதமாக வளர்ச்சி கண்டதாலும்- குறிப்பாக 1890களின் அரையிறுதி பகுதியில்- தொழிற்சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் நிதியும் பெரிதாக வளர்ச்சி கண்டதாலும் அவை விரைவில் தமது பிரித்தானிய சகாக்களின் அதே பிற்போக்குப் பண்பினைக் காட்டிக் கொண்டன.

இரண்டு தசாப்த காலம் இங்கிலாந்தில் நாடுகடத்தப்பட்டு வாழ்ந்து வந்த எடுவார்ட் பேர்ண்ஸ்டைன் (Eduard Bernstein) தமது திரிபுவாதக் கோட்பாடுகளுக்கு பெருமளவில் பிரித்தானிய தொழிற்சங்கங்களின் "வெற்றி"யை அடிப்படையாகக் கொண்டார். ஆங்கிலேயத் தொழிற்சங்கங்கள் பாராளுமன்ற செயற்பாட்டுடன் சேர்ந்து முதலாளித்துவ சுரண்டல் போக்குகளை அதிகரித்த முறையில் தோற்கடிக்கவும் இறுதியாக சோசலிசத்துக்கு ஒரு சமாதான ரீதியில் இடைமருவிச் செல்லவும் கூடிய இயலளவை கொண்டுள்ளதாக அவர் வாதிட்டார்.

சமூக ஜனநாயத்தின் தலைமை- ஆரம்பத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட- மார்க்சிச மரபுகள் மீதான பேர்ண்ஸ்டைனின் தாக்குதலை உத்தியோகபூர்வமாக எதிர்த்த அதே வேளையில் அவரின் சந்தர்ப்பவாத வேலைத்திட்டம் ஜேர்மன் தொழிற்சங்கங்களின் சமூக நலன்களையும் அரசியல் சாய்வுகளையும் இணைத்துக் கொண்டது. பின்னையது விரைவில் சமூக ஜனநாயகத்தினுள் சந்தர்ப்பவாத போக்குக்கான மிகவும் முக்கியமான அடிப்படையாகியது. 20பதாம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் கட்சித் தலைமை அதிகரித்த அளவில் தொழிற்சங்கங்களின் வலதுசாரி அரசியலை அதிகரித்த விதத்தில் கடைப்பிடித்தது. அத்தோடு இப்போக்கானது 1914ல் ஜேர்மன் சமூக ஜனநாயகத்தின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்ற அரசியல் சீரழிவின் இருதயத்திலும் இடம் பெற்று இருந்தது.

றோசா லக்ஷம்பேர்க், தேசிய சந்தர்ப்பவாதப் போக்குக்கு எதிரான கட்சியின் மார்க்சிசக் கன்னையின் அரசியல் கோட்பாட்டுப் போராட்டங்களில் முன்னணியில் நின்றார். அவரின் கண்டனங்களில் பெருமளவிலானவை தொழிற்சங்கக் கருவிகளில் இருந்து வந்த அதனது எதிர்ப்பாளருக்கு எதிரானவையாக அமைந்திருந்தன. பேர்ண்ஸ்டைனுக்கு எதிரான றோசா லக்ஷம்பேர்க்கின் புத்திசாதுரியமான வாதமான சீர்திருத்தமா அல்லது புரட்சியா (Reform or Revolution) என்பது பெருமளவில் தொழிற்சங்க வாதத்திற்கு ஒரு புரட்சிகரச் சக்தியை வழங்குவதை நிராகரிப்பதாக விளங்கியது. அவற்றின் அவசியத்தை ஏற்றுக் கொண்ட அதே வேளையில் அவர் தொழிற்சங்கங்களின் முயற்சிகளை அவர் "சிசிபஸ்சின் (ஒரு கிரீஸ் நகர மன்னன்) வேலை" என அழைத்தார். இறுதியில் அவர்களின் வெற்றிகள் பொருளாதார, வர்த்தக கூட்டினால் நிர்ணயம் செய்யப்பட்டதோடு ஒரு காலப் பகுதியில் கண்ட வெற்றிகள் இன்னொரு காலப்பகுதியில் இழக்கப்பட்டன என விளக்கினார். மேலும் எந்தளவுக்கு அதிகமாகப் பொருளாதாரம் ஒரு அனைத்துலகப் பரிமாணத்தில் வெற்றி காண்கின்றதோ அந்தளவுக்கு தொழிற்சங்கங்களின் தேசிய தகவமைவுகள் தாக்கிப் பிடிப்பது குறைந்து போகின்றது என அவர் பிரகடனம் செய்தார்.

ஜேர்மனியின் தேசிய கைத்தொழிலின் வளர்ச்சியோடு சேர்ந்து தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததும் தொழிற்சங்கத் தலைமைகள் சுயாட்சி கோரி கிளர்ச்சியில் ஈடுபட்டனர். தாம் நாளாந்தப் போராட்டங்களின் ஒழுங்கமைப்பாளர்கள் பாத்திரத்தை கொண்டிருக்கும் நிலையில் கட்சியின் தீர்மானங்களில் இருந்து சுயாதீனமாக இருப்பது அவசியம் என வாதிட்டனர். லக்ஷம்பேர்க் இந்தக் கருத்துப்பாட்டுக்கு எதிரான போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

இருபதாம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில்- சிறப்பாக 1905ம் ஆண்டின் ரூஷ்யப் புரட்சியின் பின்னர்- இம்முரண்பாடு பெரிதும் உக்கிரம் கண்டது. லக்சம்பேர்க் புரட்சியைத் தழுவிக் கொண்டதோடு இது பாட்டாளி வர்க்கப் புரட்சி ரூஷ்யாவில் மட்டுமன்றி ஐரோப்பாவை தழுவிய விதத்தில் பரந்த ரீதியில் தோன்றுவதைக் குறித்து நிற்பதாக வலியுறுத்தினார். இதற்கு மாறாகத் தொழிற்சங்கங்கள் ரூஷ்ய நிகழ்வுகளின் பேரில் திகில் அடைந்ததைக் காட்டிக் கொண்டன.

ஜேர்மன் முதலாளித்துவத்தின் வரம்பினுள் சமாதான ரீதியானதும் படிப்படியானதுமான வளர்ச்சி தொடர்பான தமது முன்நோக்குக்கு ஒரு நேரடியான அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதை தொழிற்சங்கங்கள் இனம் கண்டன.

தொழிலாளர் வர்க்கப் புரட்சிகரப் போராட்டத்தின் வடிவமாக ஸார் முடியாட்சியை ஆட்டம் காணச் செய்த பரந்த அளவிலான வேலை நிறுத்தங்கள் வெடிக்க நனவான முறையில் தயார் செய்ய வேண்டும் என வலியுறுத்திய போது, தொழிற்சங்கங்கள் ஆவேசம் கொண்டு அதை எதிர்த்தன. ஒரு தொழிற்சங்கக் காங்கிரசில் அவை பரந்த வேலை நிறுத்த உபாயம் பற்றி கலந்துரையாடுவதை தடை செய்யும் ஒரு பிரேரணையை நிறைவேற்றின.

லக்ஷம்பேர்க் 1906ல் 'பரந்த வேலை நிறுத்தம், அரசியல் கட்சி, தொழிற்சங்கங்கள்' (The Mass Strike, The Political Party and the Trade Unions) என்ற நூலில் அவர் தொழிற்சங்கங்கள் தொடர்பான தமது விமர்சனங்களை ஆழமாக்கினார். அவர்களின் சந்தர்ப்பவாத நெழிவு சுழிவுகளையிட்டும் தொழிலாளர் வர்க்கத்தின் மிகவும் ஒடுக்குமுறைக்குள்ளான பகுதியினரைத் தள்ளி வைப்பதையிட்டும் தம்மிடையே அதிகாரத்துவத்தினை வளர்ச்சி காணச் செய்வதையிட்டும் எச்சரிக்கை செய்தார். தொழிற்சங்கங்கள் மீதான புரட்சிக் கட்சியின் மேலாதிக்கத்தை வலியுறுத்திய அவர் பேர்ண்ஸ்டைனை முன்னணியில் கொண்ட சந்தர்ப்பவாதப் போக்குடன் தொழிற்சங்கங்களின் சுயாதிக்கக் கோரிக்கையை நேரடியாக தொடர்புபடுத்தினார்.

அவர் எழுதியதாவது: "தொழிற்சங்கங்கள் ஒரு குழுவினரின் நலன்களையும் தொழிலாளர் இயக்கத்தின் அபிவிருத்தியின் ஒரு கட்டத்தை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கின்றன. "சமூக ஜனநாயகம், தொழிலாளர் வர்க்கத்தையும் மொத்தத்தில் அதன் விடுதலைக்கான காரணங்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஆதலால் சமூக ஜனநாயகத்தினுள் தொழிற்சங்கம்



றோசா லக்ஷம்பேர்க்

கொண்டுள்ள உறவானது ஒரு முழுமையின் ஒரு பாகமாகும். தொழிற்சங்கத் தலைவர்களிடையே தொழிற்சங்கங்களதும் சமூக ஜனநாயகத்தினதும் "தொழிற்சங்கங்களது சமத்துவ அதிகாரம்" பற்றிய கோட்பாடு பெரும் சாதகமான நிலைமையை ஈட்டிக் கொள்ளும் போது, இது தொழிற்சங்கவாதத்தின் சாராம்சம் பற்றியும் தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திரத்துக்கான பொதுப் போராட்டத்தில் அதன் பாத்திரம் பற்றியும் ஒரு அடிப்படையான தப்பபிப்பராயத்தில் அது சாய்ந்து கொண்டுள்ளது...

அவ்வாறே தொழிற்சங்கங்களதும் சமூக ஜனநாயகத்தினதும் "சம அதிகார" கோட்பாடு வெறுமனே ஒரு கோட்பாட்டு விளக்கமின்மை அல்ல; ஒரு வெறும் தடுமாற்றமும் அல்ல. ஆனால் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் போராட்டத்தை பாரளுமன்ற (தேர்தல்) போட்டியாகத் தரமிறக்குகின்றதும் சமூக ஜனநாயகத்தை ஒரு புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சியில் இருந்து ஒரு குட்டி முதலாளித்துவச் சீர்திருத்தக் கட்சி ஆக்குகின்றதுமான அந்த சமூக ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாத கன்னையின் ஒரு பிரபல்யமான போக்கின் ஒரு வெளிப்பாடாகும். சமூக ஜனநாயகம் தொழிற்சங்கங்களின் "சம அதிகார" கோட்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் அதன் மூலம் அது மறைமுகமாகவும் மௌனமாகவும் சந்தர்ப்பவாதப் போக்கின் பிரதிநிதிகளால் நீண்டகாலமாகத் தள்ளப்பட்ட மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியேற்படும்." (லக்சம்பேர்க்- றோஷா லக்சம்பேர்க் பேசுகின்றார்- மாரி அலைஸ் வாட்டர்)

## தொழிற்சங்க அற்பத்தனங்கள்

தொழிற்சங்கங்களின் அற்பத்தனங்களை எதிர்கொள்ள மார்க்சிஸ்டுகளின் அரசியல் பொறுப்புக்களைச் சுருக்கமாகவும் கவர்ச்சியாகவும் தொகுத்தளிக்கும் விதத்தில் பந்திகளை புகுத்துகையில் லக்ஷம் பேர்க் பேர்ண்ஸ்டைனை மட்டுமன்றி அவரது தற்கால அரசியல் வாரிசுகளையும் நிராகரித்து எழுதியுள்ளார். கீழ்வரும் பந்திகள் சுட்டிக்காட்டுவது போல லக்சம்பேர்க்கின் கால சந்தர்ப்பவாதிகள் இன்று ஸ்பார்ட்டசிஸ்டுகள் அனைத்துலகக் குழுவுக்கு எதிராகச் செய்வது போல் அன்றைய சகாப்தகால மார்க்சிஸ்டுகளுக்கு எதிராக இதே பாணியிலான வாய்ப்பிரசங்கி வாதங்களையே கையாண்டனர். ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் படி அனைத்துலகக் குழுவின் மாபெரும் குற்றம் என்ன? இன்று இருந்து கொண்டுள்ள தொழிற்சங்கங்களை புதுக்கி அமைக்கவும் போர்க்குணம் கொண்டதாக்கவும்- உண்மையில் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரமான அமைப்புகளாகச் செய்ய முடியும் என்ற வாதத்தை நிராகரிப்பதன் மூலம் அனைத்துலகக் குழு தொழிலாளர்களிடையே தோற்கடிப்புவாதத்தைப் பரப்புவதாகச் சொல்லிக் கொள்கின்றது.

அத்தகைய குற்றச் சாட்டுகளுக்கு லக்சம்பேர்க் எங்ஙனம் பதிலளித்தார்: "இறுதியாக தொழிற்சங்கப் போராட்டத்துக்கு முதலாளித்துவ சமூக அமைப்பு கோடிட்டுக் காட்டிய புறநிலை வரையறைகளை மூடிமறைப்பதில் இருந்து தொழிலாளர் இயக்கத்தின் இறுதி இலக்குகள் தொடர்பான இந்த வரையறைகள் பற்றிக் குறிப்பிடும் ஒவ்வொரு கோட்பாட்டு விமர்சனங்களுக்கும் ஒரு குரோதம் அங்கு தலை நீட்டுகின்றது. விமர்சனமற்ற பாராளுமன்ற நம்பிக்கை வாதத்தினை எதிர்த்துப் போராடுவது போல் முழுமையான முகஸ்துதியும் அளவுக்கதிகமான திடநம்பிக்கையும் "தொழிற்சங்க இயக்கத்தின் நண்பர்" ஒவ்வொருவரினதும் கடமையாகக் கணிக்கப்படுகின்றது. அது இறுதியில் சமூக ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிராகச் செய்யப்படும் ஒரு முன்னணியாகும்; மனிதர் இருளில் தடவும் ஒரு 'புதிய தொழிற்சங்க கோட்பாடு' ஆகும். அது சமூக ஜனநாயகச் சித்தாந்தங்களுக்கு எதிராக முதலாளித்துவ அமைப்பினுள் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு அளவு கணக்கற்ற பொருளாதார முன்னேற்ற கற்பனைக் காட்சிகளை உருவாக்கும் ஒரு கோட்பாடாகும்." (லக்சம்பேர்க், றோஷா லக்சம்பேர்க் பேசுகின்றார்- மேரி அலைன்ஸ் வோட்டர்- பக்கம் 208-209)

லக்சம்பேர்க், சந்தர்ப்பவாதிகளின் வேஷதாரியான நம்பிக்கைவாதம் எப்படியானது எனக் காட்ட மேலும் முயன்றார். தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர இயலளவையிட்டும் மார்க்சிஸ்டுகளின் அடிப்படை அரசியல் பணியையிட்டும் ஒரு ஆழமான நம்பிக்கையீனத்தை அவர்கள் கொண்டிருந்தனர். அதாவது, தமது சொந்த அனுபவங்களை விமர்சன ரீதியில் ஆய்வு செய்வதற்கான கோட்பாட்டுச் சாதனங்களின் மூலம் தொழிலாளர்களை ஆயுதபாணிகளாக்குவதன் மூலமும் அதன் மூலம் முதலாளித்துவ சமூக உறவுகளினுள் விஞ்ஞான ரீதியான பார்வையை செலுத்துவதன் மூலமும் அதனைப் புரட்சிகரமான முறையில் தூக்கி வீசுவதன் அவசியம் பற்றியும் நம்பிக்கையீனம் கொண்டிருந்தனர்.

தொழிற்சங்கவாதத்தையிட்டு (அல்லது எந்த ஒரு அடிப்படை விவகாரத்தையும் அது உலகப் பொருளாதாரத்தின் தன்மை, ஸ்டாலினிசம் அல்லது தேசிய இனப்பிரச்சினையாக இருந்தால் என்ன) எந்த ஒரு மனப்பூர்வமான கோட்பாட்டு, வரலாற்று ஆய்வினைச் செய்வதற்கும் தமது சொந்த அனுபவங்களில் இருந்து எந்த ஒரு அடிப்படையான படிப்பினைகளையும் தொழிலாளர் பெறுவதை தடுக்கும் அவர்களது முயற்சியும் ஸ்பார்ட்டசிஸ்டுகள் காட்டும் அலட்சியத்தின் பேரழிவுமிக்க குற்றச்சாட்டாக விளங்கும் ஒரு பந்தியில் லக்சம்பேர்க் குறிப்பிடுவதாவது:

"இருந்து கொண்டுள்ள அமைப்பினதும் அதனது அபிவிருத்தியின் சிக்கலான பண்பினதும் தமது சொந்த வர்க்கப் போராட்டத்தின் சகல காரணிகள், கட்டங்கள் தொடர்பான வெகுஜனங்களின் விமர்சனப் பாங்கினதும் முரண்பாடுகளுக்கும் மத்தியில் சமூக ஜனநாயகம் தனது செல்வாக்குக்கு வெகுஜனங்களின் ஐக்கியத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. தொழிற்சங்கங்களின் செல்வாக்கும் சக்தியும் வெகுஜனங்களின் விமர்சனம், தீர்மானத்தின் இயலளபின்மையின் தலைகீழான கோட்பாட்டினை அத்திவாரமாகக் கொண்டுள்ளது. "மக்களின் நம்பிக்கை பேணப்பட வேண்டும்" இதுவே அடிப்படைக் கொள்கையாக உள்ளது. இதன் அடிப்படையில் தொழிற்பட்டு பல தொழிற்சங்க அதிகாரிகள், தொழிற்சங்க வாதத்தின் புறநிலை ரீதியான பற்றாக்குறை பற்றிய சகல விமர்சனங்களையும் இந்த இயக்கத்தின் உயிர் வாழ்க்கைக்கு எதிரான முயற்சிகளாக 'சீல்' குத்துகின்றனர்". (லக்சம்பேர்க், றோஷா லக்சம்பேர்க் பேசுகின்றார்- மேரி அலைன்ஸ் வோட்டர்ஸ்)

-தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச அனைத்துலகவாதம் எதிர் தீவிரவாத எதிர்ப்பு முன்னோக்கு

## பூகோளமயமாக்கல் தொடர்பாக பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் விமர்சனத்திற்கு பதில்



நிக் பீம்ஸ்

*பேராசிரியர் மைக்கேல் சோசுடோவ்ஸ்கியால் எழுதப்பட்டு, உலக சோசலிச வலைத் தளத்தில் ஜனவரி 15 2000ல் பிரசுரிக்கப்பட்ட "சியாட்டிலும் அதற்கு அப்பாலும்: புதிய உலக ஒழுங்கை நிராயுதபாணியாக்கல்" என்ற கட்டுரைக்கு பதிலளிக்கும் முகமாக, உலக சோசலிச வலைத் தளத்தின் (WSWS) ஆசியர் குழு உறுப்பினரும் அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய செயலாளருமான நிக் பீம்ஸினால் எழுதப்பட்ட கட்டுரையின் மூன்று பாகங்களுள் முதல் பாகம்.*

நிக் பீம்ஸ்


பாகம் -1

கடந்த டிசம்பரில் சியாட்டிலில் உலக வர்த்தக அமைப்பின் (WTO) அமைச்சர் மட்ட கூட்டம் தோல்வி கண்டமை இரு முக்கிய அம்சங்களின் சிறப்பு அரசியல் நிகழ்வாகும். முதலில் புதிய நூற்றாண்டிற்கான வர்த்தக சுற்று ஒன்றை ஏற்படுத்துதற்கான முயற்சிகளின் சீர்குலைவானது, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் ஆகிய பிரதான முதலாளித்துவ சக்திகளுக்கிடையிலான வர்த்தக மற்றும் நிதி மோதல்களின் புதிய கட்டத்தைக் குறிக்கிறது.

இரண்டாவதாக, 1960களிலும் 1970களில் வியட்நாம் யுத்தம் தொடர்பான அரசியல் எழுச்சிகளின் பெரும் நடவடிக்கைகளுக்குப் பின்னர், கூட்டத்திற்கு வெளியே இடம்பெற்ற எதிர்ப்புகளும் ஆர்பாட்டங்களும், அதிகரித்துவரும் சமூக துருவப்படுத்தல்களின் விளைவாக அமெரிக்காவிலும் உலகம் முழுவதும் வளர்ந்து வருகின்ற வெடிப்புமிக்க சமூகப் பதட்டங்களை வெளிப்படுத்துகின்றன. அவை உழைக்கும் மக்களது வாழ்க்கை, சமுதாயம் முழுமையும் மீதான நாடுகடந்த நிறுவனங்கள் (TNC) மற்றும் நிதி நிறுவனங்களின் மேலாதிக்கத்திற்கு எதிராக வளர்ந்து வரும் குரோதத்தை எதிரொலிக்கின்றன.

எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பின்னர், மிகத் தீர்க்கமான பிரச்சனை இந்நிகழ்வுகள் மீதான அரசியல் கணக்கெடுப்பினை தயாரிப்பதும், நம்முன்னுள்ள அரசியல், சமூகப் போராட்டங்களுக்கான முன்னோக்கினையும் வேலைத்திட்டத்தையும் அபிவிருத்தி செய்வதுமாகும். இதன் காரணமாக, பேராசிரியர் தீ மைக்கேல் சோசுடோவ்ஸ்கியால் "சியாட்டிலும் அதற்கு அப்பாலும்: புதிய உலக ஒழுங்கை நிராயுதபாணியாக்கல்" என்று தலைப்பிலான பங்களிப்பை நாம் வரவேற்கிறோம்.அது உலக சோசலிச வலைத் தளத்தால் ஜனவரி 13ல் வெளியிடப்பட்டது.

பல ஆண்டுகளாக பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF) உலக வங்கி, உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்றவற்றின் மூலம் திணிக்கப்படும் நாடுகடந்த நிறுவனங்களின் "சுதந்திர சந்தை" திட்டத்தின் சமூக, பொருளாதார விளைவுகளை அம்பலப்படுத்துவதில் முக்கிய வேலைகளை செய்துள்ளார். குறிப்பாக எப்படி இந்த வேலைத்திட்டம் வளர்ந்துவரும் உலக வறுமைக்கு வழிவகுத்திருக்கிறது எனவும் மற்றும் 1994-ல் ருவாண்டாவில் இனப்படுகொலை போன்ற பேரழிவுகளுக்கும், முன்னாள் யூகோசலாவியா துண்டாடப்பட்டதால் ஏற்பட்ட மோதல்களுக்கும் எப்படி வழிவகுத்திருக்கிறது என்றும் அவர் ஆழமாய் விளக்கியிருக்கிறார்.



உ.வ.அமைப்பின் தலைவர் ஜெனரல் மிசல் மூர்

முக்கியமாக, சேர்பியா மீதான நேட்டோ யுத்தத்திற்கு எதிராக அவர் ஒரு தெளிவான நிலைப்பாட்டை வகித்திருந்தார். மத்தியதர வர்க்க தீவிரவாதத் தட்டினரின் பல பிரிவினர் கொசோவோ விடுதலை இராணுவத்தை [KLA] ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடும் "தேசிய விடுதலை"இயக்கம் என கொண்டாடியதையும், நேட்டோ யுத்தப் பிரச்சாரத்தின் பின் அணிவகுத்து நின்றதற்கும் எதிராக, அவர் கொசோவோ விடுதலை இராணுவத்தின் நிஜ தன்மையை அம்பலப்படுத்தினார்.

உலக வர்த்தக அமைப்பு தொடர்பான தமது கட்டுரையில்,பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி ஜனநாயகம் பற்றிய வார்த்தை ஜாலங்களின் பின்னால் பதுங்கிக் கொண்டுள்ள பெரும் வர்த்தக அமைப்புகளதும், வங்கிகளதும் பெரும் முதலாளித்துவ சக்திகளின் அரசாங்கங்களினதும் நிஜ நிகழ்ச்சி நிரலை அம்பலப்படுத்திக் காட்ட முயன்றுள்ளார். .ஆனால் இக்கட்டுரை முழுவதுமாக அடிப்படையிலேயே குழப்பத்தை ஏற்படுத்துவதால் உ.சோ.வ. தள ஆசிரியர் குழு 1999 நவம்பர்30ல் வெளிவிட்ட அறிக்கையான "பூகோள முதலாளித்துவத்துக்கு எதிரான இயக்கத்துக்கு அரசியலே முதற்கோட்பாடு" என்பதில் எமது கவனத்தை இது தொடர்பாக செலுத்தியிருந்தோம்.

அதில் நாம் குறிப்பிட்டதாவது: "இன்றைய மட்டுப்படுத்தப்பட்டதும் பெரும்பாலும் ஒரே மாதிரியான அரசியல் விவாதத்தில், 'பூகோள முதலாளித்துவம் 'மற்றும் 'பூகோளமயமாக்கல்' ஆகியன முக்கியமாக ஒரு கருத்தை குறிக்கும் வேறு சொற்களாக இருக்கின்றன". அது எவ்வாறாயினும், கணனி அறிவியல், தொலைத் தொடர்பு போக்குவரத்தில் புரட்சிகர முன்னேற்றத்தால் தூண்டிவிடப்பட்ட முற்போக்கு வளர்ச்சியான உற்பத்தி மற்றும் பொருட்களின் பரிவர்த்தனையின் அதிகரித்துவரும் பூகோளத்தன்மைக்கும், பூகோளமயமாக்கலில் இருந்து சமூக ரீதியான நாசகர விளைவுகள் தோன்றவில்லை, மாறாக பொருளாதார வாழ்வை தனியார் இலாபத்திற்கான அராஜக போட்டியினால் இயக்கப்படும் காலவதியாகிப் போன தேசிய வடிவமான அரசியல் அமைப்புக்கு கீழ்ப்படுத்த முயலுவதற்க்கும் இடையிலான வித்தியாசத்தை எடுத்துக்காட்டுவது அவசியமாகும்.

இந்த ஆய்விலிருந்து எழும் அரசியல் முன்னோக்கு, வேலைத் திட்டம் மீதான கேள்விகளுக்கு விடையளிக்கும் முகமாக அறிக்கை பின்வருமாறு தொடர்ந்தது. "இன்று மாபெரும் கேள்வி என்னவெனில் இன்றைய அபிவிருத்தியை தனிமைப்படுத்தப்பட்ட தேசிய பொருளாதார வாழ்வின் பேரளவிலும் புராதன காலத்துக்கு பின்நோக்கி கொண்டுசெல்வது பற்றியதல்ல. கேள்வி என்னவெனில்: யார் பூகோளப் பொருளாதாரத்தினை கட்டுப்படுத்தப் போகிறார்கள்?, யாருடைய நலன்கள் தீர்மானிக்கப்படப் போகின்றன?, எப்படி அதனுடைய ஆழமான தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார தகைமைகள் பயன் படுத்தப்படவிருக்கின்றன? என்பதுதான். பூகோள பொருளாதாரத்தை முற்போக்கான வகையில் ஒழுங்கமைக்கக் கூடிய ஒரே சமூக சக்தி சர்வதேச தொழிலாள வர்க்கம்தான்".

இதன் மீதான அடிப்படை விஷயங்களில்தான் உ.சோ.வ.தவின் பார்வைக்கும் பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் பார்வைக்கும் இடையிலான வேறுபாடுகள் திரும்புகின்றன. முதலாளித்துவக் கொள்ளையிடலுக்கு சோசுடோவ்ஸ்கி ஒரு எதிரி என்பதில் பிரச்சினைக்கு இடமில்லை.ஆனால் அவரது விமர்சனம் இலாப அமைப்புக்கும் அது அடிப்படையாக கொண்டிருக்கும் சமூக உறவுகளதும் திசையில் பார்வை செலுத்தப்படவில்லை, மாறாக இன்னும் சொல்லப் போனால் பூகோளமயமாக்கல் போக்கின் மீது செலுத்தப்பட்டுள்ளது. அவர் அத்தியாவசியமாக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முன்னைய வடிவங்களை பனரமைக்க ஆதரவை வழங்குவதுடன் முடித்து வைக்கின்றார்.

சுருங்கக் கூறின், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் அதன் உலக சோசலிச வலை தளத்தினதும் வேலைத்திட்டம், தொழிலாள வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதையும், சமுதாயத்தை சோசலிச வழியில் மறு மறுசீரமைப்பதற்குமான போராட்டத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இருக்கையில், சோசுடோவ்ஸ்கியின் வேலைத்திட்டம், முதலாளித்துவத்தின் மைய அரசியல் பொறி முறைகளுள் ஒன்றான தேசிய அரசை பலப்படுத்தவும் அதற்கு மெருகூட்டவும் விரும்புபவர்களுக்கு ஒரு தத்துவார்த்த மேடையை வழங்குகிறது.

உலக சோசலிச வலைத் தளத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம், மனிதகுலம் முழுவதையும் ஒட்டுமொத்தமாக முன்னேற்றுவதற்காக நவீன பொருளாதாரத்தின் பூகோளத் தன்மையின் உற்பத்திப் பொருள் என்ற வகையில் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கம் பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தி முறையின் அபரிமிதமான ஆற்றலைக் கட்டுப்படுத்துவதற்கான எதிர்கால தேவையையும் நோக்கமாக கொண்டது. இந்த முன்னோக்கிற்கு எதிராக, சோசுடோவ்ஸ்கி தனது பார்வையை சிறப்பானதென கூறப்படும் கடந்தகாலத்துக்கு திருப்பி, ஆரம்ப காலகட்டத்தில் முதலாளித்துவ ஆட்சிக்கு அடிப்படையாக அமைந்த கீன்சீயன் [Keynesian] பாணியிலான தேசியப் பொருளாதார விதிகளையும் மற்றும் சமூக சீர்த்திருத்தங்களையும் புனருத்தாரணம் செய்ய அழைப்பு விடுக்கிறார்.

இன்று சாதாரணமாகக் காணப்படும் அரசியல் குழப்பத்தின் மத்தியில், இந்தக் கண்ணோட்டங்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் ஏதாவதொரு கோணத்தில் சியாட்டிலில் உள்ள உலக வர்த்தக அமைப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் பெரும்பான்மையோரினதும் உலகம் முழுவதும் அவர்களது பிரச்சாரத்திற்கு ஆதரவாகவும் அதனைப் பின்பற்றவும் செய்த தனிநபர்களதும் அமைப்புகளதும் கண்ணோட்டத்தை எதிரொலிக்கின்றது. அவை உ.சோ.வ. தளத்தைப் பொறுத்தவரை சோசுடோவ்ஸ்கியின் கட்டுரைக்கு விளக்கமான பதிலளிப்பதை மிக முக்கியமானதாக ஆக்கியது. இந்தகலந்துரையாடல் முக்கியமானது, ஏனென்றால் நமது கண்ணோட்டத்தில் பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டமும், ஆய்வும் பூகோள முதலாளித்துவத்திற்கு எதிராக வெளிப்படும் இயக்கத்தை எவ்வழியிலும் முன்னெடுத்து செல்லாது; மாறாக அதனைத் தடம்புரளச் செய்யும்.

பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் கருத்துக்களை ஆழமான ஆய்வுக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாக்குவதன் மூலம் எமது கலந்துரையாடல்களின் முடிவுகள் என்னதான் கூர்மையாக இருந்தாலும், இவை நமது காலத்தின் மிக முக்கியமான அரசியல் பிரச்சினைகள் எவை என்பதில் உண்மையான தெளிவைப் பெறவிரும்புகிற அனைவராலும், சோசுடோவ்ஸ்கியாலும் வரவேற்கப்படும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

சோசுடோவ்ஸ்கியின்படி, சியாட்டிலில் "பெரும் பிளவு", அதனது "புதிய உலக ஒழுங்கினை உண்மையாய், எதிர்ப்பவர்களுக்கும் தோற்றத்திற்கு எல்லாவகையிலும் 'முற்போக்காக' இருப்பதாக தோற்றமளிக்கும் 'கூட்டு' ('partner') பொது அமைப்புகளுக்கும் இடையிலானதாகும். ஆனால் இக்கூட்டு அமைப்புகள் உண்மையில் இந்த அமைப்பு முறையின் படைப்புக்கள் மட்டுமல்லாது, புதிய ஒழுங்குக்கு எதிரான 'நிஜமான' சமூக இயக்கங்கள் இணைவதை உடைப்பதற்கு சேவை செய்பவை".

அரசு சாரா அமைப்புகள் என்றழைக்க கூடிய நிறுவனங்களை அரசு நிதி உதவி, அவற்றில் மேற்கத்திய உளவு ஏஜன்சிகளின் ஊடுருவல் மற்றும் உலக வர்த்தக அமைப்புக்கான "மனிதாபிமான முகத்தை" வழங்கும் அவர்களது பாத்திரம் பற்றி சில முக்கிய விஷயங்களை அவர் எழுப்பும் அதே சமயம், உண்மையான பிளவு சோசுடோவ்ஸ்கி கருதும் இடத்தில் இல்லை. அரசாங்கங்களுக்கும் அரசு சாரா நிறுவனங்களின் "எதிர்ப்பு" குழுக்களுக்கும் இடையேயான தொடர்புகளை அம்பலப்படுத்துவது அவசியம். நிதிவளங்கள் வரும் பாதை ஆகியவற்றை அம்பலப்படுத்துவது அவசியம் தான்.ஆனால் அது எவ்வகையிலும் போதுமானதன்று.எந்த அமைப்பினதும் பாத்திரத்தைத் தீர்மானிப்பதில் விடைகாணப்பட வேண்டிய முக்கிய கேள்வி அது யாருடைய நலன்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது, மற்றும் அது முன்னெடுக்கும் அரசியல் ஆய்வும் வேலைத்திட்டமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலக வர்த்தக அமைப்புக்கு எதிராக சியாட்டிலில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒரு கட்டம்

''இந்த அமைப்பு முறையின் படைப்புக்கள்'' மற்றும் ''உண்மையான'' எதிர்ப்பு என்ற அடிப்படையில் -உலக வர்த்தக அமைப்புடன் ஏதோ ஒரு வகையில் பேச்சுவார்த்தையில் அவை ஈடுபடுகின்றதா அல்லது இல்லையா என்பதன்படி விளக்குவது - இவற்றிடையிலிருந்து பிரதான வேறுபடுத்தலை'' நிலைநாட்டுவதற்கான சோசுடோவ்ஸ்கியின் முயற்சியானது ஆரம்பத்திலிருந்தே முரண்பாடுகளுக்குள் செல்கிறது. அவர் எழுதுகிறார், ''பங்காளி அரசு சாரா அமைப்புகள்'' (''partner non-governmental organizations'') என அழைக்கப்படுபவை உலக வர்த்தக அமைப்பை ஒரு நிறுவனம் என்பதன் நியாயமான அல்லது 'சட்டபூர்வமானதை' கேள்விக்குள்ளாக்கக் கூடாது என்பதில் ஏற்கனவே கவனமாக இருக்கின்றன.'' இந்த அம்சத்தைக் கூறி அவர் தொடர்கிறார்: ''உலக வர்த்தக அமைப்புடனும் அரசாங்கங்களுடனும் 'உரையாடல்' பேச்சுவார்த்தைக்கான வழிமுறையாக கூடாது என்று இது அர்த்தப்படாது. மாறாக, பேச்சுவார்த்தைகள் சமூக இயக்கங்களுடன் நெருக்கமாக இணைந்து ''அடித்தள வேலைகளைப் பலவீனப்படுத்துவதைக் காட்டிலும் பலப்படுத்தும்'' நோக்குடன் கட்டாயம் பயன்படுத்தப்பட வேண்டும்.

சோசுடோவ்ஸ்கி ''பேச்சுவார்த்தைகள்'' மற்றும் ''உரையாடல்'' வகையினை மேற்சொன்ன பந்தியில் அனுமதித்தாலும் பின்னர் அவரது கட்டுரையில் இவற்றை நிராகரிப்பவர் போல் காணப்படுகிறார். 1994-ல் உலக வர்த்தக அமைப்பு நிறுவப்பட்டதை ஆய்வு செய்கையில் அவர் உ.வ. அமைப்பை 'சர்வ அதிகாரம் படைத்த' அமைப்பாக உருவாக்கும் உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தையின் கடைசி சட்டத்தின் உண்மையான சட்டத்துக்குப் புறம்பான தன்மை மற்றும் அநீதி தொடர்பாகநாம் கட்டாயம் செயல்பட வேண்டும்'' என்று எழுதுகிறார். உ.வ.அமைப்பை ஒரு சர்வதேச நிறுவனம் என்ற வகையில் சட்டவிரோத அமைப்பு என்று முத்திரை குத்துவதை தவிர வேறு மாற்று வழி ஏதும் இருக்க முடியாது. வேறு வார்த்தைகளில் சொன்னால், அனைத்து நிகழ்ச்சிப்போக்குகளும் ஒரேயடியாக நிராகரிக்கப்பட வேண்டும்'' (வலியுறுத்தல் மூலத்தில் உள்ளபடி)

சோசுடோவ்ஸ்கியின் அணுகுமுறையில் அத்தியாவசிய தன்மை என்னவெனில் அவர் உ.வ.அமைப்பை உலக வரலாற்றின் ஒருவகை படைப்பாளியாக மாற்றுகின்றார். அவர் அதன் ஆரம்பத்தை வங்கிகள் மற்றும் நாடுகடந்த நிறுவனங்கள் (TRN) உலகப் பொருளாதாரத்தைத் தன் கட்டுபாட்டில் எடுக்கவும், அதன் மூலம் தேசிய அரசாங்கங்களினதும், நிறுவனங்களினதும் செயல்பாடுகளைக் பலவீனப்படுத்தும் ''சட்ட விரோத'' நடவடிக்கைகளில் காண்கின்றார். ஆனால் இந்த அணுகுமுறை கேள்வியை மட்டுமே எழுப்பியிருக்கின்றது. உ.வ. அமைப்பு ஏன் 1994ல் மட்டும் நிறுவப்பட்டது? முன்னர் ஏன் நிறுவப்படவில்லை? அதன் ஸ்தாபிதத்துக்கு வழிவகுத்த உந்து சக்திகள் எவை? இந்த விஷயங்களை ஆராயாமல் உ.வ. அமைப்பை ஆய்வு செய்வதும் அதனை உடைத்தெறிய அழைப்பு விடுப்பதும் மார்க்ஸ் இன்னொரு உள்ளடக்கத்தில் குறிப்பிட்டவாறு, கத்தோலிக்க தேவாலயத்தை ஒழிக்காமல் (Catholic Church) பாப்பாண்டவரை விரட்டுவதாக முடியும்

உலக வர்த்தகத்தை கடந்த அரை நூற்றாண்டாக ஆளுமை செய்த வர்த்தகத்திற்கும் வரிக்குமான பொது உடன்படிக்கை (GATT) இன் சட்ட திட்டங்களில், அமைப்பில் ஒரு தீர்க்கமான மாற்றத்தையே உ.வ.அமைப்பின் ஸ்தாபிதம் காட்டுகிறது என்பதில் கேள்விக்கே இடமில்லை. 1948-ல் 23 உறுப்பினர்களின் அங்கமாக வாணிபம், சுங்கவரிகள் தொடர்பான பொது உடன்பாடு ஏற்படுத்தப்பட்டு தொழில்துறை உற்பத்திப் பொருட்களுக்கு முற்போக்கான சுங்கவரி குறைப்பை இலக்காக கொண்டதும்,1930களில் மாபெரும் அழிவுகரமான வர்த்தக யுத்தத்துக்கு வழிவகுத்த யதேச்சாதிகாரத்திலிருந்து பின்னடிப்பதையும், தங்களது அண்டை அயலாரின் வர்த்தகக் கொள்கைகளைக் சட்டத் திட்டங்களின் மூலம் தடுப்பதையும் நோக்கமாக கொண்டது.

எவ்வாறாயினும் யுத்தத்திற்கு பின்னைய சகாப்தத்தில் பூகோள முதலாளித்துவப் பொருளாதாரத்தின் விரிவாக்கத்திற்கு வர்த்தகத்திற்கும் வரிக்குமான பொது உடன்படிக்கை (GATT) வகித்த பங்கு புதிய கேள்விகளை எழுப்பியுள்ளது. 1980களின் அளவில் வர்த்தகத்திற்கும் வரிக்குமான பொது உடன்படிக்கை கட்டமைப்பானது அபிவிருத்தியடைந்த பூகோள பொருளாதாரத்திற்கு மிகவும் குறுகியதாகிவிட்டது. அது உருவாகியபோது சர்வதேசப் பொருளாதார உறவுகளும் தேசியப் பொருளாதாரங்களுக்கு இடையேயான வர்த்தகத் தொடர்புகளும் மேலோங்கியிருந்த அந்த சகாப்தம் கடந்து போய்விட்டது. பூகோள உற்பத்தி முறைகளும், சேவையையும், அறிவையும் அடிப்படையாகக் கொண்ட தொழிற்துறையின் வளர்ந்துவரும் முக்கியத்துவமும். சர்வதேச நிதி நிறுவனங்களின் அதிகரிக்கும் எதிர்பார்ப்புகளுடனும் சேர்ந்து அர்த்தப்படுத்துவது யாதெனில் அதிகரித்துவரும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் விவகாரங்களை ஒழுங்கமைக்க புதிய ஒழுங்குமுறை ஒன்று தேவையாக உள்ளது என்பதாகும்.

உ.வ.அமைப்பின் உருவாக்கம் பிரதான முதலாளித்துவ சக்திகளால் பூகோளமயமான உற்பத்திக்கும், போக்குவரத்து -தொலைத் தொடர்பில் ஏற்பட்ட புரட்சிகர அபிவிருத்திகளின் தேவைகளுக்கும் எழும் நிதி தேவைகளை பூர்த்தி செய்யவும், விஞ்ஞான ரீதியான முன்னேற்றங்களைப் உற்பத்தி தொழில் நுட்பங்களுக்கு பயன்படுத்துவதால் உற்பத்தி சக்திகளில் பரந்த வளர்ச்சியை சாத்தியமாக பூகோளமயமாக்கலுக்கு பொருந்துகிறவாறு அமைப்பு ஒன்றை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சியைத்தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

முதலாளித்துவத்தின் கீழ் பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தி உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்களைச் சுரண்டுவதை உக்கிரப்படுத்துவதற்கான வழிமுறைகள் தான் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை. அதன் விளைவு வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் ஒரே மாதிரியாக பரந்த மக்களின் சமூக நிலைமைகளை மோசமடையச் செய்து வருகிறது. ஆரம்ப காலகட்டத்தில் அமைக்கப்பட்ட அனைத்து சமூக சீர்திருத்தங்களும் இலாபத்தை அதிகரிப்பதற்கும், தனது நடவடிக்கைகளுக்காக எல்லாத் தடைகளையும் அகற்றுவதற்குமான பூகோள மூலதனத்தின் தேவையின் தடையற்ற அழுத்தத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இது பூகோளமயமாக்கத்தை அப்படியே எதிர்த்தாக வேண்டும் என்பதை குறிக்காது. முதலாளித்துவம் அதன் வரலாற்று அபிவிருத்தியில் ஒவ்வொரு கட்டத்திலும், எல்லாவற்றுக்கும் மேலாக இதன் இன்றைய வடிவத்திலும் வர்க்கச் சுரண்டலின் அமைப்பாகும். ஆனால் அதற்கும் மேலாக அது தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலமாகவும் சர்வதேச உழைப்புப் பகுப்பின் மூலமாகவும் இவ்விரு வகையிலும் உற்பத்தி சக்திகளின் தொடர்ச்சியான அபிவிருத்தியுடன் தொடர்புடைய உற்பத்தி அமைப்பின் வடிவமுமாகும். இவ்விஷயங்களை கவனத்திற்கு எடுக்கையிலேயே முன்னோக்கு தொடர்பான அடிப்படைக் கேள்விகள் எழுகின்றன.

இறுதி ஆய்வில், சமூகத்தின் அடிப்படை. வர்க்க அமைப்பின் ஒரு குறிப்பிட்ட வடிவமல்ல.மாறாக இன்னும் சொல்லப் போனால் உற்பத்தி சக்திகளின் வரலாற்று அபிவிருத்திகளின் மேல்தான் வர்க்கங்கள் அமைகின்றன, வடிவம் எடுக்கின்றன, மீள் ஒழுங்கமைக்கப்படுகின்றன, அவற்றுக்கிடையிலான உறவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. தொழில்துறை முதலாளித்துவத்தின் தொடக்கத்தில் ஆலை உரிமையாளர்கள் மற்றும் நில உடைமையாளர்களின் வர்க்கத்தில் இருந்து இன்றைய உலகில் காலூன்றி நிற்கும் நிதி நிறுவனங்கள் (TNC) மற்றும் பரந்த நாடு கடந்த நிறுவனங்கள் வரை, நவீன வரலாறு முழுவதும் உற்பத்தி சக்திகள் முதலாளித்துவ வர்க்கத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு அடிபணிய செய்யப்பட்டன. ஆனால் உற்பத்தி சக்திகள் சொத்துடமை வர்க்கத்தின் பொருளாதார மேலாதிக்கத்திற்கான சாதனங்கள் என்பதனை விடவும் மேலானவை. மிகவும் அடிப்படையான மட்டத்தில் சமூக, பொருளாதார போக்கின் சட ரீதியான உள்ளடக்கத்தினை கொண்ட அவை மனித இனத்தின் பொருளாதார,தொழில் நுட்ப அபிவிருத்தியையும் உள்ளடக்கியுள்ளன.

உற்பத்தி சக்திகள் முதலாளித்துவத்தின் கீழ் சுரண்டுவதற்கான சாதனங்களாக சேவை செய்யும் வேளையில், அவை அந்த சுரண்டலை இல்லாமல் செய்வதற்கானதும் மற்றும் முழு மனித இனத்தினையும் முன்னேற்றுவதற்கான சடத்துவரீதியான முன் நிபந்தனையையும் கொண்டுள்ளன. இந்த முரண்பாட்டின் மேல்தான் சோசுடோவ்ஸ்கியும் அவருக்கு முன் அவரைப் போன்ற ஏனைய பலரும் தடுமாறினர்.

புகழ் மிக்க அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு முன்னுரை என்பதில் மார்க்ஸ் உற்பத்தி சக்திகளுக்கும் சமூகத்தின் வர்க்க அமைப்புக்கும் இடையிலான சக்திமிக்க உறவை பின்வருமாறு விளக்குகிறார்:''அபிவிருத்தியின் குறிப்பிட்ட கட்டத்தில், சமுதாயத்தின் சட ரீதியான உற்பத்தி சக்திகள் அப்போதுள்ள உற்பத்தி உறவுகளுடன் மோதலுக்கு வருகின்றன. -இது அதே விஷயத்தையே சட்ட ரீதியான வார்த்தைகளில் வெறுமனே விளக்குகிறது-அதாவது உற்பத்தி சக்திகள் இதுவரை அவை இயங்கிவந்த கட்டமைப்புக்குள்ளேயான உற்பத்தி உறவுகளுடன் மோதலுக்கு வருகின்றன. உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியின் வடிவங்களில் பார்க்கையில் இவ்வுறவுகள் அவற்றிற்கு தடையாக மாறிவிடுகின்றன.இதன் பின்னர் சமூகப் புரட்சிகளின் சகாப்தம் ஆரம்பமாகிறது''.

உ.வ.அமைப்பின் உருவாக்கத்திற்கு பின்னர் காரணமாகிய பூகோளமயமான உற்பத்தியின் வரலாற்று முக்கியத்துவத்தை முதலாளித்துவ அபிவிருத்தியின் போக்கினை ஆளுமை செய்யும் நிகழ்ச்சிப் போக்குகளை ஆய்வு செய்வதன் ஊடாக மட்டுமே புரிந்து கொள்ளமுடியும். பூகோளமயமாக்கமானது

மூலதனம் பொருத்தமான உபரி மதிப்பை பெற்றுக்கொள்ளவும், பெருப்பிக்கவும் வேண்டிய நோக்கில் உருவாகிய சுரண்டலின் மேலதிகமான அபிவிருத்தி மட்டுமல்ல. அது அறிவியல் முன்னேற்றத்தையும் சர்வதேச உழைப்புப் பகுப்பின் மேலதிக அபிவிருத்தியையும் ஈடுபடுத்துகின்ற உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியையும் கூட குறிக்கிறது. அதன் மூலம் மனிதகுல உழைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட இந்த உற்பத்தி சக்திகளுக்கும் தனிச் சொத்துடைமை மற்றும் தேசிய அரசு முறை ஆகியவற்றின் மேல் தங்கியிருக்கின்ற முதலாளித்துவ சமூக உறவுகளுக்கும்

18ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்கப் பிரதிநிதியான தோமஸ் பிக்கரிங் யார்?

பெரி கிரே

அமெரிக்க பிரதிநிதி தோமஸ் பிக்கறிங்ன் இந்திய, இலங்கை விஜயத்தினூடாக அமெரிக்கா இந்திய தென்கரையில் இருக்கும் தீவினை சீரழித்த 17 வருட உள்நாட்டு யுத்தத்தினுள் நேரடியாக தலையிட்டுள்ளது. பிக்கறிங் என்ற மனிதனினூடாக அமெரிக்கா, தமிழ்ப் பிரிவினைவாத தமிழீழ விடுதலை புலிகள் அண்மித்துள்ள இராணுவ வெற்றிக்கு எதிராக தனது கைகளை வைத்துள்ளது.

அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதி-செயலாளர் வழமை போல வாஷிங்டனின் தலையீடு தனியே மனிதாபிமான அடித்தளத்திலேயே என குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் நீண்டகால சேவையாளனும், மிக நம்பிக்கைக்குரிய கையாளனுமான பிக்கரிங், இலங்கையின் யாழ்ப்பாண தீபகற்பகத்தில் "ஒரு மனிதப் பேராபத்தை" தடுப்பதற்காக உயர் அதிகாரிகளை சந்தித்துள்ளதாக இந்தியப் பத்திரிகைகளுக்கு தெரிவித்தார். கடந்த மாதங்களில் ஆச்சரியப்படத்தக்க இராணுவ வெற்றிகள் மூலம் இலங்கையின் தமிழ் சிறுபான்மையினர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தின் மையமான யாழ்ப்பாண நகருக்கு சில மைல் தூரத்தில் தமிழீழ விடுதலை புலிகள் வந்துள்ளனர். 30,000 ஸ்ரீலங்கா படையினர் இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணையை நோக்கி தள்ளப்பட்டு விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்படும் அபாயத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக அறியாத, அவதானித்திராத ஒருவராலேயே பிக்கரிங்கின் மனிதாபிமான பாசாங்கிற்கு சிறிதளவேனும் மதிப்பளிக்க முடியும். கிட்டத்தட்ட கடந்த 20 வருடங்களாக வாஷிங்டன் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிரான தொடர்ந்த யுத்தத்தை செய்துவரும் இலங்கை அரசாங்கங்களுக்கு பொருளாதார, இராணுவ, அரசியல் ஆதரவு அளித்து வந்துள்ளது. அதனது மனிதாபிமான உணர்ச்சி ஒரு உள்நாட்டு யுத்தத்தில் சிங்கள முதலாளித்துவத்தால் தமிழர்களுக்கு எதிராக செய்யப்பட்ட கொலை, சித்திரவதை, இராணுவ ஆக்கிரமிப்பு, ஒடுக்குமுறை போன்றவற்றால் கிளர்ந்து எழவில்லை. அமெரிக்க அரசியல் துறையினரின் அறிக்கைகளின்படி இந்த யுத்தத்தில் 60,000 பேர் உயிர் இழந்துள்ளதுடன் 600,000பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

சரியாகக் கூறின் பிக்கரிங்கை புதுடில்லிக்கும் கொழும்புக்கும் வரச்செய்தது என்னவெனில், சிங்கள ஆளும் வர்க்கத்தின் அழிவுமிக்க தோல்வியும், இலங்கை தேசம் உடைந்துவிடும் என்பதற்கான எதிர்பார்ப்புமாகும்.

வழமை போல் வாஷிங்டனின் ஜனநாயகம், மனித உரிமைகள் தொடர்பான வாயளப்புகளுக்கு பின்னால் இருப்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக பொருளாதார, பூகோள அரசியல் நலன்களாகும்.

மே 24-25 இல் இந்திய வெளிநாட்டமைச்சின் செயலாளர் லலித் மன் சிங்கையும் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸையும் சந்தித்த பின்னர், பிக்கரிங்கும் அவரது இந்திய கூட்டாளியினரும் "இராணுவத் தீர்விற்கும், விடுதலைப் புலிகளின் தமிழீழ தனிநாட்டு கோரிக்கைக்கும் தமது கூட்டு எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். பிக்கரிங், விடுதலைப் புலிகளின் வெற்றியை இல்லாமல் செய்ய இந்தியாமிக மூர்க்கமாக இயங்க வேண்டும் என்ற வாஷிங்டனின் வலியுறுத்தலை தெளிவாக்கியதுடன், யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கை துருப்புக்களை வெளியேற்ற தனது கடற்படையை பயன்படுத்த முன்வர வேண்டுமெனவும், கொழும்பு பொதுஜன முன்னணி அரசாங்கம் அப்படியான கோரிக்கையை விடவேண்டும் எனவும் கூறியுள்ளார். அவர் மேலும் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்த நிறுத்தத்திற்கும் சமாதான பேச்சுவார்த்தைக்கும் நடுவராக நிற்கும், தற்போது கொழும்பு வந்துள்ள நோர்வே தூதுக்குழுவின் முயற்சிகளுக்கு வாஷிங்டனின் வெளிப்படையான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

இந்த இராஜதந்திர முயற்சிகளில் நேரடியான பங்கு வகிக்க அமெரிக்காவிற்கு எந்தவித நோக்கமுமில்லை என்பதை வலியுறுத்துகையில், பிக்கரிங், வாஷிங்டன் "இலங்கையின் நிலைமைகளை கவனமாக அவதானிக்கின்றது" என தீக்குறித்தனமாக (கெட்டநோக்கத்துடன்) கூறியுள்ளார். அமெரிக்காவும் இந்தியாவும் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை படையினருக்கு ஆதரவாக இராணுவ தலையீடு செய்யும் திட்டமேதுமில்லை என மறுக்கையில், இந்தியா ஒரு கடற்படை கப்பலையும் போர் விமானங்களையும் யாழ்ப்பாணக் கரையை நோக்கி நகர்த்தியுள்ளது. அமெரிக்கா பாரசீக வளைகுடாவிலுள்ள படையின் ஒரு பகுதியை இலங்கையின் மேற்குகரையை நோக்கி அதாவது அராபியக் கடலின் தென்பகுதியை நோக்கி நகர்த்தியுள்ளது.

பிக்கரிங் மே 29ல் இலங்கையின் அரச அதிகாரிகளை கொழும்பில் சந்திக்கவுள்ளார். அத்துடன் இலங்கையில் அவர் நோர்வே மத்தியஸ்தர்களையும் சந்திக்கவுள்ளார். இதேவேளை இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராணுவரீதியாக இல்லாவிடினும், அமெரிக்காவின் நேரடி இராஜதந்திர தலையீட்டிற்கு கதவுகளை திறந்துவிட்டுள்ளதுடன், ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் அமெரிக்காவும், நோர்வேயுடனும் இந்தியாவுடனும் சேர்ந்து "சமாதான முயற்சிகளில்" ஈடுபட விரும்புவதாக கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு தள்ளும் வாஷிங்டனின் உயர்மட்டத்திலான நகர்வு துணைக் கண்டத்தில் தனது பிராந்திய பிரதிநிதியாக வளர்த்தெடுக்கும் நம்பிக்கையில் இந்தியாவுடன் கூட்டு சேரும் அண்மைய திருப்பத்துடன் இணைந்துள்ளது. குளிர்யுத்த காலகட்டத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்த காலம் முழுவதும் வாஷிங்டன், இந்தியாவை சோவியத் யூனியனின் ஏறுகுதிரையாகவே நோக்கியது. அத்துடன் பாகிஸ்தானை இந்தியாவிற்கு எதிரான சக்தியாக வளர்த்து வந்தது.

ஆனால் பாரதீய ஜனதா கட்சி பதவிக்கு வந்ததும் வாஷிங்டன் தனது முன்னைய கூட்டான பாகிஸ்தானிடமிருந்து விலகி இந்திய அரசுடன் தனது பொருளாதார, இராணுவ, உளவுத்துறைத் தொடர்புகளை வெளிப்படையாக வெளிப்படுத்திக் கொள்ள தொடங்கியது. பாரதீய ஜனதா கட்சி அமெரிக்க வங்கிகளாலும், நாடுகடந்த கூட்டு நிறுவனங்களாலும் மிக சிநேகிதபூர்வமாக நோக்கப்படுகின்றது. ஏனெனில் சர்வதேச நாணய நிதியம் வரையறை செய்த தனியார்மயமாக்கல், மறு ஒழுங்கமைப்பு கொள்கைகளை அதன் போட்டியளரான காங்கிரஸ் கட்சியினரை விட வேகமாகவும், மூர்க்கமாகவும் நிறைவேற்ற உறுதிமொழி வழங்கியுள்ளதாலாகும்.

கிளின்ரன் நிர்வாகத்தால் பாரதீய ஜனதா கட்சி அரசு அணைத்துக் கொள்ளப்படுவது வாஷிங்டனின் ஜனநாயக, அமைதிவாத பாசாங்கு பொய்களுடன் இணைந்து கொண்டுள்ளது. பாரதீய ஜனதா கட்சி ஒரு இந்து சோவினிச கட்சி மட்டுமல்லாது அது பாசிச அமைப்புகளுடன் ஒன்றிணைந்துள்ளது. அது தனது மூர்க்கமான இராணுவ நோக்கங்களை இரண்டு வருடத்திற்கு முன்னர் பாகிஸ்தான் எல்லையில் அணுக்குண்டு சோதனை செய்ததன் மூலம் எடுத்துக்காட்டியது.

இந்தியாவும் அதன் ஆலோசகரான அமெரிக்காவும் இலங்கையில் விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றியை கவனிப்பதன் நோக்கம் ஒரு சுதந்திர தமிழ் ஈழ அரசு முக்கியமாக காஷ்மீர் தென்மாநிலமான தமிழ்நாடு உட்பட பல பிரிவினைவாத அமைப்புக்களை எதிர்நோக்கும் இந்திய தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு பாரிய அச்சுறுத்தலாக இருப்பதாலாகும்.

வலதுசாரி பாரதீய ஜனதா கட்சியுடனான வாஷிங்டனின் கூட்டு அதனது வெளிநாட்டுக் கொள்கை பிரகடனங்களுடன் இணைந்த முரண்பாடுகள் பலவற்றினுள் ஒன்றுமட்டுமாகும். இது தமிழ் பிரிவினை வாதிகளுடனான எதிர்ப்பு உணர்விற்கும் கொசோவோ அல்பேனிய இன பிரிவினைவாதிகளை கட்டித்தழுவுவதற்கும் இடையேயான வித்தியாசத்தில் மிக தெளிவாக வெளிப்படையானது. இன்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் பெல்கிராட் தனது தென் மாநிலத்தில் வாழ்ந்த பெரும்பான்மை அல்பேனிய மக்களுக்கு எதிராக இனசுத்திகரிப்பையும், படுகொலையையும் செய்ததாக குற்றஞ்சாட்டி கொசோவோ விடுதலை இராணுவத்துடன் [KLA] ஒன்றுகூடி சேர்பியாவிற்கு எதிரான ஆகாயத்தாக்குதலில் ஈடுபட்டது.

இன்று இதே மனிதாபிமான கோஷங்கள் இலங்கையின் வட கிழக்கிலுள்ள பெரும்பான்மை தமிழ் மக்களுக்கெதிரான கொழும்பின் ஒடுக்குமுறைக்கு ஆதரவாகவும், பிரிவினைவாத விடுதலைப் புலிகளுக்கு எதிரான தலையீட்டை நியாயப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறு இந்த தெளிவான முரண்பாட்டை விளங்கப்படுத்தப்படமுடியும்? எவ்வாறு அம்மனிதாபிமானம், வேறுபட்ட இராஜதந்திரத்தோடு ஒரு நாள் சேர்பியா மீது குண்டுமழை பொழியவும், மறுநாள் சிங்கள முதலாளித்துவத்தை பாதுகாக்குமுகமாக அரசியல் உடன்பாட்டிற்கு நிர்ப்பந்திக்கவும் வாஷிங்டனை கட்டாயப்படுத்துகின்றது?

அமெரிக்க பேச்சாளர் தங்களுடைய மூர்க்கத்தனத்துடனும், சிடுமுஞ்சித்தனத்துடனும் இக்கேள்விகளுக்கு பதிலளிக்க முயலப் போவதில்லை. ஊழல் மிக்க அமெரிக்க தொலைத் தொடர்புச் சாதனங்களும் இக்கேள்விகளை எழுப்பப் போவதில்லை என்பதும் தெரிந்தவரையில் நிச்சயமானது.

கொசவோவினருக்கும் இலங்கை தமிழ்மக்களின் பரிதாபத்திற்கும் இடையில் முக்கிய வேறுபாடுகள் உள்ளன. ஆனால் இவை அமெரிக்காவின் ஏமாற்றை குறைத்தே மதிப்பிடுகின்றது. அல்பானிய கொசோவோவினர் மீதான சேர்பிய ஒடுக்குமுறை, தமிழ் மக்கள் மீதான கொழும்பின் 17 வருட கொலைகளுடன் ஒப்பிடுகையில் மறைந்து போகின்றது. சேர்பிய ஒடுக்குமுறையினுள்ளும் நேட்டோ[NATO] வின் குண்டு வீச்சினாலும் இறந்த கொசோவோவினரின் தொகை அநேகமான கணக்கீட்டின்படி கிட்டத்தட்ட 1000 ஆகும். தமிழ் மக்கள் மீதான கொழும்பின் யுத்தத்தினால் இறந்தவர்கள் 60,000 மேலாகும்.

1999 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட இலங்கையில் மனித உரிமைகளின் நடைமுறை தொடர்பான அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சொந்த அறிக்கையிலிருந்து ஒரு பந்தி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"சித்திரவதை செய்யப்பட்டவர்களில் கூடுதலானோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் அல்லது ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்களாகும். சித்திரவதை முறைகளில் மின்சாரஅதிர்ச்சி, அடித்தல் [விசேடமாக குதிக்கால்களில்], கைகளில் அல்லது கால்களில் முறுக்கப்பட்ட நிலையில் கட்டித் தொங்கவிடுதல், எரித்தல், நீரினுள் அமிழ்த்துதல் என்பன அடங்கும். வேறு சந்தர்ப்பங்களில் நீடித்த காலத்திற்கு இயற்கைக்கு மாறான நிலையில் நிற்கவைத்தல், கிருமிநாசினி அல்லது மிளகாய்தூள் அடங்கியபைகளினுள் கட்டப்படல் அல்லது தலையின்மேல் மண்ணெண்ணெய் ஊற்றுதல் என்பன அடங்கும். மோசமாக நடத்தப்பட்டதன் விளைவாக எலும்பு முறிவுகளும் வேறு மோசமான காயங்கள் தொடர்பாகவும் கைதிகள் முறையிடுள்ளனர்."

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இனவாத அரசியலை கவனத்திற்கு எடுக்காவிட்டாலும் அது தனது கடந்த வரலாற்றில் கொசவோ விடுதலை இராணுவம் ஒருபோதும் அடைந்திராத பரந்த மக்கள் ஆதரவை பெற்றிருந்தது. கொசோவோ விடுதலை இராணுவத்தை இராஜாங்க திணைக்களத்தின் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலிருந்து நீக்கி "தேசியவிடுதலை இயக்கமாக" முன்மொழிய தீர்மானிக்கையில் அமெரிக்க அதிகாரிகளுக்கு மாபியா குழுக்களுடனான அதனது தொடர்பு, போதை மருந்து கடத்தலில் ஈடுபாடுகுறித்தும் தெரிந்திருந்தது. ஆனால் சிங்கள அரசுகளால் வருடக் கணக்கான ஒடுக்குமுறைக்கும், பாகுபாட்டிற்கும் உள்ளானதற்கு எதிரான தமிழர்களின் எதிர்ப்பின் மத்தியில் தோன்றிய தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா தொடர்ந்தும் தடைசெய்துள்ளது. இவ் உள்நாட்டு யுத்தம் 1983 இல் அரசாங்கத்தால் ஆதரவளிக்கப்பட்ட வன்செயல்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதனால் தோன்றியதாகும்.

அமெரிக்காவின் இலங்கைத் தலையீடு தொடர்பான ஆய்வு, தோமஸ் பிக்கரிங்கின் ஜனநாயக, அமைதிவாத நற்சாட்சிப் பத்திரங்கள் தொடர்பான ஆய்வு இல்லாமல் பூர்த்தியானதாக இருக்காது. அமெரிக்க வெளிநாட்டு சேவையில் உயர் பதவியான தூதுவராக, அமெரிக்க இராஜதந்திரத்தில் அனுபவமிக்கவர் என்ற வகையில் மிக இழிவிற்கு உரிய காலகட்டமான கடந்த முப்பது வருடங்களாக இவர் சேவையில் ஈடுபட்டிருந்தார்.

அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை அமைப்பின் எழுச்சி நட்சத்திரமாக அமெரிக்கா வியட்நாம் தோல்வியிலிருந்து வெளிவர முயல்கையில் 1973-1974 இல் கீஸீங்கரின் விசேட உதவியாளராக கடமையாற்றினார். சில்லியில் பாசிச சர்வாதிகாரியும் பெரும் கொலைகாரனுமான ஒகஸ்ரோ பினோசேயை பதவிக்கு கொண்டுவர கீஸீங்கர் திட்டமிட்ட போது அவரின் விசேட உதவியாளராக இருந்தார்.

ரீகனின் நிர்வாகத்தின் கீழ் வாஷிங்டன் எல் சல்வடோர் கொலைப்படை அரசாங்கத்திற்கு உதவுகையில் எல் சல்வடோருக்கான அமெரிக்க தூதுவராக பிக்கரிங் கடமையாற்றினார். அவர் இறுதியாக தூதுவராக கடமையாற்றியது 1993-1996ல் மாஸ்கோவில் ஆகும். அங்கு யெல்ட்சின் அரசாங்கம் 1993 ஒக்ரோபரில் ருஷ்ய பராளுமன்றத்தின் மீது குண்டு போடுகையில் அதற்கு உதவியளித்தார்.

இதுதான் வாஷிங்டன் இலங்கைக்கு நியமித்துள்ள மனிதனின் சுருக்க வரலாறாகும்கும். இது இந்திய துணைக் கண்டத்தின் அமெரிக்க கொள்கையின் மனிதாபிமான வாயடிப்புகளுக்கு பின்னால் உள்ள பிற்போக்கு சாராம்சத்தை எடுத்துக்காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்டங்கள் அமுலுக்கு வந்ததும் இரண்டு தொழிற்சங்கங்கள் நீண்டகால வேலை நிறுத்தங்களை திடீரென முடித்து வைத்துள்ளன

இலங்கை தொழில் வழங்குனர்கள் தொழிற்சங்கங்கத் தலைமைகளின் உதவியுடன் அரசாங்கத்தின் பரந்த, புதிய அவசரகால விதிகளை பிரயோகிக்க ஆரம்பித்துள்ளனர். இதன் மூலம் தொழிற்சாலைகளிலுள்ள தொழில் முரண்பாடுகளை முடிவிற்கு கொண்டுவரவும், தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யவும் தொழிற்சாலைகளில் கடுமையான நிர்வாகங்களை கொண்டுவரவும் நிர்ப்பந்திக்கின்றனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் பிரிவினைவாத தமிழீழ விடுதலை புலிகளுக்கு எதிராக நடாத்திவரும் யுத்தத்தின் பின்னடைவின் மத்தியில் வேலைநிறுத்தம், பொதுக்கூட்டம், ஊர்வலம் போன்றவற்றினை முற்றாகத்தடை செய்யும் அவசரகால விதிகளை பிரகடனப்படுத்தியுள்ளது.

இவ்விதிகள் அறிவிக்கப்பட்டவுடனேயே ஐ.ஜி.டி.பி. (International Gift Design Plant -IGDP), இசின் லங்கா ஐளுஐடுயமெய என்ற இரு தொழிற்சாலைகளில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேலைநிறுத்தங்களை தொழிற்சங்கங்கள் உடனடியாக முடிவிற்கு கொண்டுவந்தன. இவ்விரு தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் கூட்டரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் லங்கா சமஜமாஜ கட்சியுடன் இணைந்த அகில இலங்கை வர்த்தக, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் (ACMIWU) அங்கத்தவர்களாவார்.

தொழிலாளர்களை கலந்தாலோசிக்காமலே ACMIWU இன் தலைவர் சிறிவர்த்தன தொழிற்சாலை நிர்வாகங்களுக்கு வேலைநிறுத்தம் முடிவடைந்து விட்டதாக தொலைநகல் அனுப்பினார். பின்னர் தொழிலாளர்களின் எந்த ஒரு கோரிக்கையையும் இட்டுநிரப்பாத உடன்பாடுகளை தொழிற்சாலை நிர்வாகங்களுடன் இணைந்து திணித்துள்ளார். ஐ.ஜி.டி.பி (IGDP) இல் உடன்பாட்டினை கைச்சாத்திடுகையில் தொழிலாளர் சங்க கிளைப் பிரதிநிதிகள் சமூகமளிக்க கூட சிறிவர்த்தன அனுமதிக்கவில்லை.

(ISIN) இசினில், நிர்வாகத்தின் அனுமதியின்றி வேலை செய்ததாக பொய்க்குற்றம் சாட்டப்பட்டு வேலைநீக்கம் செய்யப்பட்ட 6 சக தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தவேண்டும் என்ற கோரிக்கையின் பேரில் 800 தொழிலாளர்கள் மார்ச் மாதம் 17ம் திகதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றார்கள். இதைத்தவிர மேலதிக கொடுப்பனவை அதிகரிக்கவும், வருடாந்த விடுமுறையை 21 நாளாகக் கூட்டவும், வேலைநிறுத்தத்தின்போது தொழிலாளர்களைப் பயமுறுத்தவும், பணியச்செய்யவும் பயன்படுத்திய தொழிற்சாலை காவலாளர்களை பதவி நீக்கம் செய்யவும் கோரிக்கைகளை விடுத்திருந்தனர்.

நிர்வாகம் 26 தொழிலாளர்களை பொய்க் குற்றச்சாட்டின் பேரில் வேலைநீக்கம் செய்தது. மார்ச் 16ம் திகதி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் வேலைக்கு சமூகமளித்திருக்கவில்லை என்பதே இக்குற்றச்சாட்டாகும். இப்பிரச்சினைக்கு உரிய கால நேரத்தில் அவர்கள் தொழிற்சாலை நிர்வாகத்துடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் 6 பேர் நிர்வாகத்தின் அனுமதி இல்லாமல் தொழிற்சாலை எல்லையை விட்டு வெளியேறிய குற்றச்சாட்டின் பேரிலும், இன்னும் 6 பேர் அனுமதியில்லாமல் மேலதிக வேலை செய்த குற்றச்சாட்டின் பேரிலும், இன்னும் 4 தற்காலிய தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு சமூகமளிக்க அனுமதிக்கப்படவில்லை. சக தொழிலாளர்களின் கருத்துப்படி இந்த 4 தற்காலிக தொழிலாளர்களும் வேலைநிறுத்த நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததாலேயே வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

தொழிலாளர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் அரசாங்கத்தின் இப்புதிய அவசரகால அதிகாரங்களை நிர்வாகம் பயன்படுத்துவதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. அதில் "இத் தொழிற்சாலையில் நிர்வாகத்தின் நடவடிக்கைகள் மார்ச் 3ம் திகதியிடப்பட்ட இல.1.2000 என்ற அவசரகாலச் சட்டத்தின் மாதிரியான அத்தியாவசிய சட்டத்தின் கீழ் இடம்பெறுகின்றது என்பது உங்களுக்கு தெரிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை" எனவும், "இவ்விதிகள் தொடர்பான முக்கிய நிபந்தனைகள் தொழிலாளர்களின் நலன் கருதி அறிவித்தல் பலகையில் இடப்பட்டுள்ளதாக" குறிப்பிடப்பட்டுள்ளது.

"மேற் கூறப்பட்ட உங்கள் மீதான நடவடிக்கைக்காக சட்டநடவடிக்கை எதுவும் எடுக்க உரிமை இல்லாததோடு, மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்தின்படி உங்களை உடனடியாக வேலையிலிருந்து வெளியேற்றவோ அல்லது முற்றாக நிறுத்தி வைக்கவோ அனுமதியுள்ளதுடன், இப்படியான உங்கள் செயல்கள் இச்சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமுமாகும்" என மேலும் குறிப்பிட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் முக்கிய உத்தியோகத்தரான மேஜர்.எஸ்.எம்.தனுவிலவினால் கையெழுத்திடப்பட்ட இக்கடிதத்தின் பிரதி ஒன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நியமிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய சேவைகளுக்கான ஆணையாளரான பிரிகேடியர்.சரத் முனசிங்க விற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதைவிட நிர்வாகம் 11 விதிகளையும், 55 உப விதிகளையும் கொண்ட தனது சொந்த ஒழுங்கு விதிகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன்கீழ் சுவரொட்டி ஒட்டுதல், பிரசுரம் விநியோகித்தல், நிதிசேகரித்தல், அனுமதியின்றி கூட்டம் கூடுதல் போன்றவற்றை தடைசெய்துள்ளதுடன், இதை மீறுவோர்மீது "கடுமையான","சிறிய" தண்டனைகள் விதிக்கப்படுமென தெரிவித்துள்ளது.

இராணுவத்தை விட்டோடியவர்களையும் உள்ளூர் கையாட்களையும் கொண்ட தொழிற்சாலை காவலாளர்கள் பொலிசாரின் உதவியுடன் தொழிலாளர்களை பயமுறுத்தி வருகின்றனர். தொழிற்சாலை பிரதான காவலாளியான மேஜர். அசங்கா சேனதிபதி தனது 8 அடியாட்களுடன் சேர்ந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளிகளை தொழிற்சாலையைவிட்டு துரத்தியுள்ளதுடன், வேலைநீக்கம் செய்யப்பட்ட பி.டி.எஸ்.ஜயசிங்கா என்பவரைத் தாக்கியுமுள்ளனர்.

பெரும்பாலான தொழிலாளிகள் பின்தங்கிய பிரதேசங்களான வடமத்திய மாகாணத்தை சேர்ந்த அனுராதபுரம், பொலநறுவை ,தென்மாகாணமான மாத்தறை போன்றவற்றிலிருந்து வந்தவர்களாவர். இசின் (ISIN) நிதி, வரிச்சலுகைகளை கொண்ட இந்தோனேசிய கூட்டு நூல் தயாரிக்கும் தொழிற்சாலையாகும்.

இதன் தொழிலாளர்கள் மாதம் 3000ரூபா சம்பளம் பெறுவதுடன், அண்மையிலுள்ள வீடுகளிலோ அல்லது மோசமான நிலையிலுள்ள தொழிற்சாலை விடுதிகளிலோ தங்கியுள்ளனர். தொழிற்சாலை நிலைமை மிகமோசமாக உள்ளது. தொழிற்சாலை மிகவும் சத்தமாக உள்ளதாகவும், காற்றில் தூசிகளுடன் பருத்திதூசிகளும் சேர்ந்து தம்மை நோயாளராக்குவதாகவும் தொழிலாளர்கள் முறையிட்டுள்ளார்கள். பாதுகாப்பிற்கு அணியும் முகமூடிகள் வழங்கப்படுவதில்லை.

தொழிலாளர்கள் வேலைக்குத் திருப்ப நிர்ப்பந்திக்கப்பட்டது தொடர்பாக ஆத்திரமுற்றுள்ளனர். "வேலைநிறுத்தம் காட்டிக்கொடுக்கப்பட்ட பின்னர் தொழிலாளர்களின் நிலைமை மேலும் மோசமடைந்து இருப்பதாகவும், நிர்வாக ஒழுங்கு விதிகளாலும், வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளிகளுக்கு கொடுக்கப்பட்ட கடிதமும், அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகால விதிகளால் தொழில் வழங்குனர் மேலும் பலமடைந்துள்ளதை காட்டுவதாக" வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளி ஒருவர் தெரிவித்துள்ளார்.

"இந்த யுத்தம் இனிமேல் தேவையில்லை. அவர்கள் யுத்தப் பிரதேசத்தில் ஆட்சி செய்வது போல் தொழிலாளர் மீது தாக்குதல் செய்யப் போகிறார்கள். இன்று தொழிலாளர்கள் எதிர்நோக்கும் கடுமையான சட்டங்களுக்கு தொழிற்சங்கங்களே காரணம். சிறிவர்த்தன எங்களை சந்தித்து நாங்கள் எதிர்நோக்கும் அபாயங்கள் தொடர்பாக பேசபோவதில்லை. அவர் தொழிலாளர்களை சந்திக்கப் போவதில்லை. நாங்கள் இத் தொழிற்சங்கத்தினை நம்பவில்லை." என இளம் தொழிலாளி ஒருவர் கூறினார்.

## தொழிற்சங்க தலைமை உதவி தரவில்லை

இன்னுமொரு தொழிலாளி "வேலை நிறுத்தத்தின் போது எமக்கு அயலவர்கள் உணவும் இருப்பிடமும் தந்து உதவினார்கள். தொழிற்சங்கத் தலைமையிடமிருந்து எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. அவர்கள் ஒடுக்குமுறை சட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்கள் தொழில் வழங்குனர்களினதும், தொழில் ஆணையாளரினதும், அமைச்சரினதும் கருத்தினையே பிரதிபலிக்கின்றனர். சிறிவர்த்தன எங்களுக்கு அறிவிக்காமலே தொழில் வழங்குனர்களுடனும், அமைச்சரவையுடனும் இணங்கி இப்போராட்டத்தை முடிவிற்கு கொண்டுவந்துள்ளார். இப்படியான மோசமான முறையில் வேலைநிறுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டமையால் தொழிற்சங்கத் தலைவர்கள் தொழில் வழங்குனர்களிடமிருந்து கைலஞ்சம் பெற்றுள்ளார்களென தொழிலாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

ஐ.ஜி.டி.பி யிலும் (IGDP) இதே மாதிரியான நிலைமையே காணப்படுகின்றது. சம்பளம் வழங்கப்படாமைக்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்து வேலைநீக்கம் செய்யப்பட்ட 4 தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக்கு அமர்த்துமாறு கோரி 214 தொழிலாளர்கள் மார்ச் மாதத்திலிருந்து வேலைநிறுத்தத்தில ஈடுபட்டிருந்தார்கள். மார்ச் 9ம் திகதி

அவர்கள் வேலைக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட போது தொழிற்சாலை நிர்வாகியான பிராங் அமரசிங்க "நீங்கள் மீண்டும் வேலைக்கு வந்தால் நாய்கள் போல் வேலை செய்ய வேண்டியிருக்குமென" குரைத்தான். வேலைக்கு திரும்பி 24 மணித்தியாலத்தின் பின்னர் 57 தொழிலாளர்களை ஆள்குறைப்பு செய்வதாக நிர்வாகம் அறிவித்தது. இது வேலைநிறுத்த காலகட்டத்தில் ஏற்பட்ட இழப்பை மறுசீரமைப்பு செய்யும் நோக்கத்துடனேயே செய்யப்பட்டதாக கூறப்பட்டது. இந்த இடைநிறுத்தப்பட்ட தொழிலாளிகள் வேலைநிறுத்த காலகட்டத்தில் மிக தீவிரமாக இயங்கியவர்களாவர். தொழிற்சாலையினுள் மதிய இடைவேளைக்கான நேரம் அரை மணித்தியாலமாக குறைக்கப்பட்டுள்ளதுடன் உணவுக்காக வெளியே செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. பொலிசார் தொழிற்சாலைக்கு சென்று நான்கு பேருக்குமேல் கூடுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக பயமுறுத்தியுள்ளனர்.

ஒருதொகை தொழிலாளர்கள் அகில இலங்கை வர்த்தக, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தில் (ACMIW) இருந்து வேலைநிறுத்தம் காட்டிக் கொடுக்கப்பட்டமைக்காக விலகியுள்ளதுடன் மக்கள் விடுதலை முன்னணியுடன்(JVP) இணைந்த இன்னுமொரு தொழிற்சங்கத்தை உருவாக்கியுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணி தொடர்பாக ஏற்கனவே முரண்பாடன கருத்து நிலவிவருகின்றது. ஏனெனில் இவர்களது தொழிற்சங்கம் ஐ.ஜி.டி.பி யின் (IGDP) இன்னொரு கிளையில் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளிகளுக்கு ஆதரவளிக்க மறுத்துள்ளது. தொழிற்சங்க கிளை நிறுவும் கூட்டத்தில் தொழிற்சங்க தலைவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்ட 57 பேர் தொடர்பாக எதுவும் கூறாததோடு, தொழிலாளர்களை இனிமேல் வேலைநிறுத்தம் செய்ய வேண்டாமெனக் கூறினர்.

இன்னுமொரு தொழிலாளி "மே 2ம் திகதி நிர்வாகத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எம்மை காட்டிக்கொடுப்பதற்காக எமது கிளை பிரதிநிதி கலந்துகொள்வதை சிறிவர்த்தன தடைசெய்தார். தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தை கைவிட விரும்பவில்லை. தொழிற்சங்க தலைவர்கள் காட்டிக் கொடுக்காவிட்டால் நாம் இப்போதும் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்போம். இந்த அவசரகால விதிகள் தொழிலாளர்களின் போராட்டங்களை ஒடுக்குவதற்காகவே கொண்டுவரப்பட்டன. அண்மையில் கைத்தொழில் அமைச்சர் இவ்விதிகள் தொழிலாளர்ளுக்கு எதிராக பிரயோகிக்கப்படமாட்டாது என கூறியிருந்தார். அப்படியானால் அவர்கள் ஏன் இன்னும் இதை நீக்கவில்லை?" எனக் அவர் குறிப்பிட்டார்.

ஏனைய தொழிலாளர்கள் களிமண் பாத்திரங்களை தயாரிக்கும் தொழிற்சாலை எவ்வாறு அத்தியாவசிய சேவையின் கீழ் வரமுடியுமென சிறிவர்த்தனாவிடம் கேட்டபோது, அதற்கு அவர் இத்தொழிற்சாலை மூலம் அன்நியச் செலாவணி பெறப்படுவதால் அத்தியாவசிய சேவையின் கீழ் உள்ளது. அதற்கு எதிராக போராடக்கூடாதென பதிலளித்தார்.

ஐ.ஜி.டி.பி IGDP 3800-4500 ரூபா வரை சம்பளம் வழங்கப்படுகின்றது. பின்தங்கிய கிராம்ப் புறங்களிலிருந்து கொழும்பு வரும் தொழிலாளர்கள் இதனூடாக தமது குடும்பங்களை பராமரிக்கின்றனர். தங்களது சொந்தச் செலவுகளை சமாளிக்க முடியாமலும், நீடித்த வேலை நிறுத்தம் காரணமாகவும் அவர்களால் தமது வாடகையைக் கூட செலுத்த முடியாதுள்ளது.

ஒரு பெண் தொழிலாளி தொழிற்சங்கத்தைப பற்றி பின்வருமாறு கூறினார்: "யுத்தத்தைக் காட்டி மக்களை சாந்தப்படுத்துவது என்பது அரசாங்கத்தினதும் முதலீட்டாளர்களினதும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதே" என சரியாகக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச அனைத்துலகவாதம் எதிர் தீவிரவாத எதிர்ப்பு முன்னோக்கு

15ம் பக்கத் தொடர்ச்சி

இடையில் உள்ள முரண்பாட்டை உக்கிரப்படுத்தியுள்ளது.

இந்தத் தத்துவார்த்த கருதுகோள்கள் தொழிலாள வர்க்கத்துக்கான முன்னோக்கையும் வேலைத் திட்டத்தையும் உருவாக்குவதற்கான ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதே ஆரம்ப காலத்திலிருந்து, தொழில்துறை முதலாளித்துவம் உற்பத்தி சக்திகளின் தொடர்ச்சியான புரட்சிகர மயப்படுத்தலை முன்னெடுத்ததன் ஊடாக அதன் விளைவாக மார்க்சின் வார்த்தைகளில் சொல்வதெனில் ''அனைத்து சமூக நிலைமைகளின் குறுக்கீடு செய்யப்படாத இடையூறுகளை'', பழமையான போற்றுதலுக்குரிய தப்பெண்ணங்கள் மற்றும் கருத்துக்களுடன் இணைந்த அனைத்து நிலையான, உறைந்துபோன உறவுகளையும் அடித்துச் சென்றுவிட்டது''.

இந்த தொடர்ச்சியான மாற்றங்கள் மற்றும் மோதலின் விளைவான சமூக எழுச்சிகளின் ஒவ்வொரு காலகட்டத்திலும் அடிப்படையில் எதிரெதிரான இரு அரசியல் போக்குகளின் தோற்றத்தைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் மாற்றங்களுக்கு மார்க்சிசப் போக்கின் பதிலானது இறுதி ஆய்வில், சமூக மாற்றத்திற்கான இயக்கு சக்தியை வடிவமைக்கின்ற உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியின் இயற்கை போக்கின் மீது எப்போதும் தன்னை அடித்தளமாக கொண்டிருக்கும். அதாவது மார்க்சிசத்தின் பதிலானது உற்பத்தி சக்திகளுக்கும் முதலாளித்துவ சமூக உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை இம்மாற்றங்கள் எவ்வாறு உக்கிரப்படுத்துகின்றன என்பதனை ஆய்வு செய்வதும், அதன்மூலம் சர்வதேச

தொழிலாள வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் சோசலிசத்தை நிறுவுவதற்கும் போராட்டத்தை முன்னெடுக்க பொருத்தமான வேலைத்திட்டத்தை வளர்த்தெடுப்பதாக இருக்கவேண்டும்.

இந்த அணுகுமுறையானது தொழிலாள வர்க்கம் வெறுமனே சுரண்டப்படும் வர்க்கம் அல்ல என்பதிலிருந்தும், அது முதலாளித்துவ அபிவிருத்தியாலேயே உருவாக்கப்பட்ட முழு சமூக சக்தியிலும் புரட்சிகரமான வர்க்கம் என்பதிலிருந்தும், உற்பத்தி சக்திகளை முதலாளித்துவ சமூக உறவுகளின் பிடிகளில் இருந்து விடுவித்து நாகரீக வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் என்று புரிந்து கொள்ளுவதை அடித்தளமாகக் கொள்ளவேண்டும்.

இந்த முன்னோக்கினை விரிவுபடுத்தலானது,இந்த சமூக நெருக்கடிக்கு பதில் பழைய ஒழுங்குக்கு திரும்புமாறு அழைப்பு விடுப்பதுதான் என குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பிரிவுகளாலும் முதலாளித்துவ வர்க்கத்தின் சில பகுதிகளாலும் கூட முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் வேலைத் திட்டத்துக்கு எதிரான போராட்டத்தின் மூலமாகவே எப்போதும் இடம்பெறும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டனில் தொழிற் புரட்சியின் விளைவாக அஞ்சி நடுங்கி சுவிஸ் அரசியல் பொருளாதாரவாதி சிஸ்மோண்டி விவசாய அடிப்படையிலான கிராமப்புறப் பொருளாதாரத்தைத் தக்க வைக்குமாறு அழைப்பு விடுத்த காலத்திலிருந்து, முதலாளித்துவத்துக்கு எதிரான குட்டி முதலாளித்துவ பதிலானது இதே அடிப்படைப் பாதையைத்தான் பின்பற்றியது.

சில சமயங்களில் இரண்டாவது கைத்தொழிற்புரட்சி என அழைக்கப்பட்ட பாரிய அளவில் முதலாளித்துவ மற்றும் டிரஸ்ட்டுகளது இணைவுகளை கொண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் ஆரம்ப காலத்தை பண்பிட்டுக் காட்டிய சிறிய முதலாளித்துவ நிறுவனங்களுக்கு இடையிலான சுதந்திரமான போட்டிக்கு திரும்புமாறு அழைப்புவிட்டதைக் கண்டது. தற்போதும் இருபதாம் நூற்றாண்டின் முடிவில், பூகோளமயமான உற்பத்திக்கு இந்தப் போக்கினரின் பதிலானது, தேசியப் பொருளாதார ஒழுங்கமைப்பின் கொள்கைகளுக்கும், 1950 மற்றும் 1960களின் போருக்குப் பின்னைய செழிப்பினைக் குறிக்கும் சமூக சீர்த்திருத்தத்துக்கும் திரும்புமாறு அழைப்பதாக இருக்கிறது.

சிஸ்மொண்டி முன்னணி தத்துவார்த்தப் பிரதிநிதியாக இருந்த குட்டி முதலாளித்துவ உருவாக்கங்களில் இப்போக்கின் தொடக்கத்தை மார்க்ஸ் மட்டுமே கண்ட அதே வேளை, அவற்றின் அத்தியாவசிய அடிப்படைக் கண்ணோட்டம் பற்றிய மார்க்சின் ஆய்வானது அதன் பொருத்தமான தன்மை எதையும் இன்றும் இழந்து விடவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் இவ்வகைப்பட்ட சோசலிச சிந்தனை நவீனப் பொருளுற்பத்தி உறவுகளிலுள்ள முரண்பாடுகளைக் கண்டு மிகுந்த மதிநுட்பத்துடன் அவற்றை விவரித்தது.

பொருளியலாளர்களுடைய கபடமான நியாயவாதங்களை அது அம்பலப்படுத்திற்று. இயந்திரங்களும் உழைப்புப் பகுப்பினையும் உண்டாக்கும் நாசகர விளைவுகளையும், மூலதனமும் நிலமும் ஒரு சிலரின் கைகளில் குவிவதையும், அபரிதமான உற்பத்தியையும் நெருக்கடிகளையும் அது மறுக்கமுடியாத வகையில் நிரூபித்துக் காட்டிற்று. குட்டி முதலாளித்துவப் பகுதியோருக்கும் விவசாயிகளுக்கும் தவிர்க்க முடியாதவாறு ஏற்படும் அழிவையும், பாட்டாளி வர்க்கத்தின் கொடுந் துன்பத்தையும், பொருளுற்பத்தியில் நிலவும் அராஜகத்தையும், செல்வத்தின் விநியோகத்தில் ஏற்படும் படுமோசமான ஏற்றத் தாழ்வுகளையும், தேசங்களிடையிலான படுநாசமான தொழிற்துறைப் போரையும், பழைய ஒழுக்க நெறியும் பழைய குடும்ப உறவுகளும் பழைய தேசிய இனங்களும் குலைந்து செல்வதையும் அது எடுத்துரைத்தது.

ஆயினும் இவ்வகைப்பட்ட சோசலிசம் அதன் சாதகமான குறிக்கோள்களைப் பொறுத்தவரை, பழைய உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களையும் அவற்றுடன் கூடவே பழைய சொத்துடைமை உறவுகளையும் பழைய சமுதாயத்தையும் மீட்டமைக்கவே விரும்புகிறது. அல்லது நவீன உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களை அவற்றால் தகர்த்தெறியப்பட்டுள்ள, தகர்த்தெறியப்பட்டே ஆக வேண்டிய பழைய சொத்துடைமை உறவுகளின் கட்டுக்கோப்பினுள் இருத்தி வைத்து, 'அடைத்திடவே விரும்புகிறது. இவை இரண்டில் எது அதன் விருப்பமாயினும், இவ்வகைப்பட்ட சோசலிசம் ஒருங்கே பிற்போக்கானதும், கற்பனாவாதத்தன்மையானதுமே ஆகும்." என மார்க்ஸ் எழுதுகின்றார்.

அவை எழுதப்பட்டு 150 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட போதிலும் பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் முக்கிய வழிமுறைகளையும் கண்ணோட்டத்தினையும் இந்த வரிகளில் அடங்கியுள்ளதை விடவும் தெளிவாகவும், சுருக்கமாகவும் விளக்க முடியாது.

# இலங்கை உள்நாட்டு யுத்தத்தின் வரலாற்று வேர்கள்

4ம் பக்கத் தொடர்ச்சி

போராட்டம் பேரளவில் இனக்குழு அடிப்படையில் பிரிவினைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட சுதந்திர தேசிய அரசை ஸ்தாபிதம் செய்யும் போராட்டத்துடன் இனங்காட்டிக் கொள்ளப்பட்டது. இந்தப் போக்கில் இருந்தே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு(LTTE) தோன்றியது. இது தன்னை 1960பதுகளிலும் 1970பதுகளிலும் 1980பதுகளிலும் சில வெற்றிகளையும் மக்களாதரவையும் திரட்டிக் கொண்ட பீ.எல்.ஓ, சன்டினிஸ்டா போன்ற பல்வேறு இயக்கங்களின் பாணியில் நிறுத்தியது.

அனைத்து போக்குகளும் 17 வருட கால கொடிய உள்நாட்டு யுத்தத்துக்கு இட்டுச் சென்றன. முதலும் முக்கியமுமாக இதற்கான பொறுப்பு சிங்கள முதலாளி வர்க்கத்தையும் இனவாதக் கொள்கையின் அடிப்படையில் ஸ்ரீலங்கா அரசினை சிருஷ்டித்ததையும் சார்ந்தது. அதே வேளையில் தொழிலாளர் இயக்கத்தின் நகைப்புக்கிடமான சந்தர்ப்பவாதம் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகித்தது. இத்துடன் அவர்கள் ஒரு பிரிவினைவாத இயக்கத்தின் வளர்ச்சியையும் தவிர்க்க முடியாததாக்கினர்.

கடந்த 17 ஆண்டுகளும், இலங்கை அரசின் அடியோடு நாற்றம் கண்ட அத்திவாரத்தின் பயங்கரமான மரண சாசனம் ஆகும். இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியும் (BLPI) லங்கா சமசமாஜக் கட்சியும் 1940களில் கடைப்பிடித்த முன்நோக்குக்குப் பாதகமானது என்பதை துன்பகரமான முறையில் ஊர்ஜிதம் செய்துள்ளது. சோசலிச இயக்கம் தமிழ் மக்களை அரசியல் ரீதியில் அடக்கி ஒடுக்குவதன் அடிப்படையில் இலங்கை அரசின் ஐக்கியத்தைக் கட்டிக் காக்கும் முயற்சியை அடியோடு எதிர்ப்பதோடு தீவின் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் இருந்து சகல அரசாங்கப் படைகளும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் வாபஸ் பெறப்பட வேண்டும் எனக் கோருகின்றது.

அதே சமயம் 20பதாம் நூற்றாண்டின் பரந்த அளவிலான அனுபவங்கள் ஒரு சுதந்திர தமிழ் அரசுக்கான கோரிக்கையைக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்நோக்கு தமிழ் வெகுஜனங்களின் வரலாற்று சங்கடங்களுக்கு எந்தவிதமான தீர்வையும் வழங்கவில்லை.

யதார்த்தத்தில் அத்தகைய "சுதந்திரம்" ஒன்று அல்லது மற்றொரு முதலாளித்துவ சக்தியின் பொருளாதார, மூலோபாய நலன்களுக்கு கீழ்ப்படிந்து போவதைக் குறித்து நிற்கின்றது. தென் ஆசியாவில் உள்ள சகல நாடுகளும் பிராந்திய ஆவல்களை -இந்தியா தொடக்கம் பாகிஸ்தான், சீனா வரை- தீர்த்துக் கொள்ளும் போட்டி இலக்குகளாகி விட்டன. வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள பெரும் ஏகாதிபத்திய சக்திகளைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. எந்த ஒரு "சுதந்திரமான" ஈழமும் பங்களாதேஷ் முகம் கொடுத்ததற்குச் சமமான தலைவிதிக்கு முகம் கொடுக்க நேரிடும். இது ஒடுக்கப்படும் மக்களுக்கு மற்றொரு பயங்கரப் பொறியாகும். கூடிய பட்சம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தகவமைவுக்கு ஏற்ப அவர்கள் பீ.எல்.ஓ. தலைவர் யசீர் அரபாத்தின் பாதையில் நடைபயின்று வெள்ளை மாளிகை பசும்புற்தரையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் மன்றாடுவதை விரும்பலாம்.


தென்னாசிய மக்களின் எந்த ஒரு பிரச்சினைக்கான தீர்வையும் அனைத்துலக முன்நோக்கின் அடிப்படையில் மட்டுமே அடைய முடியும். இலங்கைத் தொழிலாளர் வர்க்கம்- சிங்களவர், தமிழர் இருசாராரும்- இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ட்ரொட்ஸ்கிச இயக்கம் போராடிய புரட்சிகர அடிப்படைக் கொள்கைகளை மீளக் கண்டுபிடித்து, தழுவிக் கொள்ள வேண்டும்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி முன்னெடுக்கும் ஸ்ரீலங்கா-ஈழம் ஐக்கிய சோசலிச அரசுகளுக்கான போராட்டங்கள் இந்த அனைத்துலகக் கொள்கைகளையே இதயத்தில் கொண்டுள்ளது. தீவினை இராணுவ பேரழிவுகள் சூழ்ந்து கொண்டுள்ள நிலையில் இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் கடந்த அரை நூற்றாண்டுகால கசப்பான அனுபவங்களின் படிப்பினைகளை கொண்டிருக்க வேண்டும். ஒரு சோசலிச அனைத்துலகவாத முன்நோக்கின் அடிப்படையில் இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் ஒன்றிணைக்கப் போராடும் ஒரு சுயாதீனமான சக்தியாக இது தலையிட்டாக வேண்டும். இந்த வழியில் மட்டுமே இது இன்றைய சிக்கலான அரசியல் பிரச்சினைகளுடன் இறுகப் பற்றிக் கொண்டு போராடத் தொடங்க முடியும்.

## 11 ஆவது நினைவு தினம்

தோழர் கிரேஷன் கீ கீயனகேயின்

நினைவு நீடூடி வாழ்க



மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பாசிச குண்டர்களால் கொல்லப்பட்ட சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடி இயக்கமான புரட்சிக் கம்யூனிஸ்டுக் கழகத்தின் அங்கத்தவர் தோழர் கிரேஷன் கீ கியனகேயின் 11 ஆவது நினைவு தினம் ஜூன் 24ம் திகதி இடம் பெற்றது. அன்றைய தினம் தொடுவாவையில் உள்ள அவரின் நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்திய பின் அங்கு வருகை தந்திருந்த கிரேஷனின் உறவினர்கள், கட்சி அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு மத்தியில் சோ.ச.க. மத்திய குழு உறுப்பினர் நந்த விக்கிரமசிங்க உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபத்தோராம் நூற்றாண்டின் நுழைவாயிலில்

5ம் பக்கத் தொடர்ச்சி

கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கையிலும் பார்க்க அதிக கம்யூனிஸ்டுகளைக் கொன்று குவித்துள்ளது. இதன் மூலம் ஸ்ராலினிசம் தொழிலாளர் இயக்கத்தின் சோசலிச மரபுகளுக்கு எதிராக நிலைத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. சோசலிச மரபுகளை அது பொய்மைப்படுத்தியதோடு, அவற்றை அது தவறான வழிகளில் பயன்படுத்தி அபகீர்த்தி பெறச்செய்தது. மார்க்சிசத்தின் முன்நோக்கிலிருந்து அப்படியான ஒரு பின்னடைவு எதிர்பார்க்கப்படாத ஒன்றல்ல. *லூயிஸ் பொனபாட்டின் பதினெட்டாவது புருமெயரில்*, 150 வருடங்களுக்கு முன்னரே மார்க்ஸ், "பாட்டாளி வர்க்க புரட்சிகள் தம்மைத் தொடர்ச்சியாக விமர்சிக்கின்றன, தொடர்ச்சியாகத் தம்மை இடை நிறுத்திக் கொள்ளுகின்றன, ஏனென்றால் மீண்டும் ஒரு தடவை புதிதாக ஆரம்பிப்பதற்காக அவை அவற்றின் முதல் முயற்சிகளின் அற்பமான தன்மையை அரை குறையான நடவடிக்கைகளை, பலவீனங்களை, கோரமான முற்றூடாக ஏளனம் செய்கின்றன. அவை அவற்றின் எதிர்ப்பாளர்களை கீழே தள்ளி விழுத்துவது பின் கூறியவர்கள் மண்ணில் இருந்து புதிய பலத்தைப் பெற்று மீண்டும் அவற்றின் எதிரில் முன்னர் ஒரு பொழுதிலும் பார்க்க பெரிய இராட்சத வடிவில் தோன்றுவதற்காக" இந்த முறையில் பார்க்கும் பொழுது இருபதாம் நூற்றாண்டானது உழைக்கும் மக்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி தமது தலைவிதியை தமது கைகளுள் எடுத்துக்கொள்ள எடுத்த வீரம் செறிந்த முதல்முயற்சி என்று எடுத்துக் கொள்ளப்படும். இந்த முயற்சி தவறி விட்டது. ஆனால் அது அரசியல் அனுபவங்களின் பெரும் செல்வங்களைக் கொண்டுள்ளது. இவை பரந்த சமூகத் தட்டுக்களால் நனவாக்கப்பட்டு, ஆளுமை செய்யப்பட்டு அவை புதியதொரு முயற்சிக்கு அடித்தளமாக அமைய வேண்டும்.

அதன்பின் மெஹ்ரிங் கூறியது போல, பத்தொன்பதாம் நூற்றாண்டை நம்பிக்கையின் நூற்றாண்டாகவும்,இருபதா நூற்றாண்டை, அனுபவம் தந்த நூற்றாண்டாகவும், இருபத்தொன்றாம் நூற்றாண்டை, நிறைவேற்றும் நூற்றாண்டாகவும், வரலாறு காணும். எப்படிப் பார்த்தாலும் முதலாளித்துவமானது- இரு உலக யுத்தங்களையும், பாசிசத்தையும், பாசிசம் யூத மக்களின் மேல் தொடுத்த வெறும் களப்பலியையும் தந்ததோடு, இன்று பெருகியுள்ள வறுமையையும், அவல நிலையையும் தரும் நிலையில் மனித இனத்திற்கு ஓர் எதிர்காலம் ஒன்றைத் தர அதனிடம் எதுவும் இல்லை.

## இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் கடும் வரட்சி:..

6ம் பக்கத் தொடர்ச்சி

என்று கேட்டதற்கு, அவர் கூறிய பதில்: "அரசியல்வாதிகளைக் கேளுங்கள். கடந்த ஆண்டு செப்டம்பரில் ராஜஸ்தான் குஜராத் பகுதிகளில் மக்கள் கிராமங்களை விட்டு ஓடும்போது வரட்சி கண்முன் சாட்சியாக இருந்தது. ஆனால் செய்தித் தொடர்பு சாதனங்கள் உட்பட அனைவரும் குறைந்த அக்கறையே காட்டினர். எனக்கு நினைவிருக்கிறது, உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி கடந்த பொதுத் தேர்தலில் பிரச்சாரம் செய்யச் சென்றபோது, அவர் "முதலிலே தண்ணீர் பின்னர் அத்வானி" (பஹ்லே பானி பிர் அத்வானி) என்ற கோஷத்துடன் வாழ்த்தப்பட்டார்."

13 ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் வரட்சி இந்தியாவைப் பேரழிவுக்குள் தள்ளியதிலிருந்து போதுமான நடிவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. 12 ஆண்டுகள் "சாதாரண" பருவ மழைகள் பெய்த நிலையில், மழைபெய்யாத வட்டாரங்களில் மக்களின் துயரத்தை, தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் செய்தி நிறுவனங்களும் பெரும்பாலும் புறக்கணித்துவிட்டன. மேலும் அரசாங்கங்கள் செய்தவற்றில் பரந்த பெரும்பான்மையினரான கிராமப்புற ஏழைகளை வயிற்றிலடித்து பலனடைந்தது செல்வந்த விவசாயிகளும் நிலப்பிரபுக்களுமாவர்.

பி.பி.சி. செய்தியாளர் டேவிந்தர் ஷர்மா குறிப்பிடுவதாவது: "நீரைச் சேமிக்கும் அறுவடை செய்யும் பாரம்பரிய வடிவங்கள் அழிவதுடன், கிராமப்புற நீர்ப்பாசனம் திறமையற்ற அரசாங்க இயந்திரத்தால் முழுமையாக எடுக்கப்பட்டது, நிலக்கீழ் நீர், பாரபட்சத்துடன் சுரண்டப்பட்டு வருகிறது" இந்தியா "26 மில்லியன் டன்கள் உணவு தானிய அளிப்புக்களை நிறைவாய்" பெற்றிருந்தது. ஆனால் அத்தியாவசியமானோருக்கு அது கிடைக்கக் கூடும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லாதிருந்தது என்றும் கூட சுட்டிக்காட்டியது.

"வரட்சி வியாபாரிகள் கொள்ளை இலாபத்தை சுருட்டுகின்றனர்" என்ற தலைப்பிபல் 'டைம்ஸ் ஆப் இந்தியா' எழுதிய கட்டுரை" மற்றவர்களின் துன்பத்திலிருந்து யார் இலாபம் சம்பாதிப்பது, யார் வாழ்வது யார் சாவது என்று தீர்மானிப்பது முதலாளித்துவ சந்தையின் நடவடிக்கை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தது.

"வரட்சி குஜராத்தில் பெரும்பான்மையான மக்களின் துன்பத்தையும் துயரத்தையும் அர்த்தப்படுத்தி இருக்கலாம், ஆனால் அது சில விவசாயிகளையும் நீர்த்தாங்கி வாகன உடமையாளர்களையும் வரட்சி வியாபாரிகளாக உருமாற்றியிருக்கிறது. மேலும் அங்கு ஹெல்லி ஹெல்த்கேர் போன்ற நீர் வழங்குபவர்கள் நீரை விற்றே மாதம் 1,50,000 ரூபாய்கள் ஈட்டுகின்றனர். ஒரு லீட்டருக்கான விலையை ரூ.1-லிருந்து ரூ.1.50-ஆக உயர்த்தியிருக்கிற ஹெல்லி ஹெல்த்கேர் நிறுவனத்தார் கோடையில் வியாபாரம் விண் நோக்கி எழுவதையடுத்து, அவர்கள் வங்கிக்குப் போகும் பொழுது வழியெல்லாம் வாய்விட்டுச் சிரித்த வண்ணம் செல்லுகின்றனர்.

நாட்டுப்புற லால்ஜிபாய் (ஒரு வரட்சி வியாபாரி) தனது சொந்த ஊரின் அறிவாற்றலைப் பயன்படுத்தி கத்தியவாரியிலிருந்து இடம் பெயர்ந்தவர். தற்போது ஷ்யமல் தொடர்மாடி வீடுகள் அருகில் ஒரு மாளிகையைச் சொந்தமாகக் கொண்டுள்ளார். அவர் தனது வியாபாரத்தைப் பாதுகாக்கிறார். அவரிடம் எத்தனை முறை அவரது தண்ணீர் வண்டிகள் தண்ணீர் கொண்டுவருகின்றன என்று கேட்டால் நேராக பதில் சொல்லாமல் மழுப்புகிறார். சொல்லும்படி வற்புறுத்தினால் வெடுக்கென்று" சுடுகாட்டுக்கு விறகு விற்பவன் நிறையப் பேர் செத்தால்தான் தனக்கு வியாபாரம் நடக்கும் என்பான்- அதே நிலைதான் எங்களுக்கும்" என்றார்.

மில்லியன் கணக்கான மக்கள் வாழ்விற்கு அடிப்படைத் தேவையான தண்ணீருக்காக இத்தகைய பொருளாதார ஒட்டுண்ணிகளில் தங்கியிருக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கின்ற நிலையானது, சுதந்திரத்தின் பின்னர், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஆளும் வர்க்கமும் அதன் அரசியல் வாதிகளும் தொழிலாள வர்க்க, ஒடுக்கப்படும் மக்களின் மிகவும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முழுமையாக இலாயக்கற்றவர்கள் என்பதை நிரூபித்துள்ளது.

## ஈ.பி.டீ.பி. குண்டர்கள் கொழும்பு அரசாங்கத்துக்கு சேவகம் :...

2ம் பக்கத் தொடர்ச்சி

இறுதியாக இங்கிருந்து வாபஸ் பெற நேரிட்டதைத் தொடர்ந்து, அதன் உள்நாட்டு கையாளாக இயங்கியதும் மாகாண சபையில் மேலாதிக்கம் கொண்டிருந்ததுமான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஒரு அவஸ்த்தை நிலைமைக்குள் தள்ளப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எப். பின் பெருவாரியான தலைவர்கள் விடுதலைப் புலிகளின் ஆத்திரத்தில் இருந்து தலை தப்ப நாட்டை விட்டு ஓட நேரிட்டது. ஈ.பி.ஆர்.எல்.எப். இராணுவ பிரிவின் தலைவராக விளங்கிய டக்ளஸ் தேவானந்தா அந்த அமைப்பில் இருந்து விலகி ஈ.பி.டீ.பி. அமைப்பை ஸ்தாபிதம் செய்ததோடு விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொழும்பு ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான யுத்தத்துக்கு சேவையாற்றவும் முன்வந்தார்.

அவரது உள்நாட்டு ஆதரவின் அளவு கோலாக 1994 பொதுத் தேர்தல் முடிவுகள் விளங்கின. விடுதலைப் புலிகளின் வேண்டுகோளின் பேரில் பதிவு செய்யப்பட்ட 6 இலட்சம் வாக்காளர்களில் பெரும்பான்மையினர் தேர்தலைப் பகிஷ்கரித்தனர். இதன் பெறுபேறாக ஈ.பி.டீ.பி. ஒரு சில நூறு மொத்த வாக்குகளுடன் 9 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது. இது எவரையும் பிரதிநிதித்துவம் செய்யாது போனாலும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு ஒரு உறுதியான பாராளுமன்றப் பெரும்பான்மையை ஊர்ஜிதம் செய்வதில் ஈ.பி.டீ.பி. ஆசனங்கள் தீர்க்கமானதாக விளங்கியது. பாராளுமன்றத்தில் பொதுஜன முன்னணிக்கு ஆதரவு வழங்குவதன் பதிலுபகாரமாக ஈ.பி.டீ.பி.க்கு நிதியும், ஆயுதங்களும் கிடைத்தன.

1996ல் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஈ.பி.டீ.பி. திரும்பவும் அந்தப் பிரதேசத்தினுள் நுழைந்து கொண்டதோடு, சலுகைகளையும் பாதுகாப்பு நிலைமைகளையும் அனுபவித்தது. எவ்வாறாயினும் இது ஒரு நிச்சயமற்ற வாழ்க்கையாகவே உள்ளது: உள்ளூர் ஈ.பி.டீ.பி. அலுவலர்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி தமது சொந்தக் கூடுகளை இறக்கைகளால் காக்க முடிந்தது என்பதில் சந்தேகம் கிடையாது. ஆனால் அது அந்தப் பிராந்தியத்தின் மீதான இராணுவ ஆட்சிக்கு எதிரான தமிழ் மக்களின் எதிர்ப்பை முற்றாக ஒழித்துக் கட்டும் நடவடிக்கை சாத்தியமாக இருக்கும் வரை மட்டுமே தொடர முடியும். எவ்வளவுதான் வரையறுக்கப்பட்டதாக இருந்தாலும் ஈ.பி.டீ.பி. யின் ஆளுமைக்கு எதிரான எந்த ஒரு சவாலும் முழுக் கடதாசி வீட்டையும் வீழ்ச்சி காணச் செய்ய அச்சுறுத்தும். ஊர்காவற்துறையில் சோ.ச.க. ஒரு கடற்தொழிலாளர் சங்கத்தை அமைத்ததன் பின்னர், ஈ.பி.டீ.பி. தனது பிடி ஆட்டம் கண்டு போனதைக் கண்டது. கிராமவாசிகள் நம்பிக்கை பெற்றதோடு ஈ.பி.டீ.பி.யின் மிரட்டல் உருட்டல்களையும் மீறத் தொடங்கினர். அவ்வாறே அவர்களின் கூட்டம் பக்கம் ஒருவரும் தலைவைத்துப் படுக்காததுதான் தாமதம், உள்ளூர் ஈ.பி.டீ.பி. குட்டி மன்னர்கள் தமக்குத் தெரிந்த விதத்தில் அதற்கு எதிரான நடவடிக்கையில் இறங்கினர். அவர் தனது ஆயுதக் குண்டர்களைக் கட்டவிழ்த்து விட்டார். இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி ஈ.பி.டீ.பி. நடவடிக்கைக்கு எதிராக வன்மையாக ஆட்சேபம் தெரிவித்ததோடு அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தனது குண்டர்களின் பயமுறுத்தல்களையும் அட்டூழியங்களையும் பகிரங்கமாக கண்டனம் செய்ய வேண்டும் எனவும் கோரியது. எழுத்து மூலமான ஆட்சேபனைக் கடிதத்தை தேவானந்தா பெற்ற போதிலும் இன்னமும் அதற்குப் பதிலளிக்கவில்லை.

சோசலிச சமத்துவக் கட்சி யாழ்ப்பாணத்தில் உள்ள தனது அங்கத்தவர்களுக்கு அல்லது ஆதரவாளர்களுக்கு ஏதேனும் கெடுதி ஏற்படுமானால் அதற்கு தேவானந்தாவும் ஈ.பி.டீ.பி. தலைமையும் நேரடி பொறுப்புச் சொல்லியாக வேண்டும் எனக் கூறுவதோடு இலங்கையிலும் அனைத்துலகிலும் உள்ள தொழிலாளர், புத்திஜீவிகள் இளைஞர்களையும் ஏனையோரையும் இந்த அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான பாரதூரமான தாக்குதல்களை எதிர்த்துக் குரல் கொடுக்குமாறு வேண்டுகின்றோம்.

## சோ.ச.க. அனைத்துக் கட்சி கூட்டத்தில்...

1ம் பக்கத் தொடர்ச்சி

தமிழ் உழைக்கும் மக்களுக்கு அழிவுமிக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ள யுத்தத்தை மேலும் தொடரும் பொருட்டு ஆதரவை திரட்டுவதுமாகும். சோசலிச சமத்துவக் கட்சிக்கு இத்தகைய மோசடியான நடவடிக்கைகளில் கலந்துகொள்ள எவ்வித நோக்கமுமில்லை.

எவ்வாறு இருந்தபோதும் யுத்தம் தொடர்பான எமது கருத்தை தங்களுக்கு கூறிவைக்கின்றோம்: தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை ஒடுக்கும் நோக்கத்தையுடைய ஒரு பிற்போக்கான யுத்தத்தை நடாத்துவதற்காக ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டுள்ளதுடன், கோடிக் கணக்கான ரூபாக்கள் விரயமாக்கப்பட்டுள்ளது. நீங்கள் 1994ம் ஆண்டு பதவிக்கு வரும்போது சமாதானத்தைக்கொண்டு வருவதாக உறுதியளித்திருந்தீர்கள். அதற்கு மாறாக யுத்தம் தீவிரமயமாக்கப்பட்டுள்ளதுடன், சாதாரண மக்கள்மீது அதன் பளுவும் சுமத்தப்பட்டுள்ளது. முன்னைய பத்தாண்டுகளில் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திலும் பார்க்க கடந்த ஆறு வருடங்களில் கூடியளவு படையாட்களும் பொதுமக்களும் இறந்துள்ளனர். இந்த பிரச்சனைக்கு சிங்கள தொழிலாளர்களும், விவசாயிகளும் பொறுப்பல்ல. ஆனால் தற்போது அவர்கள் அதற்கான பாரிய செலவை மட்டுமல்லாது திகைப்படையச் செய்யும் அளவிலான உயிர் இழப்பையும், அதிகரித்துவரும் காயமடைந்தவர்களையும், அங்கவீனர்களையும் தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. மேலும் இராணுவ இயந்திரத்திற்கு வழங்குவதற்காக அடிப்படை தேவைகளுக்கான அரசாங்கச் செலவினத்தின் பாரிய வெட்டுக்களையும் சுமக்க வேண்டியுள்ளது. அவர்களின் அவசியம் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதும், அவர்களது தமிழ் சகோதர, சகோதரிகளுடன் சகோதரத்துவமான தீர்வை ஏற்படுத்துவதுமாகும்.

### தணிக்கை

இலங்கை முதலாளித்துவத்தின் நலன்களின் பேரில் நடாத்தப்படும் இந்த யுத்தத்திற்காக ஒரு படைவீரனும் உயிரிழக்ககூடாது; ஒரு ரூபாயும் செலவழிக்கப்படக்கூடாது.

உங்கள் உண்மையுள்ள,
விஜே டயஸ்
(பொதுச் செயலாளர், சோசலிச சமத்துவக் கட்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாற் திணைக்களத்தை கூட்டுத்தாபனமாக்கும் மசோதா: தொழிலாளர்களின் சட்டப்படி வேலை செய்யும் இயக்க அச்சுறுத்தலால் பின்தள்ளப்பட்டுள்ளது

டயனா ஸ்ரேகெஸ்
ஜூலை 04, 2000

இலங்கை பொதுஜன முன்னணி அரசாங்கம் தபாற் கூட்டுத்தாபன மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்பிப்பதை ஒத்திவைக்கத் தள்ளப்பட்டுள்ளது. இந்தப் புதிய மசோதா, இன்றைய தபால் திணைக்களத்தை ஒரு இலாபமீட்டும் கூட்டுத்தாபனமாக்குவதை நோக்கமாகக் கொண்டது. இது தபால் சேவையை பூரணமாக தனியார்மயமாக்கும் இலக்கிலான முதல் நடவடிக்கையாகும். இரண்டு வாராங்களுக்கு முன்னர் தபால் ஊழியர்கள் அவசரகால விதிகளையும் மீறி ஒரு சட்டப்படி வேலை செய்யும் பிரச்சார இயக்கத்தை ஆரம்பித்தனர். கடந்த வியாழக்கிழமை நள்ளிரவில் இருந்து தபால் தொழிற்சங்கங்கள் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக பயமுறுத்தியதையடுத்து ஜூலை 5ம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வர இருந்த மசோதா ஐந்தாவது தடவையாக ஒத்திப்போடப்பட்டது.

தபால், தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர, தபால் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தை கடந்த வியாழக்கிழமை வெளியிட்டார். தொழிற்சங்கங்கள் இந்த மசோதா அடியோடு வாபஸ் பெறப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்த போதிலும் அரசாங்கம் இந்த மசோதாவை சட்டமாக்குவதை ஒத்திப்போட சமிக்கை காட்டியதைத் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை கைநழுவ விட்டுவிட்டு பிரச்சார இயக்கத்தை இரத்துச் செய்தனர்.

அரசாங்கமும் தொழிற்சங்கத் தலைவர்களும் எந்த ஒரு மோதுதலையிட்டும் கவலை கொண்டுள்ளனர். இது ஒரு பரந்த அரசாங்க எதிர்ப்பு இயக்கமாக வெடிக்குமோ என அவர்கள் அஞ்சுகின்றனர். கூட்டுத்தாபனமாக்கும் திட்டத்தின் பேரிலான தபால் ஊழியர்களின் எதிர்ப்பு, சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும், நெருக்குவாரத்தின் பேரில் அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைகளுக்கு இருந்து வரும் ஒரு பரந்த அளவிலான எதிர்ப்பை பிரதிபலிக்கின்றது. நாட்டில் நீண்டுவரும் உள்நாட்டு யுத்தத்தில் பிரிவினைவாதத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈட்டிய ஒரு தொகை வெற்றியைத் தொடர்ந்து அரசாங்கம் கடந்த இரண்டு மாதங்களில் இராணுவச் செலவீனங்களை அதிகரித்துள்ளது. இது வாழ்க்கைத் தரத்தை மேலும் அதிகரித்துள்ளது.

கூட்டுத்தாபனமாக்கும் நடவடிக்கைக்கு எதிரான தபால் ஊழியர்களின் பிரச்சார இயக்கம், சம்பள உயர்வு கோரி இலட்சக்கணக்கான தோட்டத்துறை தொழிலாளர்கள் ஜூன் 11ம் திகதி ஆரம்பித்த இரண்டு மணித்தியால வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து ஆரம்பமாகியது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் பொதுஜன முன்னணி அரசாங்கம் நடைமுறைப்படுத்திய படுகொடூரமான அவசரகால விதிகளின் கீழ் இந்த வேலை நிறுத்தம் சட்டவிரோதமானது. இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் முதலாளிகளுடனும் அரசாங்கத்துடனும் ஒரு மோதுதலுக்கு இட்டுச் செல்வதற்கான சமிக்கைகள் தென்பட்டதைத் தொடர்ந்து சம்பள உயர்வு கோரி இடம்பெற்ற 9 நாள் பிரச்சாரத்தின் பின்னர் தோட்டத்துறை தொழிற்சங்கத் தலைவர்கள் தோட்ட முதலாளிகளுடன் ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

ஒரு மாதத்துக்கு முன்னர் தபால், தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கத்தின் (UPTO) உறுப்பினர்கள் அதன் நீண்டகால பொதுச் செயலாளரான என்.பி.ஹெட்டியாராச்சி, தபால் கூட்டுத்தாபன மசோதாவை தயார் செய்வதில் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பதவி நீக்கம் செய்தது. ஜூன் 4ம் திகதி நடைபெற்ற ஒரு பேராளர் மகாநாட்டில் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு அங்கத்தவர்களிடையே நிலவி வரும் பலத்த எதிர்ப்பை பிரதிபலிக்கும் விதத்தில் ஹெட்டியாராச்சியை பதவி நீக்கம் செய்வதற்கு ஆதரவாக 180 பேரும் எதிராக 15 பேரும் வாக்களித்தனர்.

இந்த புனர்நிர்மான வேலைத்திட்டத்தின் மொத்தச் செலவான 46 மில்லியன் டாலரில் 37 மில்லியன் டாலர்களை உலக வங்கி நிதியீட்டம் செய்கின்றது. இந்தப் புதிய கூட்டத்தாபனம் "வர்த்தக கொள்கை"களின் அடிப்படையில் நடாத்தப்படும் என அரசாங்க நிறுவன சீர்திருத்தக் கமிட்டியின் (Public Enterprises Reform Committee) பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தபால் திணைக்களம் சராசரியாக 10 மில்லியன் ரூபாக்கள் (125 மில்லியன் டாலர்கள்) நட்டமடைந்து வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னைய யூ.என்.பி. அரசாங்க காலத்தில் இலாபகரமான வர்த்தக தபால் சேவைகள் தனியார் தபால் சேவைகளிடம் கையளிக்கப்பட்டது. இவை தற்போதைய புதிய தபால் சேவைகளின் சட்ட மறுசீரமைப்பின் ஒரு பாகமாக சட்டரீதியானதாக்கப்படும்.

மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் புதிய கூட்டுத்தாபனம் "இலாபமற்ற" தபால் கந்தோர்களை இழுத்து மூடுவதோடு தபால் கட்டணங்களை பெருமளவில் அதிகரிக்கும். இதனால் பெரிதும் பாதிக்கப்படுவோர் இன்னும் கூட சீரான தபால் சேவை வசதிகளற்ற கிராமப்புற மக்களே. ஒரு "சுயேச்சை ஓய்வூதிய" திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தபால் சேவை தொழில்கள் ஒழித்துக்கட்டப்படும். எதிர்ப்புக்களைத் திசைதிருப்பும் பொருட்டு இந்தத் திட்டம் 10 ஆண்டுகளுக்கு குறைவான சேவைக் காலம் கொண்ட தபால் ஊழியர்களுக்கு "ஒரு விசேட ஓய்வூதிய திட்டத்தை" அமுல் செய்வதையிட்டும் ஆலோசித்து வருகின்றது.

இந்தத் திட்டத்தை தயார் செய்கையில் அரசாங்கம் தொழிற்சங்கங்களின் ஆதரவை திரட்ட திட்டமிட்டு செயற்பட்டு வந்தது. பிரதி தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் தேசிய தொலைக்காட்சி சேவைக்கு அளித்த ஒரு பேட்டியில் அரசாங்கம் "முன்னொருபோதும் இல்லாத விதத்தில் கிட்டத்தட்ட ஒரு வருடகாலமாக தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு அவர்களின் கருத்துக்களை அறியவும் அவர்களது பிரேரணைகளை மசோதாவினுள் சேர்க்கவும் முயன்று வந்ததாகவும்" தெரிவித்தார். கடந்த ஜூலையில் (1999) உலக வங்கியின் ஆரம்பிப்புக்களின் அடிப்படையில் அரசாங்கத்தினதும் உலக வங்கியினதும் தொழிற்சங்கங்களதும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு "முத்தரப்பு கமிட்டி"யை அது நிறுவியது. தபால் தொழிலாளர்களின் எதிர்ப்பைத் தவர்க்கும் வித்த்தில் மூல மசோதாவில் ஒரு தொகை வெளிப்பூச்சு மாற்றங்களைச் செய்தது.

1996ல் அரசாங்கம் முதற் தடவையாக இந்த கூட்டுத்தாபன பரேரணையை முன்வைத்த நாளில் இருந்து தபால் ஊழியர்கள் தனியார்மயமாக்கத் திட்டங்களை எதிர்த்துப் போராடும் தமது தயார் நிலையை வெளிக்காட்டிக் கொண்டனர். ஆனால் தொழிற்சங்கங்களோ இந்தப் பிரச்சார இயக்கத்தை ஒரு தொகை மறியல் போராட்டங்கள், சட்டப்படி வேலை செய்யும் இயக்கம், கூட்டங்கள், சட்டநடவடிக்கை சூழ்ச்சிகளுடன் நிறுத்திக் கொண்டன. எவ்வாறெனினும் இதே வேலையில் தொழிற்சங்கத் தலைவர்கள் மாற்றங்களை எதிர்க்காது விட்டுவிட்டு அவற்றின் சுமூகமான அமுலாக்கத்துக்கு துணை போகும் விதத்தில் "முத்தரப்பு கமிட்டி"யில் பங்கு கொள்வதன் மூலம் தம்மை தயார் செய்து கொண்டனர்.

மாஜி தொழிற்சங்கச் செயலாளர் இந்த முத்தரப்பு கமிட்டியில் கொண்ட ஈடுபாடு தொழிலாளர்களை ஆத்திரமடையச் செய்ததோடு ஏனைய தொழிற்சங்கத் தலைவர்களை அதற்கு எதிராகச் செயற்படத் தள்ளியது. ஆனால் அவரின் இடத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட உபாலி நவரத்ன- சோவினிச ஜே.வி.பி. அங்கத்தவர்- அதிலிருந்து ஒன்றும் வேறுபட்டவர் அல்ல.

நவரத்னவுடன் தொடர்பு கொண்டபோது அவர் கூறியதாவது: கூட்டுத்தாபனமாக்குவதை தொழிற்சங்கம் எதிர்க்கும் அதே நேரத்தில் தபால் சேவைகள் "மறுசீரமைக்கப்பட" வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவித்தார். "நிர்வாகம் திறமைமிக்கதாக செயற்படவேண்டும்; திணைக்களம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். முதலீடு உலக வங்கியில் ஒருந்தோ அல்லது வேறு எங்கிருந்து தான் வந்தாலும் நாம் எதிர்ப்பில்லை" எனக் குறிப்பிட்டார். புதிய தொழிற்சங்கத் தலைவர்கள் "திறமையான நிர்வாகம்" என்ற பேரில் தபால் ஊழியர்களின் தலையில் அதிகரித்த அளவிலான வேலைப் பளுவை கட்டியடிக்கத் தாம் தயாராக இருப்பதாக காட்டும் சமிக்கையை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளார். கடந்த வியாழக்கிழமை நவரத்ன, மசோதா அடியோடு வாபஸ் பெறப்பட வேண்டும் என வலியுறுத்தியதோடு புறமுதுகு காட்டினார்.

மேலும் நவரத்னவும் ஏனைய யூ.பீ.டீ.ஓ. (UPTO) தலைவர்களும் மாஜி செயலாளர் முத்தரப்பு கமிட்டியில் பங்குகொள்வதை ஆதரித்தவர்கள். ஹெட்டியாராச்சி கூட்டுத்தாபன மசோதாவை அங்கீகரித்த அதே வேளையில் தமது தொடர்புகளை அம்பலப்படுத்திக் கொண்டதை தொடர்ந்தே இவர்கள் அவரில் இருந்து விலகிக் கொண்டனர். ஹெட்டியாரச்சி பதிவி நீக்கம் செய்யப்பட்டதை ஊர்ஜிதம் செய்யக் கூட்டப்பட்ட பேராளர் மகாநாட்டில் இரு கோஷ்டிகளும் உடல்ரீதியான தாக்குதலில் இறங்கும் அளவுக்கு படுமோசமான வாய்த் தர்க்கங்களில் ஈடுபட்டனர். ஆனால் இந்தக் குழப்ப நிலைமையானது முழுத் தலைமையினதும் வரலாற்றையும் வேலைத்திட்டத்தையும் கடும் ஆய்வுக்கு உள்ளாக்குவதை தடுப்பதையே இலக்காகக் கொண்டிருந்தது.

குறிப்பாக யூ.பி.டீ.ஓ. தலைவர்கள் சோசலிச சமத்துவக் கட்சியின் (SEP) அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களிடையே துண்டுப் பிரசுரம் விநியோகிப்பதை தடுக்க முயன்றனர். பொலிசாருக்கு அழைப்பு விடுத்த இவர்கள் சோ.ச.க. வை அங்கிருந்து வெளியேற்றுமாறு கோரினர். ஆனால் அவர்களின் முயற்சி பலிக்கவில்லை. பல தொழிற்சங்க பேராளர்களும் சோ.ச.க. அங்கத்தவர்களிடம் தமது தலைவர்களிடம் நம்பிக்கையிழந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

தென்மாகாணத்தில் இருந்து இப்பேராளர் மகாநாட்டுக்கு வருகை தந்திருந்த தபால் அலுவலக பேராளர் ஒருவர் ஆத்திரத்துடன் பின்வருமாறு குறிப்பிட்டார்: "இரண்டு கன்னையும் நாய்ச் சண்டையில் ஈடுபட்டுள்ளன. எமது பிரச்சினைகளை கலந்துரையாட இடம் இல்லை. மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் அவசரகால சட்டத்தை பாவித்து இதை அமுல் செய்யப் பார்க்கிறது. இதற்கு எதிராக என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றி எவரும் பேசுவதாக இல்லை" எனத் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளி பின்வூருமாறு குறிப்பிட்டார்: "யுத்த நெருக்கடியை பயன்படுத்தி அரசாங்கம் அவசரகால விதிகளைத் திணித்துள்ளதோடு அத்தியாவசிய பொருட்களின் விலைகளையும் அதிகரித்துள்ளது. பொதுஜன முன்னணி கடந்த காலப்பகுதியில் செய்ய முடியாது போனவற்றை செய்வதில் ஈடுபட்டுள்ளது. இந்த நிலைமையிலேயே தபால் சேவை மசோதா கூட சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றிப் பேசாமல் இந்த தொழிற்சங்கத் தலைவர்கள் குத்துச் சண்டையில் இறங்கியுள்ளனர். தொழிற்சங்கம் அவர்களுக்கு ஒரு பெரும் சொத்தாகியுள்ளது".

மத்திய மலைநாட்டின் பேராதனையை சேர்ந்த மற்றொரு தபால் தொழிலாளி பின்வருமாறு குறிப்பிட்டார்: "எட்டு ஆண்டுகளாக இந்த தொழிற்சங்கத்தில் நான் அங்கத்தவனாக உள்ளேன். தலைமைப் பீடத்தின் இந்தக் கன்னைகளிடையே நான் எந்தவிதமான வேறுபாட்டையும் காணவில்லை. இரண்டும் ஒன்றையே செய்கின்றன. இவர்களிடையே எதையும் தெரிவு செய்வது கடினம்" என்றார். திணைக்களம் கூட்டுத்தாபனமாக மாற்றப்படும் போது விரக்தி காரணமாக சில ஊழியர்கள் தமது தொழில்களில். இருந்து விலகலாம். ஏனையவர்கள் இன்றைய உரிமைகளை இழக்க நேரிடலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் வெப் தளம் ஆரம்பம்

## http://www.wsws.org/tamil

உலக சோசலிச வலைத் தளம் (இணையம்) தமிழ் மொழியிலான கட்டுரைகளை மே தினம் (மே1) முதல் வெளியிட ஆரம்பித்துள்ளது என்பதை அறிவிப்பதில் சோசலிச சமத்துவக் கட்சி பெருமகிழ்ச்சியடைகின்றது.

தொழிலாளர் பாதையில் வெளிவரும் முக்கியமான கட்டுரைகள், செய்திகளையும், உலக சோசலிச வெப் தளத்தில் ஆங்கிலத்தில் வெளியாகும் கட்டுரைகளின் தமிழாக்கத்தையும் இதில் கண்டு கொள்ள்லாம். சமூக, பொருளாதார, அரசியல், மற்றும் வரலாற்று தத்துவார்த்த பிரச்சினைகள் தொடர்பான ஆய்வு கட்டுரைகள் இதில் இடம் பெறும்.

**சோசலிச சமத்துவக் கட்சி மாத இதழ்**

சந்தா தபால் கட்டணம் உட்பட

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.36 |
| இதழ் 6 | ரூ.68 |
| இதழ் 12 | ரூ.128 |
| இதழ் 24 | ரூ.248 |

விபரங்களுக்கு :
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10 தொ.பே. 682220

**சந்தாதாரர் ஆகுங்கள்**

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர்: ........................................

முகவரி: ........................................

கையொப்பம்: ........................ திகதி: ....................

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:

பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, மருதானை, கொழும்பு 10.
தொ.பே. 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90,1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் இல6, போதிராஜாராம மாவத, கொழும்பு10ல் உள்ள பிரின்ட் அன்ட் பிரின்ட் கிரபிக் லிமிடட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.